Registered as a News Paper

பக்கம் - 24

# ஈழநாதம்

விலை: 16.00

வெள்ளிநாதம் Weekly

நாதம்-15 வெள்ளி-38 19-25 நவம்பர் 2004



# திருமுக அறிமுகம்

அவர் ஆறுமுக நாவலரின் அடியொற்றி தமிழ் வளர்த்த பெருமகனார்.

சுமார் 172 வருடங்களுக்கு முன்னர் அவர் பிறந்த காலம் நம் மண் ஆங்கிலேயருக்கு அடிமைப்படத் தொடங்கியிருந்தது யாழ்ப்பாணம், சிறுப்பிட்டி என்ற இடத்தில் 12.09.1832 இல் அவர் தமிழுக்கு சேவை செய்யப்பிறந்தார்.

தந்தை வைரவநாதர்- தாயார் பெருந்தேவி இருவரும் தங்கள் செல்ல மகனுக்கு தாமோதரன் என பெயரிட்டுப் பேணி வளர்த்தனர். அவருடன் உடன் பிறந்தோர் ஏழுபேர்.

தந்தையார் ஒரு ஆசிரியர்.

தந்தையாரே தாமோதரனின் முதற்குருவானது அதிர்ஷ்டமேயாகும். மேனிலைக்கல்விக்கு குருவாக அமைந்தவர் சுன்னாகம் முத்துக்குமார நாவலர் என்னும் அறிஞர்.



1852 இல் கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் ஆசிரியராக பதவியேற்ற தாமோதரன் 1856 இல் பெர்சிவல் பாதிரியார் சென்னையில் ஆரம்பித்த 'தினவர்த்தமானி' பத்திரிகையின் ஆசிரியரானார். இந்தப் பேர்சிவல் பாதிரியார் தான் நாவலருக்கு ஆங்கிலமொழியை கற்பித்தவர்.

## சி.வை.தாமோதரம்பிள்ளை

1857 இல் சென்னை மாநிலக் கல்லூரித் தமிழாசிரியரானார். அதே ஆண்டில் சென்னைப் பல்கலைக்கழகத்தில் இணைந்து பட்டப்படிப்பை மேற்கொண்டு அப் பல்கலைக்கழகத்தின் முதல் B.A பட்டதாரியானார்.

தனது 39 வயதில் தனது சட்டத்துறைப் படிப்பை பூர்த்தி செய்தார். 50 ஆவது அகவையில் அரசுப் பணியிலிருந்து ஓய்வுபெற்றார். 1895 இல் அவருக்கு ராவ்பகதூர் பட்டம் வழங்கப்பட்டது.

1901 சனவரி முதல் நாள் அவர் இயற்கையெய்தினார்.

இது அவரின் வரலாற்றுக் குறிப்பு.

இனி அவரது தமிழ்ப்பணி- மற்றும் சாதனைக் குறிப்புகளைப்பார்ப்போம்.

அவரது தமிழ்ப்பணிகளில் முக்கியமானது அவரது தமிழ் நூல் பதிப்புப் பணியேயாகும்.

அவர் சுமார் 10க்கும் மேற்பட்ட தொல் தமிழ் நூல்களை ஏட்டுச் சுவடிகளில் இருந்து அச்சு வாகனம் ஏற்றிப் பதிப்பித்தார். இவற்றில் ஒன்றைத் தவிர ஏனைய அனைத்தும் அவரால் தான் முதலில் அச்சேற்றப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

தமிழ் அவரது உயிருணர்வில் கலந்துவிட்ட ஒன்றாக இருந்தது. அவர் அச்சிட்ட நூல்களில்:-

நீதி நெறிவிளக்கம், தொல் சேனாவரையம், வீரசோழியம் இறையனார் களவியல், தணிகைப் புராணம், கலித்தொகை, இலக்கண விளக்கம், சூடாமணி, தொல் பொருள், தொல் எழுத்து, தொல் சொல் ஆகியவை முக்கியமானவைகளாகும்.

தமிழ் நூல்களை அச்சிடும் பணியில் தன்னை ஈடுபடுத்தியமைக்கு அவர் கூறும் காரணவிளக்கம் பின்வருமாறு;

"நல்ல தமிழ் நூல்களுக்கு வந்த விதியையும்
கையெழுத்துப்பிரதிகளின் கதியையும் அவை
அடைந்திருக்கும் ஸ்திதியையும் பார்த்துச்
சகிக்க மாட்டாமையொன்றே என்னை இத்
தொழிலில் வலிப்பது.''

'இத் தொழிலில் திரவியலாபத்தை எவ்வாற்றானும் கருதி முயன்றிலேன் கைநட்டம் வராதிருப்பதொன்றே எனக்குப் போதும்' எனவும் தன்பணி குறித்து அவர் தெரிவித்துள்ளார்.

முதல் நூலாக 'நீதிநெறிவிளக்கத்தை' அவர் வெளியிட்டபோது அவருக்கு வயது 22 மட்டுமே... இந்த இளம் வயதிற்குள் அவர் தொன்மைத் தமிழ் ஏடுகளை தேடும் படலத்தில் இறங்கிவிட்டார் என்பது வியப்பாக உள்ளதல்லவா?

அவர்காலம்வரை எவரும் தமிழ் நூற்சுவடிகளைத் தேடி அச்சுவாகனமேற்றும் முயற்சியை தொட்டதே இல்லை என்பதே முக்கியமான விடயமாகும்.

தாமோதரனார் இதற்காக எடுத்த முயற்சியும், செய்த பணியுமே இன்று பல பழந்தமிழ் நூல்களைப் பாதுகாத்ததெனலாம்.

'பழந்தமிழ் இலக்கிய வெளியீட்டிற்கு கால் கொண்டவர் ஆறுமுகநாவலர், சுவர் எழுப்பியவர் தாமோதரம்பிள்ளை, கூரை வேய்ந்து நிலையம் கோலியவர் சாமிநாத ஐயர்' என்பர் தமிழ் அறிஞர்கள்.

தமிழ் நூற் பதிப்புகளின் தலைமகன் தாமோதரம்பிள்ளையவர்கள் என்றால் அதில் மிகையில்லை.

தாமோதரர் உழைத்தது தமிழை நிலைநிறுத்தவே.. ஆதலால் அவர் தமிழுள்ள அளவும் நிலைத்து நிற்பார்.

அட்சயன்

# தாரசாரம்

ஆண்கள் பெண்களைவிட வலிமையானவர்கள். அதனால் விரைவில் இறந்து போகிறார்கள். அத்துடன் ஆண்கள் தம்மை அழித்துக்கொள்ளும் தீயபழக்கங்களுக்கும் அடிமையாகிறார்கள். குடி, சூது, புகைபிடித்தல் போன்ற பழக்கவழக்கங்கள் முறையற்ற பாலியல் உறவுகள் போன்றவற்றால் பெண்களைவிட ஆண்களுடைய மரணவீதம் அதிகரிக்கிறது.

ஆண்களின் தொகை குறைவடையப் போரும், போர்ச்சூழலிலான படுகொலைகளும், இவற்றுக்குத் தப்பிய இடப்பெயர்வுகளும்கூட ஒரு வகையில் வலுவான காரணங்கள்தான். இளைஞர்களே பெரும்பாலும் இங்கு பாதிக்கப்படுகின்றனர். இது பிறப்பு விகிதாசாரம் ஏறக்குறைய ஆண்பெண் சமநிலையிலிருந்தாலும், இது இளைஞர்கள் தொகையில் சற்றுவித்தியாசமடைகிறது. ஆண்கள் தொகையில் ஏற்படும் இந்த ஏற்றத்தாழ்வு, சமுதாய அளவில் மாற்றங்களை ஏற்படுத்திக்கொண்டு வருகிறது.

இம்மாற்றத்தின் ஒருவிளைவாக, ஒருதாரத்துக்கும் அதிகமாகத்

## இதை என்னவென்று சொல்வது...?

திருமணம் செய்வதும் சாத்தியமாகிறது. சட்டமாவது தர்மமாவது.

பெண்ணியவாதிகளால் இக்காலப் பெண்களுக்கு வழங்கப்படும் அறிவுரை, "துடைத்தெறி"

"புதிய வாழ்க்கைக்கு உன்னைத் தயார் செய்"

"புதிய நட்பை ஏற்றுக்கொள்"

"நடந்ததை ஒரு விபத்தென மற"

இதை வேறு விதமாகச் சொல்வதானால் "வாழ்ந்து காட்டு"

சமுதாய மாற்றத்துக்கு அண்மைக்கால பரிணாம வளர்ச்சியும் காரணம். ஆம், மானுட நாகரிக வளர்ச்சியும் ஒரு காரணம்தான். ஆண்களின் பற்றாக்குறை ஒரு சட்டபூர்வமான நெறிமுறையான வாழ்க்கையைத் தீர்மானிக்க வேண்டியபோது பெரும் பணச் செலவையும் பொருள் வளத்தையும் நேர விரயத்தையும், பலருடைய உழைப்பையும் முடித்துவிடுகிறது. இவை எதுவுமில்லாமல் ஏராளமான திருமணங்கள் நடந்து முடிந்துவிடுகின்றன. இங்கே ஒரு ஆணும் பெண்ணும் இணைவதில் எந்தச் சட்டச் சிக்கலும் எழுவதில்லை. சமயாசாரமும் குறுக்கிடுவதில்லை.

ஆனால், அந்தத் திருமணம் இடைநடுவே தொடர்பற்றுப் போவதும் நீதிகேட்டு நீதிமன்றம் வருவதும் உண்டு.

இந்துக்கள் மட்டுமல்ல ஏனைய மதத்தவர்கூட திருமணத்துக்குப் பொருத்தம் பார்ப்பதுண்டு. தாலிப்பொருத்தம் முக்கியம் என்பார்கள். என்னுடைய நண்பரொருவர் கூறினார் எனக்கு எட்டுப்பிள்ளைகள் எல்லோரும் விரும்பியவர்களைத்தான் திருமணம் செய்தார்கள். இரண்டு பிள்ளைகளுக்கு நாங்கள் பேசி முடிவுசெய்து முறைப்படி பொருத்தம் பார்த்து, பொன்னுருக்கி, தாலிசெய்து கட்டினோம். மற்றவர்கள் தாமே சேர்ந்துகொண்டார்கள். பதிவுத்திருமணம் மட்டும்தான் என்று. "சரி எல்லோரும் மகிழ்ச்சியாக, வாழ்கிறார்கள் தானே..." என்றேன். பொருத்தம் பார்த்துச் செய்த பிள்ளைகள் இருவருமே வேறு வேறு சந்தர்ப்பங்களில் தற்கொலை செய்துகொண்டார்கள். என்றார் வேதனையோடு. இது உண்மை.

சீதனப்பேய் உச்சத்தில் நிற்பதற்கும் ஆண்கள்தான் காரணம். பற்றாக்குறையைப் பற்றி ஒரு கிராமிய அளவில் கணக்கெடுத்தால் கூட திருமணமாகாத ஆண்களை விடப்பெண்கள் அதிகம் காணப்படுகின்றனர். பெண்களின் மனநிலை சோர்வடைந்து போகிறது, எங்களுக்குத்திருமணமே ஆகாது என்கிற மனநிலைக்கு அவர்கள் வலிந்து தள்ளப்படுகிறார்கள். நவீனகாலப்போக்கில் பெண்பிள்ளைகள் கல்விகற்று உழைக்க ஆரம்பித்துவிடுகின்றனர். அவர்களே பலவிதமான ஆண்களைச் சந்திக்கப் பழக முடிகிறது. என்றாலும் பெற்றோர்களின் நெருக்குதல்களும் இவர்களுக்கு ஏற்படுகிறது. பெண்பிள்ளையின் சம்பளப்பணத்தில் வீடு கலகலப்பாக மாறிவிடுவதால், பிள்ளையை ஒரு பணங்காச்சி மரமாக நினைத்து, "இப்பதானே உழைக்கிறாள். அவளுக்கென்ன அவசரம்," என்று கூறும் பெற்றோர்கள் அதிகரித்து வருகின்றனர். 'அவளுக்கென்ன அவசரம்' என்று அவளுடைய இளமை கழிந்துபோக முதிர் கன்னிகளாக இருந்து வருந்தும் பெண்கள் உயர்பதவிகளில் இருப்பதை நாம் காண்கிறோம். இந்தச் செல்விகள் உழைத்துச் சேர்த்த சொத்துகளைப் பின்பிறந்த சகோதரிகள் பயன்படுத்தி வாழ்வதைக்காணலாம்.

இந்த நிலையிலிருந்து தம்மைக்காத்துக்கொள்ளப் பல பெண்கள், ஏதோ கிடைத்தவனோடு வாழ்ந்து பார்க்கலாம் என்ற கிறுக்குத்தனமான முடிவுக்கு வந்து விடுகின்றனர். ஏன் ஏற்கெனவே திருமணமானவன் எனத் தெரிந்து ஒருவனிடம் தன்னை ஒப்படைத்த பெண் இப்படிச் சொன்னாள். அவருடைய உழைப்பு எனக்கு வேண்டாம். அவருடைய குடும்பத்தையும் அவர் விடவேண்டாம். எனக்கு வருமானம் உண்டு. அது எனக்குப் போதும் அவர் என்னிடமும் வந்து போனால் போதும். எனக்கும் ஒரு துணை உண்டு என்பது ஊரவருக்குத் தெரிந்தால் சரி"

ஒரு கயிறுபின்னும் தொழில் செய்யும் கிராமம். அங்கே ஒருவரைச் சந்திக்க அவர் வீட்டுக்குச் சென்றேன். என்னைக் கண்டதும் முகம் மலர வரவேற்ற ஒரு பெண், "உட்காருங்கோ அவர் உதில கடைக்குப் போட்டார் கூட்டி வாறன்" என்ற...வாறு வெளியே ஓடினாள். உள்ளே ஒரு பெண் தேநீர்தயாரித்தாள். நான் வெறுமனே உட்கார்ந்திராமல் "வெளியால போறது அவற்ற பெண்சாதிதானே" என்று கேட்டேன் "ஓ அவ இளையவ" என்றாள் அவள், "இளையவ" என்றால்,

"நான் மூத்ததாரம்"

"அப்ப ரெண்டு தாரமோ...."

"இல்ல இவா மூண்டாந்தாரம், ரெண்டாவது நேற்றுத் தாய் வீட்ட போனவா...இண்டைக்கு வருவா...."

"அடக்கடவுளே" நான் வியந்துபோய் நிற்க அவர் வந்தார். "என்ன க...ணை-புதினமாக் கிடக்கு" என்றேன்.

"இல்லாட்டிக் கட்டாது எங்கட வேலையளுக்கு ஆள் துணை தேவை. இதுகள் ஆளும் பேருமா தொழிலச் செய்யிறதால வயித்துப் பசியில் லாமப் போகுது..." என்றார்.

"பிள்ளையள் ?"

"மூத்ததுக்குரெண்டு, மற்றவை ஒவ்வொண்டோட விட்டிட்டினம். "போட்டி பொறாமை வராதோ...." "இல்லை இவளநாளும் இல்லை. இனியும் வராது." என்ன அப்பிடி நிச்சயமாச் சொல்லுறியள்'' "தேவைக்கு மேல உழைக்கிறதில்லை. தனிப்பட சொத்துச் சேர்க்கிறது மில்லை. அவரவர் உழைப்பு அவரவர் கையில. சாப்பாட்டுக்கு இவளவெண்டு தருவினம்.... பிறகென்ன?

இப்படிப்பேசிக்கொண்டேயிருக்க, அயலிலிருந்து ஒரு பெண் வந்து என்னருகே குந்தினாள். என்னை ஆதுரமாக நோக்கியவள் "எங்கயிருந்து வாறியள்" என்றாள். நான் பதில் பேசாமல் "நீங்களார்"? என்று கேட்க சற்றும் தயங்காமல், சந்தைக்க பாய்விக்கிற ராசனைத் தெரியுமோ.... "அவற்ற நாலாவது மனிசி" என்றார் நான் திகைத்துப் போனேன் இரண்டு பேர் தறியடிக்கினம் நான் புல்லுவெட்டப் போவன். சிலநேரம் மற்றவா போக நான் சமையலப் பாப்பன் "பிள்ளையள்" என்னையறியாமல் வந்தகேள்வியது.

''எனக்கு ரெண்டுபேர் முடிச்சிட்டினம்" என்றார். வயது ஒரு முப்பத்தைந்து நாற்பதுவரும். என்றாலும் கேட்டேன். நாற்பத்து இரண்டு என்றார். அப்படியே "ராசன் எனக்கு நாலுவயசு சின்னன்'' என்றார்.

அண்ணன் என்னடா தம்பி என்னடா அவசரமான உலகத்திலே. சட்டம் என்னடா தர்மம் என்னடா காசில்லாதவன் குடும்பத்திலே. என்ன பிள்ளையார் பிடிக்க, குரங்காப் போகுதோ?...

மாயா






நிலாந்தன்

யசீர் அரபாத் கடைசியாகக் கொழும்புக்கு வந்தபோது அவரை கொழும்பு மையமீடியாக்கள் பேட்டி கண்டிருந்தன. இதன்போது புலிகளைப்பற்றியும் கேட்கப்பட்டது. புலிகளுக்கும் பலஸ்தீன விடுதலை இயக்கத்திற்கும் இடையே வேறுபாடுகள் ஏதும் உண்டா? என்றும் கேட்கப்பட்டது அதற்கு அவர் சொன்னார் "பெரிய பெரிய வேறுபாடுகள் உண்டு" என்று.

பெரிய வேறுபாடுகள் என்று அவர் எதைக்கருதினாரோ தெரியவில்லை. ஆனால், கடந்த மூன்று ஆண்டுகளாக இஸ்ரேலின் முற்றுகைக்குள் அவர் சிக்குண்டிருந்த வேளை தற்கொடைக்குண்டுத்தாக்குதல்களே பலஸ்தீன விடுதலைப்போராட்டத்தின் பெரும்போக்கான யுத்த உபாயமாக இருந்துவந்துள்ளன. ஹமாஸ் இந்த யுத்த முறையை புலிகளிடமிருந்தே எடுத்திருக்கலாம் என்றே பரவலாக நம்பப்படுகின்றது.

அரபாத் இந்த யுத்தமுறையை வெளிப்படையாகக் கண்டித்தார். ஆனால், மறைமுகமாக ஹமாஸை ஊக்குவித்தார். இது காரணமாகவே அவர் இறந்தபோது இஸ்ரேல் சொன்னது "சமாதான முயற்சிகளில் இனிமேல் புதிய திருப்பங்கள் உண்டாகும்" என்று. அதாவது அரபாத் ஒரு புறம் பேச்சுவார்த்தையை நடத்திக் கொண்டு இன்னொருபுறம் ஹமாஸை காட்டிக் கொடுக்காமல் இருக்கிறார் என்று இஸ்ரேல் குற்றம் சாட்டுகிறது. சமாதான உடன்படிக்கையின் விளைவாக கிடைத்த பலஸ்தீன அதிகார சபையின் வளங்கள்தான் பெருமளவுக்கு ஹமாஸிற்குக்கசிந்து சென்றன என்றும் இஸ்ரேல் நம்புகிறது. அதாவது அரபாத் யுத்தத்தையும் சமாதானத்தையும் சமாந்தரமாகக் கொண்டுபோக முற்பட்ட ஒரு ஜனவசியம்மிக்க தலைவராய் இருந்தார் என்று இஸ்ரேல் அமெரிக்கா போன்ற நாடுகள் குற்றம் சாட்டுகின்றன.

இது உண்மைதானா? அரபாத் சமாதானத்திற்கும் யுத்தத்திற்கும் இடையே கிழிபடும் ஒரு தலைவராகவா இருந்தார்? ஆம். அது உண்மைதான். ஆனால், இதை இப்படி எழுதும் போது அதன் அர்த்தம் இந்த பத்தி இஸ்ரேலின் நோக்கிலிருந்து அரபாத்தைப்பார்க்கிறது என்பதல்ல. எனவே அரபாத் எப்படி யுத்தத்திற்கும் சமாதானத்திற்கும் இடையே கிழிபட்ட ஆனால் ஜனவசியம்மிக்க ஒரு தலைவராகக் காணப்பட்டார் என்பதை இனிப் பார்ப்போம்.

அரபாத்தின் பலம் எதுவோ அதுதான் அவருடைய பலவீனமும். இதை இன்னும் திருத்தமாகச் .சொல்லப்போனால் பலஸ்தீனர்களின் பலம் எதுவோ அதுவே அவர்களுடைய பலவீனமும் எனலாம். ஆயின் எது அவர்களுடைய பலம்?

சர்வதேச சமூகத்தின் ஆதரவுதான் அவர்களுடைய பிரதான பலம். இந்தப்பலம் காரணமாகவே தமது சொந்தப்பலத்தைப் பெருக்கிக் கொள்ளத்தவறிய ஒரு போராடும் இனம் அது. உலக நாடுகளின் ஆதரவு தனக்கு உண்டு என்ற ஆறுதலும் மயக்கமும் அவர்களை தமது சொந்தப் பலத்தைப் பெருக்கிவிடாதபடி செய்துவிட்டன என்பதே உண்மை. அவர்களிடம் ஒரு பலமான இராணுவமோ அல்லது விடுதலைப்பிரதேசமோ முன்பு இருக்கவில்லை. பெருமளவுக்கு பின்தளங்களில் தங்கியிருந்த போராட்டம் அது. பின்தளங்கள் பொறியப் பொறிய தலைமையும் இடம்பெயர்ந்து கொண்டே இருந்தது. அவர்கள் பலமென்று நம்பிய உலக நாடுகளின் ஆதரவும் கூட. குறிப்பாக அரபுநாடுகளின் ஆதரவு பல சமயங்களில் நிச்சயமற்றதாகவும் இருந்தது. அரபுக்களுக்கு இடையில் காணப்பட்ட ஐக்கியமின்மையால் பலசமயங்களில் பலஸ்தீனர்களின் போராட்டம் காட்டிக்கொடுக்கப்பட்டது.

அதாவது அவர்கள் தமது பலம் என்று நம்பியதே மெய்யான அர்த்தத்தில் ஒரு நிலையான தளம்பாத பலமாக இருக்கவில்லை.அதே சமயம் அந்த மாயப் பலத்தை நம்பி அவர்கள் தமது சொந்தப் பலத்தையும் பெருக்கிக்கொள்ளவில்லை.

உலகநாடுகளின் ஆதரவு என்ற அந்த மாயப்பலம் எப்படி ஒரு தொகுதி பலஸ்தீனர்களை சோம்பேறிகளாக, பொறுப்பற்றவர்களாக மாற்றக்காரணமாக இருந்தது என்பதை எண்பதுகளில் இந்தியாவிலிருந்து வந்தவர்கள் சொல்வதுண்டு. இந்தியாபோன்ற நாடுகளின் ஆதரவு காரணமாக இந்நாடுகளில் பலஸ்தீன மாணவர்கள் கல்விகற்பதற்கு சலுகைகள் பல வழங்கப்பட்டன. இந்தச்சலுகைகளை அனுபவித்தபடி ஒரு தொகுதி பலஸ்தீன மாணவர்கள் எப்படி பொறுப்பற்றுத் திரிந்தார்கள் என்பதை அந்நாட்களில் இந்தியாவில் கல்விகற்ற ஈழத்தமிழ் மாணவர்கள் சொல்வதுண்டு.

இப்படியாக உலக நாடுகளின் ஆதரவு என்ற ஒரு மாயப்பலம் காரணமாக பலஸ்தீனர்கள் தமக்கேயான சொந்தப் படைத்துறைக் கட்டமைப்பை கட்டியெழுப்பத்தவறினார்கள். இதனால் ஒரு திட்டவட்டமான விடுதலைப்பிரதேசத்தை தொடர்ச்சியாக பேண அவர்களால் முடியவில்லை. முதலில் ஆயுதப்போராட்டம் செய்தவர்கள் எண்பதுகளில் சிறுவர்களிடம் கற்களைக்கொடுத்து அவர்களை தெருக்களில் இறக்கினார்கள். ஆயுதப் போராட்டம் வெற்றி பெறாத ஒருவித கையறு நிலையிலேயே சிறுவர்களிடம் கற்களைக் கொடுத்து தெருவில் இறக்கும் போராட்டம் தோன்றியது. இதுவும் பயன்தராத போதே தற்கொடைக் குண்டுதாரிகள் தெருவில் இறங்கினார்கள். இதுகூட ஒருவித கையறு நிலையில் அல்லது இயலாக்கட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுதான் என்று கூறத்தக்க விதத்திலேயே அங்கு நிகழ்ந்துவரும் தாக்குதல்கள் காணப்படுகின்றன.



பலஸ்தீனத்திலும் ஈராக்கிலும் தற்கொடைக் குண்டுத்தாக்குதல்கள் அவற்றுக்கேயான அருமையோ புனிதமோ பேணப்படாது மேற்கொள்ளப்படுவதை இங்கு சுட்டிக்காட்டவேண்டும். அற்ப இலக்குகளை குறிவைத்தும் எதிரியை விடவும் தமது சொந்தமக்களை அதிகம் பலியிடும் விதத்திலும் அங்கு மேற்கொள்ளப்பட்டுவரும் தாக்குதல்களில் தற்கொடைக் குண்டுதாரிகள் குறிப்பிடத்தக்க அளவிற்கு வீணாக்கப்படுகிறார்கள் என்றே சொல்லவேண்டும்.

பலஸ்தீனத்தில் நிகழும் இந்த கைய தாக்குதல்கள் அரபாத்தின் கையை மீறி நிகழ்ந்தன என்பதை விடவும் அவர் அவற்றை கட்டுப்படுத்தவிரும்பவில்லை என்பதே சரி. அவர்செய்துவந்த சமாதானம் பலஸ்தீனர்களுக்கு எதையும் பெற்றுத்தராத ஒரு நிலையில் பலஸ்தீனர்களின் விரக்தியையும் கோபத்தையும் பிரதிபலித்த ஹமாஸ் போன்ற கடும்தீவிரவாத அமைப்புக்களைக் கட்டுப்படுத்துவது என்பது பொதுப்படையான பலஸ்தீன எதிர்ப்பின் குறியீடாக காணப்பட்ட ஒரு தலைவரால் முடியாத காரியம்.

இதுதான் அரபாத் கையாலாகாத சமாதானத்தை அவரால் கைவிட முடியவில்லை. அப்படிக் கைவிட்டால் உலக நாடுகள் மத்தியில் அவரைப்பற்றியிருக்கும் மிதவாதி என்ற படிமம் நொருங்கிப் போய்விடும். அதே சமயம் தீவிரவாதிகளை மறைமுகமாகவேனும் ஆதரிக்காவிட்டால் தனது சொந்தச் சனங்கள் மத்தியில் அவருக்கு இருக்கும் ஜனக்கவர்ச்சி மிக்க படிமம் நொருங்கிப்போய்விடும். இந்த இரண்டு படிமங்களையும் கடைசி வரை இயன்றளவிற்குப் பாதுகாப்பதற்கான ஒரு போராட்டமாகவே அவருடைய அரசியல் வாழ்வு அமைந்துவிட்டது.

உலகத்தின் மனச்சாட்சி என்ற ஒன்று நடைமுறை அரசியலில் இல்லை என்பதே பலஸ்தீன விடுதலைப்போராட்டத்திடமிருந்தும் யசீர் அரபாத்திடமிருந்தும் போராடும் இனங்கள் கற்றுத்தெளிய வேண்டிய ஒரு பாடமாக இருக்கிறது. ஜேர்மனிய தத்துவ ஞானி நீட்ஷே ஒரு முறை கூறினார் "எது உண்மை...? அதுதான் அதிகாரம்" என்று. பலஸ்தீனர்களின் விடுதலைப்போராட்டத்தைப் பொறுத்தவரை உலகநாடுகளின் சமூகம் எனப்படுவது இதைத்தான் நிரூபித்திருக்கிறது.

யசீர் அரபாத் முதல் முதலாக ஐக்கிய நாடுகள் சபைக்கு சென்றபோது ஆற்றிய உரையில் "எனது ஒரு கையில் ஒலிவ் மரக்கிளையும் இன்னொரு கையில் துப்பாக்கியையும் கொண்டு வந்திருக்கிறேன்... நான் எதைக் கைவிடவேண்டும் என்பது உலக சமூகத்தின் கைகளிலேயே தங்கியிருக்கிறது" என்ற தொனிப்படக் கூறியிருந்தார். இப்படிச் சொல்லி சுமார் மூன்று தசாப்தங்களின் பின் கடந்த கிழமை அவர் இறந்தபோதும் அவருடைய ஒரு கையில் அதே துப்பாக்கியும் இன்னொரு கையில் அதே ஒலிவ் மரக்கிளையும் இருந்தன என்பதே அவர் உலகத்தின் மனச்சாட்சிக்கு விட்டுச்சென்ற மிகக்கசப்பான ஒரு செய்தி.

***சர்வதேச சமூகத்தின் ஆதரவுதான் அவர்களுடைய பிரதான பலம். இந்தப்பலம் காரணமாகவே தமது சொந்தப்பலத்தைப் பெருக்கிக் கொள்ளத்தவறிய ஒரு போராடும் இனம் அது. உலக நாடுகளின் ஆதரவு தனக்கு உண்டு என்ற ஆறுதலும் மயக்கமும் அவர்களை தமது சொந்தப்பலத்தைப் பெருக்கிவிடாதபடி செய்துவிட்டன என்பதே உண்மை. அவர்களிடம் ஒரு பலமான இராணுவமோ அல்லது விடுதலைப்பிரதேசமோ முன்பு இருக்கவில்லை. பெருமளவுக்கு பின்தளங்களில் தங்கியிருந்த போராட்டம் அது. பின்தளங்கள் பொறியப் பொறிய தலைமையும் இடம்பெயர்ந்து கொண்டே இருந்தது. அவர்கள் பலமென்று நம்பிய உலக நாடுகளின் ஆதரவும் கூட. குறிப்பாக அரபுநாடுகளின் ஆதரவு பல சமயங்களில் நிச்சயமற்றதாகவும் இருந்தது. அரபுக்களுக்கு இடையில் காணப்பட்ட ஐக்கியமின்மையால் பலசமயங்களில் பலஸ்தீனர்களின் போராட்டம் காட்டிக்கொடுக்கப்பட்டது.***

# நறுக்கென...

## சில கேள்விகளும் சில பதில்களும்



கேள்வி-நாட்டில் மிக இலாபகரமான தொழில் எது?
பதில்-உதுக்கேன் பெரிய கண்டுபிடிப்பெல்லாம் செய்வான். சனாதிபதி சந்திரிகாவே கூறிவிட்டார்.
கேள்வி- அப்ப...அவ கூறும் தொழில்தான் என்ன?
பதில் எந்தத் தகைமையும் இல்லாமல் பணம் சம்பாதிக்கும் வழி அரசியல் எண்டெல்லோ கூறியிருக்கிறா?
கேள்வி- அரசியல்ல நல்ல கொழுத்த இலாபம்தான் கிடைக்குதுபோல.
பதில்- அம்மா என்ன சும்மாவே சொல்லுவா?
கேள்வி-இலாப நட்டத்தைப்பற்றி அம்மாட்டக் கேட்டுத்தெரிஞ்சு கொள்ளலாம்.
பதில்-அம்மாவின்ர பதவிக்காலம்2005 வரையா? 2006 வரையா என்பது கூட உந்த அரசியல் வியாபாரத்தில அம்மாவுக்கு கிடைக்கிற இலாபத்தை வைச்சுத்தான் என்கிறீர்களா?
கேள்வி-தேனெடுக்கிறவன் புறங்கைய நக்காமலா விடுவான் எண்டு தமிழில இருக்கிற பழமொழியை மறந்து போகக் கூடாது .என்கிறீர்களா?
பதில்-புறங்கையென்ன தேனீயையே விழுங்கின ஆள் அல்லோ அம்மா.
கேள்வி - அது...சரி...அம்மா ஏன் உப்ப உந்த கண்டுபிடிப்பை செய்தவ?
பதில்- எல்லாம் எட்டி எட்டிப்பார்த்து எட்டாமல்போகப் போகுதெண்டாப் போல சொல்லுறதில்லையே "உந்த பழம் புளிக்கும் எண்டு, அது போலத்தான் உதுவும்.
கேள்வி- சரியாச் சொன்னியள் அம்மாவுக்கு பழம் புளிக்கத் தொடங்கிட்டுது போல.

## அடிக்கடி முழங்கும் அனுரா பண்டாரநாயக்க



என்ன அடிக்கடி அனுரா பண்டாரநாயக்க சண்டைக்கும் தயார், சமாதானத்திற்கும் தயார் என முழங்கி வருகின்றார்.

எல்லாம் 2005ஆம், 2006ஆம் ஆண்டு படுத்தும் படாதபாடுதான் பாருங்கோ.

ஓகோ! சனாதிபதித் தேர்தல் வருகிதல்லோ அது குறித்து தன்னை ஒரு துட்டகைமுனுவாகவோ ஜே.ஆர். ஜெயவர்த்தனவாகவோ தேவைப்படுகிறார் போலும்.

அது சரி சண்டையெண்டு ஒண்டு வந்தால் அனுரா என்ன செய்வார். அவரால் என்னதான் செய்யமுடியும். ஏற்கனவே இந்த கோமாளி இளவரசருக்கு தன்னை சுமந்தே நடக்க முடியவில்லை. பிறகு எப்படி இந்த நாட்டை சுமந்து நடக்கப்போறார். எல்லாம் சிங்கள மக்களின் தலையெழுத்து

## சந்திரிகா தண்ணி காட்டினார் ஐ.தே.க. என்ன செய்தது?



சமாதானத் தூதுவர்களுக்கு சனாதிபதி சந்திரிகா தண்ணி காட்டுகிறார் என்று கூறியுள்ளார் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரட்ண.

உலகத்தலைவர்களை வாருங்கள் என்று அழைத்து அவர்களை அலைக்கழிக்கச் செய்து இழுத்தடிக்கிறார் என்றும் கூறியுள்ளார்.

சனாதிபதி சந்திரிகா என்ன சிங்களத் தலைவர்கள் எல்லோருமே இதைத் தான் செய்கிறார்கள்.

தமிழ் மக்களுக்கு தண்ணி காட்ட முயன்று முடியாமல் போக இத்தனை வருடங்களும் தமிழர்களிடம் வாங்கிக் கட்டினார்கள்.

தமிழ் மக்களின் பிரச்சினை தொடர்பில் சனாதிபதி சந்திரிகா காட்டிய தண்ணியை நம்பித்தான் அமெரிக்கா பிரிட்டன், நெதர்லாந்து, அவுஸ்திரேலியா என இந்த நாடுகள் எல்லாம் புலிகள் இயக்கம் மீது தடை விதித்தன.

புலிகள் ஏதோ சமாதானத்துக்கு விரோதமானவர்கள் என்பது போலவும் நடந்துகொண்டார்கள். ஆனால் புலிகள் ஒன்றும் சமாதானத்துக்கு எதிரானவர்கள் இல்லை என்று கூறிய போதும் இந்த உலகம் சந்திரிகா கூறியதைதான் நம்பியது.

எல்லாம் பட்டுத்தான் தெளிய வேண்டும் என்று ஒற்றைக்காலில இந்த உலகம் விரும்பியதற்கு பரிசை சனாதிபதி சந்திரிகா கொடுக்கிறார்.

பாவம் பீற்றர்சன், ஹெல்கிசன், சொல்ஹெய்ம், அஹாசி, ஆர்மிரேஜ் என மாறி மாறி வந்து தான் பார்க்கினம். ஆனால், அம்மா தண்ணி காட்டுறதில மட்டும் கொடி நாட்டுறார்.

எல்லாம் எப்பதான் அம்மா காட்டுற தண்ணியிலயிருந்து இவையள் விடுபடப் போயினம்.

சமாதானத்துக்கு மட்டுமல்ல உந்தக் கெதி. பாவம் சந்திரிகா அம்மாவை நம்பி வாக்களித்த சிங்கள மக்களுக்கும் சேர்த்துத்தான் உந்த வேலையை செய்து கொண்டிருக்கிறா.

அது சரி பதினேழு வருடமாக ஆட்சியில் இருந்தமெண்டு ஐக்கிய தேசியக் கட்சிக்காரர் மார் தட்டுறவையல்லோ அந்த பதினேழு வருசமும் இவையளும் என்ன செய்தவை.

இல்ல தெரியாமல்தான் கேட்கிறன்.

## டிரோனுக்கு சந்திரிகா கொடுக்கும் பிச்சை



வடக்கு கிழக்கு மாகாண புதிய ஆளுநராக முன்னாள் ஐக்கிய தேசிய கட்சியின் வெளிவிவகார அமைச்சராக இருந்த டிரோன் பெர்னாண்டோவை சனாதிபதி சந்திரிகா நியமிக்கலாம் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

வடக்கு கிழக்கு மாகாண ஆளுநராக இருந்த முன்னாள் இராணுவ தளபதிகளில் ஒருவரான அசோக ஜெயவர்த்தனாவுக்கு அவரின் துறை சார்ந்தே அதாவது இராணுவத்துறைக்கு அதாவது பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் பதவிக்கு நியமிக்கப்படுவதையடுத்து டிரோனுக்கு இந்தப் பதவி.

மேஜர் ஜெனரல் அசோக ஜெயவர்த்தனாவுக்கு பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இருந்த சிறில் ஹேரத்தின் வெற்றிடத்தை நிரப்பும் வேலை. டிரோனுக்கு அசோக ஜெயவர்த்தனாவின் வெற்றிடத்தை நிரப்பும் வேலை.

சனாதிபதி சந்திரிகா அம்மையாரின் ஆட்சியில் வெற்றிடங்களை நிரப்பும் வேலையைத்தவிர வேறுஎன்ன வேலைதான் இவர்களுக்கு கிடைக்கப்போகிறது.

எப்போதோ ஜே.ஆர் ஜெயவர்த்தனாவும் ராஜீவ்காந்தியும் உருவாக்கி விட்ட வடக்கு கிழக்கு மாகாண சபைக்கும் அந்த சபையின் ஆளுநர் கதிரைக்கும் பாரமாகப் போகிறார்.

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் மொறட்டுவத் தொகுதியில் கோட்டைவிட்டுவிட்ட டிரோனுக்கு ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் கட்சியிலிருந்தே கல்தா கொடுக்க, பாவம் மனுசன் வெறுத்துப்போய் ஏதேதோ அறிக்கையெல்லாம் ரணிலுக்கு எதிராக விடுத்து ஒரு மாதிரி சந்திரிகாவின் நிழலில் ஒதுங்கிக்கொண்டார்.


வாலாட்டியதெதற்கோ... என்னவோ எறிவது போல சந்திரிகா இப்போது இந்த பதவியை எறியப் போகிறார் போலுள்ளது.

அது சரி டிரோன் பெர்னாண்டோ ஐக்கிய தேசிய கட்சியில் இருக்கும் போது அடிக்கடி வாய் பிதற்றுவாரே! அதுதான் ஐக்கிய நாடுகள் சபையின் செயலராக போட்டி போடப் போவதாக அதற்கு என்ன நடந்தது?

பாவம் டிரோன் உலகத்துக்கே பொதுச்செயலாளராக வரவிரும்பியவருக்கு சந்திரிகா இவ்வளவு சின்னப் பதவியை கொடுத்திருக்கக்கூடாது...

அதேநேரம் சந்திரிகாவுக்கே ஐ.நா சபைக்கு செயலாளராக வரும் கனவு இருப்பதாக தகவல் கசியும் போது டிரோன்தான் என்னசெய்வார்.

## ஜே.வி.பி. என்ன கூறுகிறது ஜே.வி.பி. என்ன செய்கிறது



அரசு சமர்ப்பித்துள்ள வரவு செலவுத் திட்டத்தில் சர்வதேச நிதி நிறுவனங்களின் தலையீடு இருந்தால் எதிர்ப்பு போராட்டம் நடத்துவோம்.

அரசு சமர்ப்பித்துள்ள வரவு செலவு திட்டத்தில் வாழ்க்கைச் செலவு புள்ளி உயர்வுக்கு ஏற்ப சம்பள உயர்வு வழங்கப்படா விட்டால் அரசுக்கு எதிராக எதிர்ப்பு போராட்டம் நடத்துவோம்.

இப்படி அறைகூவல்விடுப்பது வேறுயாருமல்ல சந்திரிகாவைப்பிடித்த சனியனாக ஆட்டி அசைக்கும் ஜே.வி.பி.தான்.

இதெல்லாம் சரி, இலங்கையில் ஒரு வரவு செலவுத்திட்டத்தை எந்த வெளிநாட்டு நிறுவனங்களின் தலையீடுமின்றி தயாரித்து விடத்தான் முடியுமா என, பாவம் அப்பாவி மக்கள் கேட்கிறார்கள்.

அதோடு அரசு சமர்ப்பித்திருக்கும் இந்த வரவு செலவு திட்டமே ஒரு அமெரிக்க நிபுணருக்கு இருபது இலட்சம் ரூபாவை தாரைவார்த்துதான் தயாரித்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பிரதி நிதி அமைச்சர் பந்துல குணவர்த்தனா குற்றம் சாட்டியிருந்தார்.

இப்படியிருக்க இலங்கையில் திறை சேரியில் என்னவோ பணமலை குவிந்திருக்கிறது போலவும் அதையெல்லாம் எடுத்து துண்டு விழும் தொகையெல்லாவற்றையும் ஈடு செய்து விடலாம் என்பது போலவும் ஜே.வி.பி. காரர்கள் கூச்சல் இடுகிறார்கள்.

நிலைமை என்னடா என்றால் அரசு தன் சக்தியை மீறிப் போகும் நிலையை ஈடு செய்ய புதிய பணத்தாள்களை அச்சிடுவதாக இன்னொரு புறம் குற்றச்சாட்டு.

இலங்கையின் உள்நாட்டு, வெளிநாட்டுச்சொத்துக்கள் மற்றும் பொருளாதார நிலைமையை கவனத்தில் எடுக்காமல் பணத்தாள்களை அச்சிடுவது என்பது போலி நாணயங்களை அச்சிடுவது போலத்தான் என்கிறார்கள் மகாசனங்கள்.

எல்லாம் போலியான அரசு, போலியான தார்மீகபலம், போலியான அரசியல் வாதிகள் இப்படியிருக்கும் போது போலியான அரசியல் பேச்சைத்தவிர வேறு எதை ஜே.வி.பி. காரர்களால் பேசுவதை தவிர வழியிருக்கிறது.

அது சரி அரசுக்குச் சொந்தக்காரர்கள் நாங்கள்தான் என்றார்கள் ஜே.வி.பி காரர்கள்.

அப்படியானால் இந்த வரவு செலவு திட்டத்துக்கும் சொந்தக்காரர்களும் அவர்கள் தானே.

இந்த நிலையில் இதற்கு எதிராக எப்படி ஜே.வி.பி. போராட்டம் நடத்தப் போகிறதாம் சுற்றும் பூமி சுற்றும் வரை எங்கள் தலைகளும் சுற்றத்தான் செய்யும் போல.

# சிறிலங்கா இராணுவ புலனாய்வுப் பிரிவும் புலனாய்வு வியூகங்களும்

**நீலன்**

சிறிலங்காப் புலனாய்வு வரலாற்றின் படி இராணுவப் புலனாய்வுப் பிரிவு (MILITARY INTERLLIGENCE CORPS - MIC) 90 ஆம் ஆண்டளவில் உருவாக்கப்பட்டது. இது படிப்படியாக புலனாய்வுப் பணிகளை விருத்தி செய்து காலக்கிரமத்தில் புதிய உத்வேகம் பெற்றுள்ளது.

இந்தப் பிரிவு பாதுகாப்புக் குழு, விசாரணைக் குழு, இலத்திரனியல் குழு, புகைப்படக் குழு,நடவடிக்கைக்குழு, முறியடிப்புக் குழு, வேவு விமானங்கள் மூலம் எடுக்கப்படுகின்ற புகைப்படங்களை பகுப்பாய்வு செய்யும் குழு போன்ற அடுக்குகளை தன்னகத்தே கொண்டு இயங்குகின்றது.

எம்.ஐ.சியின் பணிப்பாளராக கடமையாற்றிய பிரிகேடியர் கபில ஹெந்த விதாரணை தற்போது மேஜர் ஜெனரலாக பதவியுயர்வு பெற்று பணிப்பாளர் நாயகம் என்கின்ற புதிய பதவிக்கு நியமனமாகியுள்ளார் (DIRECTOR GENERAL MILITARY INTERLLIGENCE-DGMI)

இவர் இனிவரும் காலங்களில் கூட்டுப் படை நடவடிக்கைத் தலைமையகத்துடன்(JOH) இணைந்து இயங்குவார். அதாவது கடற்படை, விமானப்படை, இராணுவம் உள்ளிட்ட முப்படைகளின் புலனாய்வுப் பிரிவுகளை ஒருங்கிணைத்து செயலாற்றும் அதிகாரமுடையவராக இயங்குவார்.

இவர் முன்னர் வகித்த பணிப்பாளர் பதவி நிலைக்கு பிரிகேடியர் அப்துல் றிஸ்வி ஸக்கி நியமிக்கப்பட்டுள்ளார். ஸக்கி மட்டக்களப்பில் சில ஆண்டுகள் MIC க்கு பொறுப்பாக செயலாற்றியவர். அதன் பின்னர் அவர் பாகிஸ்தானிலுள்ள சிறிலங்கா தூதரகத்தில் பாதுகாப்பு ஆலோசகராக இருந்து இரகசிய புலனாய்வுச் சேவையில் பணியாற்றி வந்தவராவார்.

எம்.ஐ.சி தமது பணிகளை முக்கியத்துவத்திற்கு ஏற்பவும், தேவைக்கு ஏற்பவும் நாடு பூராகவும் மேற்கொள்கின்றது. அது தமிழர் தாயகத்திலும் சிறிலங்கா தலைநகர் கொழும்பிலும் அதிமுக்கியத்துவம் கொடுத்து புலனாய்வு வேலைகளை முன்னெடுத்துவருகின்றது.

வவுனியா யோசேப் இராணுவ முகாம், மன்னார் தள்ளாடி இராணுவமுகாம், திருமலை பிளாண்டன் பொயின்ட் இராணுவ முகாம், யாழ்ப்பாணம் பலாலி இராணுவமுகாம், மட்டக்களப்பு வாவி வீதியிலுள்ள முகாம், கொழும்பு முத்தையா வீதியில் அமைந்துள்ள தலைமையகம் ஆகியன அதன் பணிகளை முன்னெடுத்து வழிநடத்தும் மையங்களாக இயங்குகின்றன.

இங்கு பணியாற்றுகின்ற அதிகாரிகள், புலனாய்வாளர்கள் அனைவரது மூளைகளும் சுறு சுறுப்பாக இயங்கி புலனாய்வுத் தந்திரங்களை, உத்திகளை, மற்றும் வியூகங்களை வகுத்துவருகின்றன. அதாவது தமிழர்களிடத்தில் காணப்படுகின்ற சகலவகையான முரண்பாடுகளையும் எவ்வாறு பயன்படுத்தி தமிழ்த் தேசிய ஒருமைப்பாட்டை அழித்துவிடலாம் என்பதில் அந்த மூளைகள் சளைக்காது சிந்திக்கின்றனர். அதற்கு அப்பாலும் அவர்கள் உலக புலனாய்வு நிபுணத்துவம் வாய்ந்த மூளைகளின் உதவிகளையும் பெற்று வருகின்றன.

> **தமிழர் உரிமைப்போருக்கு எதிராக புலனாய்வு யுத்த வியூகங்களை ஒருபுறம் வகுத்துக்கொண்டு, மறுபுறம் தமிழர் உணர்வுகளில் ஆழமாக ஊடுருவி அவர்களின் சிந்தனையில் குழப்பங்களை ஏற்படுத்தும் பிரசார யுத்தத்தையும் முன்னெடுத்துள்ளது. அதாவது சூழ்ச்சிப் பொறிகளை தமிழர்களுள் விதைக்கும் விதைகளை உற்பத்திசெய்துகொண்டிருப்பதில் அவர்களின் மூளைகள் தொழிற்படுகின்றன.**

இவ்வாறாக தமிழர் உரிமைப் போருக்கு எதிராக புலனாய்வு யுத்த வியூகங்க்களை ஒருபுறம் வகுத்துக்கொண்டு, மறுபுறம் தமிழர் உணர்வுகளில் ஆழமாக ஊடுருவி அவர்களின் சிந்தனையில் குழப்பங்களை ஏற்படுத்தும் பிரசார யுத்தத்தையும் முன்னெடுத்துள்ளது. அதாவது சூழ்ச்சிப்பொறிகளை தமிழர்களுள் விதைக்கும் விதைகளை உற்பத்தி செய்துகொண்டிருப்பதில் அவர்களின் மூளைகள் தொழிற்படுகின்றன.

எம்.ஐ.சி யினரைப் பொறுத்தவரை புலிகளுக்கு எதிராக இயங்கும் தமிழ் விரோத குழுக்களையும் புலிகள் இயக்கத்திலிருந்து ஒதுங்கிக்கொண்டவர்களையும் தமிழர் மற்றும் முஸ்லிம் பொதுமக்களையும் தங்கள் புலனாய்வு வேலைகளுக்காக பல்வேறு பகுதிகளாக பயன்படுத்திவருகின்றனர். அவர்கள் அவ்வாறானவர்களை எவ்வாறு கைக்கொண்டு பிரயோகித்துவருவதுபற்றி சற்றுநோக்குவோம்.

இராணுவ புலனாய்வுப் பிரிவினருடன் முழுமையாக இணைந்தியங்கும் புலனாய்வாளர்கள்.

புலிகள் நடவடிக்கைகள் பற்றிய இரகசியத் தகவல்களை அறிய புலிகளின் இரகசிய அடுக்குகளுள் ஊடுருவும் இரகசிய உளவாளிகள்.

புலிகளுடன் அல்லதுஅவர்களின் ஆதரவாளர்களுடன் நெருங்கிப் பழகியும் அவர்களை அவதானித்தும் தகவல்களை வழங்கும் தகவலாளர்கள்.

தாயகப் பகுதியினுள் ஆழ ஊடுருவித் தாக்குதல்களை மேற்கொள்ளும் விசேட இராணுவ அணிக்கு உதவிபுரியும் நடவடிக்கையாளர்கள்.

தமிழர் தாயகப் பகுதிகளில் ஆங்காங்கே குண்டுகளை வெடிக்கச்செய்தும், குண்டுகளை வீசி வெடிக்கச் செய்தும் மக்களைக் குழப்பத்தில் ஆழ்த்தவைக்கும் நாச வேலையாட்கள்.

தமிழர்களிடையே முரண்பாடுகளைத் தோற்றுவிக்கவும் அவர்களின் சிந்தனையில் குழப்பங்களை உண்டுபண்ணவும் பொய்த் தகவல்களைக் காவிச்சென்று பரப்புவோர்கள்.

இப்படியானவர்களை எம்.ஐ.சி யினர் தம் இரகசியப் பணிகளில் ஈடுபடுத்திவரும் அதேசமயம், ஊடக வளங்களையும் இரு பிரதான புலனாய்வு நோக்கங்களுக்காக பயன்படுத்துகின்றனர்.

ஊடகங்களை தகவல்கள் பெறும் மூலங்களாக தினமும் ஆர்வத்துடன் பயன் படுத்தி வருவது ஒன்று. அது OPE SOURE INTERLLIGENCE என்கிற புலனாய்வு வடிவத்தினுள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. இதற்கு எடுத்துக்காட்டாக உண்மை உதாரணத்தைக் கவனிப்போம்.

தமிழ் விவகாரங்கள் தொடர்பாக உலகிற்கு தகவல்களை வழங்கிவரும் "தமிழ் நெட்" கணனி தகவலகத்தை எம்.ஐ.சி யினர் நாளாந்தம் ஆர்வத்துடன் அணுகுகின்றனர். இது போன்று அனைத்து ஊடக வளங்களையும் தமது புலனாய்வு நோக்கங்களுக்காக பிரயோகித்துக்கொள்கின்றனர்.

மேலும் அரசின் பாதுகாப்பை எப்போதும் விழிப்பு நிலையில் வைத்திருப்பதற்காக புலிகள் பற்றிய தகவல்களை ஊடகங்களுக்கு வழங்கி பிரசாரப்படுத்துகின்றது. இந்த உத்திக்கான உதாரணங்களை இங்குபார்ப்போம்.


அமைச்சர்களின் பாதுகாப்பு பிரிவில்
புலிகளின் உளவாளிகள் ஊடுருவல்?
அமைச்சர்களின் பாதுகாப்பு பிரிவுகளுக்குள்
விடுதலைப் புலிகளின் உளவாளிகள் ஊடுருவி
புள்ளதாக இராணுவ புலனாய்வுப் பிரிவு கருது
கின்றது.
இராணுவ புலனாய்வுப் பிரிவை ஆதாரங்
நன்கு சிங்களம் பேசத் தெரிந்த இந்த உளவா
ளிகள், அமைச்சர்களின் பாதுகாப்பு பிரிவினரில்
தனிப்பட்ட விடயங்களிலும் அக்கறை காட்டி
அவர்களை கவர்ந்து விடுவதுடன், இவ்வாறான

அமைச்சர்களின் பாதுகாப்புப் பிரிவில் புலிகளின் உளவாளிகள் ஊடுருவல் என்கின்ற தலைப்பில் 06.11.2004 ஆம் திகதி தினக்குரல் செய்திகளை விபரித்திருந்தது.

இன்னொரு பத்திரிகையில் விடுதலைப்புலிகள் எதிர்கால நடவடிக்கைக்காக இராணுவ உபகரணங்கள், நவீனமுறையில் தயாரிக்கப்பட்ட அதிசக்திவாய்ந்த ஆயுதங்கள் போன்றவற்றை கொள்வனவு செய்யத்திட்டமிட்டுள்ளதாக இராணுவப்புலனாய்வுப் பிரிவுக்குத் தெரியவந்துள்ளதாக தகவல்களை வெளியிட்டிருந்தது.

மேலே எடுத்துச்சொல்லப்பட்ட இரு உதாரணங்களும் அரசினது பாதுகாப்பு விடயங்களுக்காக விழிப்புணர்வு பிரசாரங்களுக்காக பயன்படுத்திவரும் புலனாய்வு நுட்பம் அப்படியே அப்பட்டமாக பிரதிபலிக்கின்றன. இது அரசையும், நாட்டு மக்களையும் எப்போதும் விழிப்பு நிலைக்குள் வைத்திருக்கும் உத்தியாக கையாளப்பட்டுவருகின்றது.

இதுபோன்ற புலனாய்வு தந்திரங்களை, உத்திகளை எம்.ஐ.சியினர் தொடர்ந்தும் கையாண்டுவருவதுடன், நவீன காலத்திற்கு ஏற்பவும் தமது புலனாய்வு வியூகங்களை அமைத்து புலனாய்வு அரங்கில் சாகசங்களை நிகழ்த்திவருகின்றன. அவ்வாறான சாகசங்கள் அதிகம் கிழக்கில் நிகழ்த்தப்பட்டுவருகின்றன.

கிழக்கில் தமிழ் முஸ்லிம் உறவு நிலையை சீர்குலைத்து நிரந்தரமான உறவுப் பிளவை இரு சமூகத்தினரிடையேயும் ஏற்படுத்தி அதில் இலாபம்பெறும் நோக்கில் எம்.ஐ.சியினர் நீண்டகாலமாக திரைமறைவில் செயற்பட்டு வந்துள்ளனர்; வருகின்றனர். இரு சமூகத்தினிடையே உருவாகி இருக்கும் முரண்பாடுகள் தணியாது பராமரித்துவருவதிலும், அம் முரண்பாடுகளை மேலும் அதிகப்படுத்தும் முயற்சியிலும் அவர்கள் தீவிரத்துடன் இயங்குகின்ற சான்றுகள் பல இருக்கின்றன. அவற்றில் மிக அண்மைக்கால உண்மை உதாரணத்தை இங்கு கவனிப்போம்.

தமிழ் முஸ்லிம் மக்களிடையேயான உறவு நிலை ஆபத்தான விளிம்பில் இருந்த காலச்சூழலில்தான் ஓட்டமாவடியில் முஸ்லிம் இளைஞர் கொல்லப்பட்டு, அவரது சடலம் மீராவோடை தமிழ் கிராமத்தில் அநாதரவாகப் போடப்பட்டது. இச்சம்பவத்துடன் தொடர்புடைய இராணுவப்புலனாய்வு கப்டன் ஒருவரும், முச்சக்கரவண்டிச் சாரதியும் வாழைச்சேனை பொலிசாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்கிற செய்தியை ஊடகங்கள் உறுதித் தன்மையோடு வெளியிட்டிருந்தன.

இந்தச் சூழ்ச்சிகரமான திட்டமானது தமிழ் முஸ்லிம்கள் இடையே கலவரங்களை உருவாக்கும் நயவஞ்சக நோக்கமாக இருந்தது. இது வெளிச்சத்திற்கு வந்ததனால் எம்.ஐ.சியினரின் முயற்சி தோல்வியில் முடிந்தது. எது எப்படி இருப்பினும் அவர்கள் கடந்த காலங்களில் இந்தப் புலனாய்வுத் தந்திரத்தில் ஓரளவு வெற்றியும் பெற்றுள்ளனர்.

அவர்கள் தமிழர், முஸ்லிம் சமூகத் தினிடையேயான உறவுப் பிளவினால் ஏற்பட்டுள்ள விரிசலினை உச்சமாகப் பயன்படுத்திவரும் போது அவர்களுக்கு இன்னொரு சாதகமான வழி ஒன்றும் திறந்துள்ளது. அது கருணாவின் தமிழ்த்தேசியத் துரோகத்தனமாகும்.

தமிழ்த் தேசியம் என்ற வாளைக் கருணாவின் பிரதேசவாதம் என்கிற உறைக்குள் போட்டு அதனைச் செயலிழக்கச்செய்யும் புலனாய்வு ஒழுங்குகளை எம்.ஐ.சியினர் மிகத் தீவிரமாக, சுறுசுறுப்போடு மேற்கொண்டுவருகின்றனர். இந்த நோக்கத்தை எய்வதற்காக அவர்கள் களத்தில் குதித்தும் உள்ளனர்.

இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் கருணா குழுவினரை பராமரித்தும், தங்குமிட வசதிகளை செய்து கொடுத்தும், தேவைகளுக்கு ஏற்ப உதவிகளை வழங்கியும் வருகின்றனர். இதற்கான வலிமையான ஆதாரங்களை ஊடகங்கள் அம்பலப்படுத்தியும் வருகின்றன.

> **இராணுவப் புலனாய்வுப் பிரிவு சிறிலங்கா அரசினது புலனாய்வுப் பிரிவினுள் மிகவும் சக்தி வாய்ந்த ஒரு பிரிவாக செயலாற்றி வருகின்றது. அது புலனாய்வு அரங்கை பலமான நிலையில் வைத்திருக்கும் புலனாய்வு வியூகங்களை வகுப்பதிலேயே போதிய அக்கறையை செலுத்துகின்றது. ஆனாலும் பிஸ்டல் குழுவினர் எம். ஐ. சியின் புலனாய்வு அரங்கை உலுப்பியெடுத்துவருகின்றனர்.**

கருணா குழுவினரினுள் புலிகளின் புலனாய்வு புகுந்து துவம்சம்செய்ய அச்சத்திற்கும் விரக்திக்கும் இடையே ஊசலாடும் கருணா குழுவினருக்கு எம்.ஐ.சியினர் செயலூக்கம் கொடுத்து மீளவும் இயங்கவைக்க முயல்கின்றனர். இம்முயற்சியில் தம் அனைத்து சக்திகளையும் பிரயோகிக்கின்றனர்.

இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் கொழும்பில் அமைந்துள்ள ஜாதிக ஹெல உறுமய (JHU) வின் தலைமையகத்துடன் உறவை ஏற்படுத்தினர். அச்சிங்கள கட்சியின் ஒத்துழைப்போடு கருணா குழுவைச் சேர்ந்த 14 நபர்களை பொலநறுவ போதிறுக்கமா பிரதம பிக்குவிடம் அனுப்பிவைத்தனர்.

(21ஆம் பக்கம் பார்க்க)

ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி. 19 . 11. 2004
மின் அஞ்சல் : weekly @ eezhanatham.com

# துணிவற்றவர்...!

சமாதான முயற்சித்தொடர்பாக சனாதிபதி சந்திரிகா தலைமையிலான ஐக்கியமக்கள் சுதந்திர முன்னணி அரசுக்கு ஒரு தெளிவான கொள்கையோ கோட்பாடுகளோ கிடையாது.

இதனால் சமாதான முயற்சிதொடர்பாக இந்த அரசினால் எந்த தெளிவான முடிவுகளையும் வெளிப்படுத்தமுடியாத ஒரு அரசாகவே செயற்படுகிறது.

ஆனால், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசுக்குள் எந்த குழப்பமோ, முரண்பாடுகளோ கிடையாது என்பதுபோல காட்டிக்கொள்ள சனாதிபதி சந்திரிகா அதிகமாகவே பிரயத்தனப்படுகிறார்.

இந்த நிலையில் சமாதான முயற்சியை முன்னெடுப்பதற்கான வழிவகைகள் எதனையும் எடுக்காது காலத்தை கடத்துவதிலும் எப்படியாவது சர்வதேச நாடுகள் வாக்குறுதியளித்துள்ள நிதியை பெற்று விட வேண்டுமென்பதிலும் தணியாத தாகம் கொண்டவராகவே சனாதிபதி சந்திரிகா இருக்கிறார்

இதன் ஒரு கட்டமாக அரச தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியொன்றில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்குள் எந்த குழப்பமும் இல்லை. இல்லாத குழப்பம் ஒன்றை இருப்பது போல புலிகள் காட்டிக் கொள்ள முயல்கிறார்கள் என்ற சாரப்பட பேசியிருந்தார்.

அப்படியானால் சமாதான முயற்சிதொடர்பாக புலிகள் இயக்கம் தன்னுடைய நிலைப்பாட்டில் தெளிவாக இருக்கும்போது, ஏன் அரசால் ஒரு தெளிவான முடிவுக்கு வரமுடியாதுள்ளது?

அத்தோடு, இறுதியாக கிளிநொச்சிக்கு விஜயம் செய்த நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர்சனிடம் தலைவர் பிரபாகரன் அவர்கள் சமாதான முயற்சியை முன்னெடுக்க புதிய ஆலோசனையாக கூட்டமைப்பு அரசின் கொள்கையை பிரகடனப்படுத்த வேண்டுமென கோரியதற்கு இன்னும் ஒரு சாதகமான பதிலை அளிக்கமுடியாது திணறுவது ஏன்?

உண்மையில் சனாதிபதி சந்திரிகாவினால் இந்த விடயம் தொடர்பாக கட்சிக்குள் ஒருமித்த கொள்கையை மட்டுமல்ல, சமாதான முயற்சிதொடர்பாக ஆக்கபூர்வமான எந்த விடயத்தையும் முன்வைக்க முடியாது என்பதே யதார்த்தம்.

இதனை 1994 களில் அவர் அரசபீடம் ஏறியதிலிருந்து தெளிவாக புரிந்துகொள்ள முடிவதுடன், அவரின் வம்சாவழியாக இலங்கையில் கைமாறி கைமாறி வரும் பௌத்த பேரினவாத மேலாண்மை குணாம்சங்கீளே சான்றுபகரும்.

ஆயினும் சமாதான முயற்சிக்கூடாக பிரச்சினைக்கு தீர்வு காணும் முகமாக அர்ப்பணிப்போடு செயற்பட்டுவரும் புலிகள் இயக்கமும் தமிழ்மக்களும் சனாதிபதி சந்திரிகாவின் புளித்துப்போன பசப்பு வார்த்தைகளை தொடர்ந்து செவிமடுக்க மாட்டார்கள் என்பது தெளிவு.

சமாதான முயற்சி தொடர்பான ஒரு தெளிவான முடிவுக்கு வரவேண்டிய பாரிய பொறுப்பு சனாதிபதி என்றவகையில் சந்திரிகாவுக்கு உண்டு.

இதேவேளை சர்வதேச சமூகமும் சமாதான முயற்சியில் ஆர்வம் கொள்வோரும் இனியும் மௌனித்து காலம் கடத்துவதால் எந்த நன்மையும் பயக்க போவதில்லை.

சமாதான முயற்சி தொடர்பாக சனாதிபதி சந்திரிகாவை முடிவெடுக்க துணிவற்றவராக நோக்க வேண்டியுள்ளது.

# திருமலை-அனுராதபுரம் வீதி உறங்கிக்கிடக்கும் உண்மைகள்

திருகோணமலை- அனுராதபுரம் வீதி ராஜீவ்காந்தி நல்லெண்ண நெடுஞ்சாலை என நாமம் இடப்படும் என இலங்கை-இந்திய இரு நாட்டு கூட்டறிக்கையில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மேலும் இவ்வீதியைப் புனரமைக்கவும், இவ்வீதியில் அமைந்துள்ள கிராமப்புறங்களின் அடிப்படைக்கட்டமைப்புக்களை சீர் செய்யவும் சிறிலங்கா அரசிற்கு இந்திய அரசு நிதிஉதவி வழங்கத்தீர்மானித்துள்ளது. இச்செய்தி கடந்தவாரம் ஊடகங்களில் வெளிவந்த செய்தி. இந்தியாவிற்கும் ஈழத்தமிழ் மக்களுக்கும் இடையே பிளவுகளை ஏற்படுத்த சந்திரிகா நகர்த்தும் திட்டமிட்ட காய்நகர்த்தல்களேஇவை. ஒரு கல்லில் இரு மாங்காய் என பொதுவாகக்கூறுவார்கள் ஆனால், சந்திரிகாவோ ஒரு கல்லில் பல மாங்காய்களை பறிக்க முனைகிறார். பாரதம் ஈழத்தமிழர் விடயத்தில் கொஞ்சம் கூடுதலாகவே தன்து கையைச் சுட்டுள்ளது. மீண்டும் ஒரு முறை தனது பிராந்திய நலன் கருதி சிறிலங்காவுடன் ஒப்பந்தங்களை கைச்சாத்திடத் தயாராகவுள்ளது. ஈழத்தமிழ் மக்களது முப்பது வருடகால அகிம்சைப்போரும் இரண்டு தசாப்தங்களுக்கு மேற்பட்ட ஆயுதப்போரும் பாரததேசத்தின் சொந்த நலன்களுக்காக வீண் போகக்கூடாது என்பதே ஈழத்தமிழ் இனத்தின் விருப்பமாகும்.

தமிழர்களை தனித் தேசிய இனமாக ஒப்புக் கொள்ளல்.

தமிழர்களின் தாயகத்தை அங்கீகரித்தல் (வடக்கு கிழக்கு இணைந்த பிரதேசம்)

தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை ஏற்றுக்கொள்ளல்.

இவையே அன்று தொட்டு இன்று வரை ஈழத் தமிழ் மக்களின் அபிலாசைகளாகும். 1984இல் திம்புவில் தமிழர் தரப்புக்கும் ஜே.ஆர் தலைமையிலான சிறிலங்கா அரசிற்கும் இடையே நடைபெற்ற பேச்சுவார்த்தையில் கூட இவையே முக்கிய அம்சங்களாக விளங்கின. இவற்றில் இரண்டாவதாகக் கூறப்பட்ட வடக்கும் கிழக்கும் இணைந்த தமிழர்களின் தாயகத்தை அங்கீகரித்தல் என்ற விடயம் எப்போதுமே சிங்களப் பேரினவாதிகளுக்கு கசப்பான விடயமே. தமிழர்கள் தனித் தேசிய இனமாகவோ, பாரம் பரிய தாயக நிலப்பரப்பைக் கொண்டவர்களாகவோ இருக்கக்கூடாது என்பதற்காக வடக்கு கிழக்கைத் துண்டாட சிங்களம் பல வழிகளிலும் தனது நடவடிக்கைகளை முன்னெடுத்து (வந்துள்ளது.) வருகின்றது. சிங்கள எல்லைகள் தமிழர் நிலங்களை நோக்கி நீட்ட வேண்டும் எனவும் ஆனமடுவிலிருந்து ஆனையிறவு வரை சிங்கள மக்களை குடியேற்ற வேண்டும் எனவும் வீரத்துடனும் விவேகத்துடனும் நடவடிக்கைகளை தீட்டி நடைமுறைப்படுத்தியவர் காலஞ்சென்ற சிறிலங்கா சனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனா. இதற்கு அப்பால் எல்லா மாவட்டங்களுக்கும் கடல் தொடர்பு இருக்கவேண்டுமெனவும் ஆதலால் சிறிலங்கா மத்திய மாகாணத்திலிருந்து இருபத்தி ஐந்து (25) சமகூறுகளாக (25-மாவட்டங்கள்) பிரிக்கப்படவேண்டும் என்ற ஒரு கருத்தையும் கொண்டுள்ளது. இதிலிருந்து விளங்குவது என்னவெனின் சகல மாவட்டங்களிலும் தமிழ் மக்களை சிறுபான்மையினராக்கி சிங்கள மக்கள் ஆளும் இனமாகவும் தமிழ் மக்கள் ஆளப்படும் இனமாகவும் இருக்கவேண்டும் என்ற உள்நோக்கமே. அவ்வகையில் வடக்கு கிழக்கைப் பிரிக்க காலத்திற்கு காலம் மாறி மாறி ஆண்ட இரண்டு அரசாங்கங்களுமே போட்டி போட்டு பல சிங்களக்குடியேற்றங்களைதிறம்பட நடாத்தியுள்ளது.

1987 இலங்கை- இந்திய ஒப்பந்தத்தில் வடகிழக்கு மாகாணங்களை ஒன்றிணைத்து ஒரு மாகாண சபை ஒரு முதலமைச்சின் கீழ் அமைக்கப்படும் எனக் கூறியதுடன் 31.12.1988இற்கிடையில் கிழக்கு மாகாண மக்களிடமிருந்து எடுக்கப்படும் பொதுமக்கள் வாக்கெடுப்பு மூலம் வடமாகாணமும் கிழக்கு மாகாணமும் இணைந்திருப்பதா அல்லது பிரிந்து போய் இரண்டு மாகாண சபைகள் ஆவதா எனத்தீர்மானம் எடுக்கப்படும் என்ற வரையறையும் உடன்படிக்கையில் காணப்படுகின்றது. தமிழர் தாயகத்தின் நிலையான, நிரந்தரமான இணைப்பிற்கு ஜே.ஆர். ஜெயவர்த்தனா வைத்த தந்திரமான நரித்தனமான ஆப்பே இந்த வரையறை என்பது வெளிச்சம். அந்த வரையறையை இந்திய அரசு கூட அந்த நேரத்தில் தனது சுயநல, பிராந்திய நலன்கருதி ஆமோதித்தது. இது விடயத்தில் தமிழர்தரப்பு நியாயம், நிலைப்பாடு என்ன என்பதை இந்தியா கவனத்தில் எடுக்கத்தவறியது கவலைக்குரிய செய்தியாகும்; அத்துடன் மன்னிக்கமுடியாததாகும்.

அவ்வகையிலேயே தற்போது திருமலை- அனுராதபுரம் வீதிக்கு ராஜீவ்காந்தி நெடுஞ்சாலை எனப்பெயரிட்டு சிங்களம் தனது வடக்கு கிழக்கு பிரிப்புசதிகார வேலைகளை ஒரு புறமும் ஈழத் தமிழர்களையும் இந்தியாவையும் பிரிப்பதற்கான நடவடிக்கைகளை மறுபுறமும் என கனகச்சிதமாக நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. இது தொடர்பாக தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வன் கருத்துத்தெரிவிக்கையில்; ''இது தமிழர் தாயகத்தை கூறுபோடும் விடயமாகவே பார்க்கிறோம், திருகோணமலையிலிருந்து முல்லைத்தீவை ஊடறுத்து பல சிங்களக குடியேற்றங்கள் உருவாக்கப்பட்டு அப்பகுதிகளில் வாழ்ந்த தமிழ் மக்கள் தமது சொந்த மண்ணில் இருந்து விரட்டப்பட்டு இன்றும் அகதிகளாக நலன்புரி நிலையங்களில் காலம் கழிக்கின்றனர். ஆயிரக்கணக்கான சிங்கள மக்கள் மீன்பிடியிலும் ஈடுபட்டுள்ளனர். பலாத்காரமாக தமிழ்மக்கள் வெளியேற்றப்பட்டு அரச ஆதரவுடன் சிங்கள குடியேற்றங்கள் இடம் பெற்ற பகுதிகளை ஊடறுத்து நெடுஞ்சாலை அமைப்பது சமாதான முயற்சிகளுக்கு பாதிப்பாகவே அமையும்'' என்பது புலிகளின் நிலைப்பாடு எனத்திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார். அவ்வாறாக தமிழர் தரப்பு நியாயம் இருக்கும் போது இந்தியா சிறிலங்கா அரசுடன் இது தொடர்பான ஒப்பந்தங்களை செய்வது எரியும் வீட்டிற்கு எண்ணை ஊற்றுவதற்கு ஒப்பானதாகும். மாறாக இந்தியா தமிழர் தாயகம் தொடர்பாக தமிழர் தரப்புடனேயே பேச வேண்டும். தமிழர் தாயகக் கடலில் அத்துமீறி பிரவேசித்து தமிழர் சுதந்திரமாக தொழில் செய்யமுடியாது உள்ள சூழ்நிலையில் இந்திய மீனவர்கள் தமிழர் வளங்களை அள்ளிச் செல்கின்றனர். யுத்த காலத்தில் பட்ட துன்பங்களை வடகிழக்கு தமிழ் மீனவர்கள் இன்றும் அனுபவித்துக் கொண்டே உள்ளனர். இது தொடர்பில் இந்திய அரசு ஆக்கபூர்வமான நடவடிக்கை எதனையுமே இதுவரை எடுக்கவில்லை. ஆகவே ஈழத் தமிழர்களை நேசசக்தியாகவோ அல்லது அந்நிய சக்தியாகவோ அணுகும் முழுப் பொறுப்பும் பாரதநாட்டின் கையிலேயே உள்ளது. என்பது மட்டும் உண்மை.

— பா.சிவரஞ்சன்

# இலங்கையை அச்சுறுத்தும் போதைப்பொருள் வியாபாரம்

கடந்தமாத நடுப்பகுதியில் அமெரிக்கா இலங்கையில் போதைப் பொருட்களைகட்டுப்படுத்த கொழும்பு போதைப்பொருள் தடுப்பு ஆலோசனைப்பிரிவுக்கு முப்பத்துமூன்று லட்சத்து முப்பதாயிரம் அமெரிக்க டொலரினை அன்பளிப்புச் செய்தது.

உள்நாட்டில் போதைப் பொருட்களை கட்டுப்படுத்த பெருமளவு நிதியை அதுவும் அமெரிக்கா அன்பளிப்பாக வழங்குகின்றதெனின் இந்த போதைப்பொருளின் அபாயமும் இதன் பின்னணியும் எவ்வாறானதாக இருக்குமென நாம் ஊகிக்கலாம்.

இலங்கைத்தீவுக்கு ஆசியப் பிராந்தியத்தில் வர்த்தகரீதியில் ஒரு முக்கிய இடமுண்டு. அதேபோல் கறுப்புச்சந்தை வர்த்தகத்திலும் இலங்கைக்கு முக்கியஇடமுண்டு. இன்றைய கணிப்பின் படி கொழும்புக்கு அடுத்தபடியாக மன்னார், நீர்கொழும்பு ஆகியஇடங்கள் போதைப் பொருள்கள் கடத்தலுக்கு ஏதுவான ஓர்இடமாகக் கொள்ளப்படுகின்றது. இப்போதைப் பொருள்பாவனை, வர்த்தகத்தால் குழுக்களிடையேயான மோதல்களும் இடம்பெற்றுள்ளன. இதன் ஒரு வெளிப்பாடாக 3.10.2004இல் மன்னார் கரிசல் பகுதியில் இடம்பெற்ற முஸ்லிம் இளைஞர் கொலைச் சம்பவத்தையும் நோக்க வேண்டியுள்ளது. இதற்குச் சான்றாக அவர் சுடப்பட்ட இடத்திற்கு அண்மையில் கண்டெடுக்கப்பட்ட 600,0000 இலட்சம் ரூபா பெறுமதியான போதைப்பொருளாகும்.

போதைப் பொருள் கடத்தலில் அரசியல் வாதிகளும், பொலிஸ் அதிகாரிகளும் முன்னின்று செயற்படுத்துவதாக இலங்கையில் அண்மையில் அமைக்கப்பட்ட குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தும் தெரிவுக்குழு தெரிவிக்கின்றது. இதனுடைய ஒரு வெளிப்பாடாகவே மன்னாரில் போதைப்பொருள் கடத்தல் தொடர்பில் கைதான ஒரு குற்றவாளியின் கூற்றும் உள்ளது. அக்குற்றவாளி என்ன கூறுகிறார் எனில் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபடும் தன் சகாக்கள் சிலரின் வீடுகளுக்கு பிரதி அமைச்சர் ஒருவர் வந்து போவதாக கூறியுள்ளார். எனவே உலக அரங்கிலும் சரி இலங்கையிலும் சரி கடத்தல் குற்றச்செயல்களை செய்வதில் முன்னிற்பவர்கள் அரசியல் வாதிகளே எனும் உண்மை புலப்படுகின்றது.

இந்த அரசியல் வாதிகளும் உயர்பதவி உத்தியோகத்தர்களும் சாதாரணகூலியாற்களையே போதைப் பொருள் கடத்தலில் ஈடுபடுத்துகின்றனர். இவ்வப்பாவிகளுக்கு தாங்கள் கொண்டு செல்வது போதைப்பொருள் என்பது கூட தெரியாது. இப்பொருளை வழங்கியவரின் முகவரிதெரியாது. வெறும் பொதிசுமையாளர்களாக வரும் இவர்கள் சில சந்தர்ப்பங்களில் பொலிசாரிடம் சிக்கி தண்டனை அனுபவிக்கிறார்கள். இதில் போதைப் பொருள் கடத்தலில் கைதேர்ந்த கூலியாட்களும் உண்டு.

இவ்வாறு இலங்கையில் மாதமொன்றிற்கு 60 Kg ஹெரோயின் பாவனையில் உள்ளதாக சம்பந்தப்பட்ட அதிகாரி கூறியுள்ளார். அண்மைய ஆய்வின்படிவருடமொன்றிற்கு 45000 பேர் போதைப்பொருள் பாவித்து சிறைத்தண்டனை அனுபவித்துள்ளனர். எனவே இன்று ஆசியப்பிராந்தியத்தில் போதைப் பொருள் கடத்தல் பாவனைகளில் இலங்கையும் இடத்தை பிடித்துள்ளது. அதில் எமது தமிழர் தாயகப் பகுதியின் ஒரு மாவட்டமான மன்னாரும் அடங்குகின்றதுடன் இந்தியாவில் இருந்து போதைப்பொருள் இலங்கைக்குக்கொண்டு வரப்படுகின்ற நுழைவாயிலாகவும் மன்னார் விளங்குகின்றது. இதனைக்கட்டுப்படுத்த அரசு எவ்விதநடவடிக்கைகளும் மேற்கொண்டதாகத்தெரியவில்லை. கடந்த வருடமளவில் தமிழர்புனர்வாழ்வுக்கழகம்,விடுதலைப்புலிகளின் அரசியல்துறையினரும் மன்னார்ப்பகுதியில் போதைப் பொருட்கள் தொடர்பான விழிப்புணர்வுப் பிரசாரத்தை மேற்கொண்டிருந்தனர்; அதில் கணிசமான அளவு வெற்றியும் கண்டனர் ஆனால் நாடு தழுவிய ரீதியில், அல்லது போதைப் பொருள் பாவனையில் முக்கிய இடத்தை வகிக்கின்றதென்னிலங்கை நகரங்களிலும் இவ்வாறான விழிப்புணர்வு செயற்பாட்டை மேற்கொண்டிருந்தால் இந்தபோதைப் பொருள்பாவனையை ஓரளவு கட்டுப்படுத்தியிருக்கலாம் .

இது இவ்வாறிருக்க போதைப்பொருள் கடத்தலில் அபாயத்தை நெருங்கிக்கொண்டிருக்கும் இலங்கையில் உண்மையான போதைப்பொருள்கடத்தல்காரர்கள் தண்டனையில் இருந்து தப்பிவிடுகிறார்கள். அல்லது அவர்கள் தண்டிக்க முடியாதஅளவு உயர் பதவிகளில், முக்கிய பொறுப்புகளில் உள்ளார்கள். எனவே போதைப்பொருள் கடத்தல் இறுக்கமான சட்ட நடவடிக்கை மூலம் அதனைக்கட்டுப்படுத்த அரசு முனையாவிட்டால் போதைப்பொருள் வறிய மக்களின் வாழ்வை அழித்துவிடும். மக்கள் மத்தியில் உயிர்க்கொல்லி நோய்களைத் தோற்றுவிக்கும். சட்டவிரோத ஆயுத பயன்பாட்டை அதிகரிக்கச் செய்யும், குழு மோதல்களை உருவாக்கும். நாட்டை அழிவுக்குக் இட்டுச் செல்லும்.

அண்மையில் நீர்கொழும்புப் பகுதியில் அமெரிக்காவில் தயாரான கைத்துப்பாக்கி ஒன்று பிரபலமான ஒரு பாதாள உலகக் கோஷ்டிநபரிடம் கைப்பற்றப் பட்டுள்ளது. இக் கோஷ்டி யினரின் பிரதான தொழிலே ஹெரோயின் போன்ற போதைப்பொருட்களை கடத்துவதாகும். இவர்களிடம் அமெரிக்காவில் தயாரிக்கப்பெற்ற இலங்கையில் இதுவரை பயன்பாட்டில் இல்லாத நவீன துப்பாக்கி இருந்துள்ளதானது சர்வதேச ரீதியில் கள்ளச்சந்தை வியாபாரத்தின் வளர்ச்சி எத்தனை தூரம் முன்னேறியுள்ளதென ஊகிக்கலாம்.

கடந்த சில வருடங்களுக்கு முன்னர் சர்வதேச ரீதியில் போதைப் பொருள் கடத்தலுக்கு ஏற்ற நாடாக சீனா விளங்கியது. இதனால் ஏற்படுகின்ற பின்விளைவுகளை கவனத்தில் கொண்ட சீனஅரசு போதைப் பொருள் கடத்தலினை கட்டுப் பாட்டுக்குள் கொண்டுவர அதீத பிரயத்தனங்களை மேற்கொண்டது

புவியியலில் சீனா ஒரு கேந்திரமுக்கியத்துவம் வாய்ந்த இடமாக உள்ளது. இதனுடைய பல ஆயிரம் கிலோ மீற்றர் நீளமான எல்லையும் பல நாடுகளை எல்லையாகவும்கொண்ட சீன போதைப் பொருள் கடத்தல் காரர்களுக்கு ஒரு பொன் முட்டையிடும் வாத்தாக இருந்து வந்தது. இதில் இரண்டு பாரிய போதைப் பொருள் உற்பத்தி செய்யும் பிரதேசங்களை உள்ளடக்கியிருந்தது. ஒன்று தென்கிழக்காசியாவின் தங்க முக்கோணப்பகுதி (Golden Triangle) அடுத்து மத்திய ஆசியா வின் தங்க வளர்பிறை பகுதி (Golden Crescent) இந்த வலயங்களின் எல்லையோரப் பகுதிகள் உலகிலுள்ள சிலகாட்டுப் பகுதிகளை தம்வசம் கொண்டுள்ளன. இதனூடாக போதைப் பொருள்கடத்தலை கண்காணித்து கட்டுப்படுத்துவது சீனாவுக்கு ஒரு தலையிடியாக இருந்தது. இப்பிராந்தியத்தின் போதைப்பொருள் உற்பத்தியில் பிரதான இடத்தை கொண்ட மியன்மாரிலிருந்தே அதிகளவான போதைப் பொருள் சீனாவுக்குள் வந்தவண்ணமிருந்தன. இதைவிட ஆப்கானிஸ்தானில் போதைப் பொருள் அழிப்பு நடவடிக்கை தீவிரமானதால் கடத்தல் காரர்கள் மியன்மார் ஊடாக சீனாவுக்கு போதைப் பொருட்களை கடத்தினர். சீனாவுக்குள் வரும் போதைப் பொருட்கள் அமெரிக்கா, அவுஸ்திரேலியா, கனடா போன்ற நாடுகளுக்கும் கொண்டு செல்லப்பட்டன.

இதனைக் கட்டுப்படுத்த சீனா தன் அதிகாரிகளுக்கு பணித்தது. ஆனால் சீன அதிகாரிகள் சிலரே போதை பொருட்கடத்தலை முன்னின்று செய்துவந்தனர். இதனால் அரசு இவ்வாறான அதிகாரிகள் மீது இறுக்கமான சட்டநடவடிக்கைகளை மேற்கொண்டது. உதாரணமாக தென்மேற்கு சீனாவின் குய்ஷோ (GUI ZHOU) எனும் இடத்திலுள்ள போதைப் பொருள் முறியடிப்பு காவல்துறை பிரிகேட்டின் தலைமை அதிகாரியாக இருந்தவர் ஹீகுன் (Zhou Kun) இவருக்கு 5 கிலோ ஹெரோயின் கடத்தி விற்பனை செய்ததற்காக சீன அரசு மரண தண்டனை விதித்தது. ஆனால் இவர் தன்னை ஓர் அர்ப்பணிப்புள்ள போதைப்பொருள் தடுப்பு அதிகாரியாக காட்டிக்கொண்டவர். போதைப் பொருள் சுமையாளர்களை பிடித்து சிறையிலடைத்தவர். ஆனால் போதைப் பொருள் கடத்தலில் பெரும் பங்கு வகிக்கும் பொரும் புள்ளிகளை நழுவ விட்டு விடுவார். இவ்வாறு சாதாரண போதைப் பொருள் கடத்தல்காரர்களை பிடித்து தன்னை அர்ப்பணிப்புள்ள அதிகாரியாகக் காட்டிய இவர் 2000 ஆம் ஆண்டு சீன அரசினால் தேசிய முன்னேற்றப் பணியாளர் என்று புகழப்பட்டவர். ஆயிரத்திற்கு மேற்பட்டபோதைப் பொருள் கடத்தல் காரர்களை கைது செய்தவர் இவரே. இவ்வாறான அதிகாரிக்கு போதைபொருள் கடத்தியதால் மரணதண்டனை விதிக்கப் பட்டது.

இவ்வாறு சீனா கடுமையான சட்டநடவடிக்கைகளை மேற்கொண்டதுடன் அமெரிக்க போதைப் பொருள் முறியடிப்பு நிர்வாகத்துடனும் (D.E.A) ஏனைய நாடுகளுடனும் இணைந்து போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கையை மேற்கொண்டதுடன் புலனாய்வுத்தகவல்களை பரிமாறிக் கொண்டது. அத்துடன் போதைப் பொருட்களை கட்டுப்படுத்த உள்ளூரில் சில அமைப்புக்களையும் நிறுவியது.

அமெரிக்க சீன போதைப் பொருள் கட்டுப்பாட்டு நடவடிக்கையில் தற்போது விரிசல் ஏற்பட்டுள்ளது. காரணம் வீட்டு வளர்ப்பு கோல்ட்பிஸ் (Gold Fish) மீனினுள் ஹெரோயினை மறைத்து வைத்து சான் பிரான்சிஸ்கோவிற்கு கொண்டு செல்ல முனைந்த முக்கிய புள்ளியை கைது செய்தனர் சீன காவல் துறையினர். இதனால் அமெரிக்க சீன உறவில் விரிசல் ஏற்பட்டது.

இதைவிட போதை பொருள் தடுப்பு நடவடிக்கையின் போது ஹெரோயினுடன் கைதான நபருக்கு சீன அரசு மரண தண்டனை விதித்தது. அதுவும் உடனடியாக நிறைவேற்றப்பட்டது. 2003 யூன் 25இல் இச்சம்பவம் இடம்பெற்றது.

இவ்வாறு இறுக்கமான நடவடிக்கை மூலம் குறிப்பிட்ட நாட்களுக்குள் சீனா போதை பொருள் பாவனையை 20% கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தது.

இதனோடு நோக்குமிடத்து இலங்கையிலும் போதைப் பொருள் பாவனை, கடத்தல் என்றுமில்லாதவாறு அதிகரித்துள்ள இன்றைய காலத்தில் அரசு கடத்தல் காரர்களுக்கும் கடத்தலுடன் தொடர்புடைய அதிகாரிகளுக்கும் கடுமையான அதேவேளை இதய சுத்தியுடன் நடவடிக்கை எடுத்து இலங்கையை அழிவிலிருந்து காப்பாற்றவேண்டிய கட்டாய பொறுப்புஉள்ளது. அதைவிட தற்போது நடைமுறையில் உள்ள போதைப்பொருள் தடுப்பு ஒத்துழைப்பு திட்டத்தில் பங்குகொள்ளும் நாடுகளுடன் ஆலோசித்து இறுக்கமான நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டியபொறுப்பு ஆசியப் பிராந்தியத்தில் இலங்கைக்கு ஏற்பட்டுள்ளது.

**அ.பிரகாஷ்**

---

# படையினரால் பறிக்கப்பட்ட அப்பாவி இளைஞனின் உயிர்

கடந்த 14.11.2004 அன்று A9 வீதியில் கொடிகாமத்திற்கு அருகில் உள்ள இராமாவில் கோவில் அருகே இராணுவ நீர்தாங்கி வாகனம் மோதியதில் கல்வியங்காட்டைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் பலியானார். இதனையடுத்து அப்பகுதியில் கூடிய மக்கள் A9 போக்குவரத்தை தடை செய்து தங்கள் எதிர்ப்பைக் காட்டினர். அத்துடன் இறந்த இளைஞரின் சடலத்தை படையினர் அப்புறப்படுத்த முற்பட்டதற்கும் எதிர்ப்புத் தெரிவித்தனர். படையினரின் நீர்தாங்கி வானத்தினையும் பொலிசாரின் உந்துருளியையும் வாகனத்தினையும் எரிக்க முற்பட்டனர். இதனால் படையினரும் பொலிசாரும் அங்கு கூடிய மக்கள் மீது தடியடி கண்ணீர்ப் புகை பிரயோகம் மேற்கொண்டனர். அத்துடன் கண்மூடித்தனமாக பொதுமக்கள் தாக்கப்பட்டனர்.

இவைகள் நாம் அறிந்த சம்பவங்கள். ஆனால், ஒரு மனித உயிர் அநியாயமாக பலிகொள்ளப் பட்டதற்கு மனிதம் உள்ள எவரும் பொறுத்துக்கொள்ள மாட்டார்கள். அந்த வகையிலேயே மக்கள் அங்கே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர் எதிர்ப்பைக் காட்டினர். ஆனால் பாதுகாப்புப்படையினர்...? அவர்களை தாக்கியதுடன் செய்தி சேகரித்த பத்திரிகையாளரையும் தாக்கியுள்ளார்கள்.

அத்துடன் நிற்கவில்லை மக்கள் மீது காழ்ப்புணர்வு கொண்ட பாதுகாப்பு படையினர் (?) இரவோடு இரவாக அப்பகுதியில் கட்டப்பட்டிருந்த மாவீரர் நாள் பதாதைகளையும் அறுத்தெறிந் துள்ளார்கள்.

இச்சம்பவம் நடைபெற்று அதனுடைய எதிரொலி அடங்க முன்னர் மீசாலையில் உந்துருளியில் பயணித்த பயணி மீது வீதி விதிமுறைகளுக்கு புறம்பாக துவிச்சக்கர வண்டியில் வந்த படைச் சிப்பாய் மோதியுள்ளார்.



மேற்படி சம்பவங்கள் யாழ்குடாநாட்டில் நிலை கொண்டுள்ள பாதுகாப்பு படையினரின்(?) செயற்பாடும் அவர்கள் மக்கள் மீது காட்டும் ஒரு வெறுப்பான மனப்பாங்கு கொண்டு மக்களை எதிரியாக எண்ணி நிகழ்த்திக் கொண்டு இருக்கும் அரஜாங்கங்களை வெளிக்காட்டியுள்ளது. அவர்களின் அறிவு கல்வி,பண்பு போன்ற மட்டங்களையும் தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளது.

பாதுகாப்புப்படையினர் என்றால் பாதுகாப்பு மக்களுக்கானதுதானே? மக்களை பாதுகாக்கவேண்டியவர்கள் ஏன் அவர்களை மதிப்பதில்லை? அவர்களின் உயிர்களை ஒரு துரும்பென கருதுகின்றார்களே ஏன்? இவர்களுக்கு வாகனம் செலுத்துதல்தொடர்பில் அறிவுண்டா? என்ற கேள்விகள் எழுகின்றன. இதற்கு விடைபகருவதுபோல் அண்மையில் இராணுவத்தளபதி ஒருவரின் கூற்று உள்ளது. அதாவது படையினருக்கு கல்விஅறிவு பற்றாக்குறையே பல்வேறுபிரச்சினைகளுக்கு வழிசமைக்கின்றதென கூறியுள்ளார் .

தென்னிலங்கையில பல சமூக விரோத செயற்பாடுகளில் ஈடுபட்டு வந்த இவர்கள் யுத்தம் தீவிரமடைந்து வந்த வேளை இன அழிப்பிற்காக சமூக விரோத செயற்பாட்டினால் தண்டனை பெற்று சிறையில் அடைக்கப்பட்ட இவர்களை படையில் இணைத்து போர்களத்திற்கு அனுப்பப்பட்டவர்கள். இவர்களால் எவ்வாறு மக்களிடம் சுமூகமாக நடந்துகொள்ளமுடியும் எனவேதான் இவர்கள் யாருடைய வரிப்பணத்தில் சம்பளம் எடுக்கிறார்களோ அவர்களையே தாக்குகின்றார்கள். இவர்களுக்கு பொருத்தமான பெயர்தான் பாதுகாப்புப்படையினர். இவர்கள் பாதுகாக்க விரும்புவது யாழ். மண்ணில் உள்ள கைக்கூலிகளை மட்டுமே; மக்களை அல்ல.

இவர்களின் அநீதிக்கெதிராக கிளர்ந்தெழும் மக்களை தங்கள் துப்பாக்கி முனையிலும், தாக்குதலிலும் அடக்கிவிடலாம் என்ற எண்ணம் இவர்களிடம் உண்டு. இது பருப்புக்கும், பாணுக்கும் வாக்களித்து ஏங்கித்தவிக்கும் தென்னிலங்கை மக்களிடம் எடுபடலாம். ஆனால் அநீதிக்கும் அடக்கு முறைக்கும் எதிராக போராடிக் கொண்டிருக்கும் மக்களிடம் எடுபடாது என்பதனை இவர்கள் இன்னும் உணர்ந்துகொள்ளாதது வேதனையே.

இவ்வாறு அரச இன அழிப்பின் நோக்கில் இராணுவத்தில் இணைத்துக்கொள்ளப்பட்ட காடையர்களுக்கு அறிவு புகட்ட? இல்லை! வீதியில் வாகனம் செலுத்தும் விதிமுறை தொடர்பான அறிவையாவது படைத்தலைமை புகட்ட முற்படுமா? அல்லது அழிவது தமிழன் தானே என விட்டு விடுமா என்பதே இப்போதுள்ள கேள்வி. அவ்வாறு விட்டுவிட்டால் மக்கள் அறிவு புகட்டுவார்கள். இதற்கு கொடிகாமச் சம்பவம் ஓர் உதாரணம்.

**அ.அருள்**

# மாறுதலுக்குரிய காலங்களில் சர்வதேச போக்கை நிர்ணயிக்கும் சக்திகள்

நாற்றிசை நட்பு

சர்வதேச அரசியலின் போக்கானது மாறுபட்டதாக அமைந்தாலும் சில அடிப்படைகளை உள்ளார்ந்தமாகவே கொண்டிருக்கின்றது. மாறுதல் கட்டங்கள் ஏற்படும் சந்தர்ப்பத்தில் எல்லாம் சர்வதேச போக்கை நிர்ணயிக்கும் சக்திகள் தமக்குரியதாக மாற்றி விடுகின்றன. இது பொதுவான இயங்குதிறனை காட்டும் ஒன்றாக அமைந்திருப்பதோடு உலகத்தையும் அதன் போக்கையும் அச்சக்திகளே நிர்ணயித்து விடுகின்றன. குறிப்பாக ஈராக்கில் பலூஜா மீதான தாக்குதலையும், பலஸ்தீன விடுதலைப் போராட்டத்தைப்பற்றிய மாற்றத்தையும் அவதானிக்கலாம். இவை இரண்டு ஒரே அடிப்படையில் எழுந்த வேறுபட்ட சம்பவங்களாகும்.



பலூஜா நகரை தீவிரவாதிகளிடமிருந்து அமெரிக்க


துணைபோகின்றதென குற்றம் சாட்டப்பட்டுள்ளது. பெருமளவான தாக்குதல்கள் மக்களையும் அவர்களது வாழ்வாதாரத்தையும் இலக்குவைத்தே நகர்த்தப்பட்டுள்ளது. இதனால் தீவிரவாதத்தை அழிக்க முடியுமென அன்றி வேறு எந்த விதத்திலும் அவ்வரசை பொறுப்புடையதாக உருவாக்கவில்லை.

ஆனால் ஈராக்கில் அமெரிக்க இராணுவம் சந்தித்து வரும் நெருக்கடிகள் முழு உலகத்தின் போக்கிலும் புதிய அனுபவமல்ல. வல்லரசுகள் தமது ஆதிக்கப்போக்கை நிர்வகிப்பதற்கு ஏதாவது ஒரு நாடுமீதோ அல்லது மக்கள் மீதோ தாக்குதல் நடத்த வேண்டியுள்ளது. இந்த வகையில் பலூஜா நகரம் மிக மோசமான பின்னடைவையும் ஆபத்தினையும் சந்தித்துள்ளது. அபிவிருத்தி, சனநாயக சுதந்

நாட்டை உருவாக்குவதற்கென புஷ் குறிப்பிட்டுள்ளார். பலஸ்தீனத்தில் சுதந்திரம், சனநாயகம், சமாதானம் நிலவ வேண்டுமென இருநாட்டுத் தலைவர்களும் கூறியுள்ளனர். இவ்வாறு இவர்கள் பலஸ்தீன நாடு உருவாக்குவதற்கான வாய்ப்புக் கிடைத்துள்ளதெனக் கூறுவதற்கான பின்னணி எதுவென்பதை நோக்குவோம்.

அப்படியாயின் அரபாத் பலஸ்தீன நாடு உருவாவதை விரும்பவில்லையா என்றவினா இயல்பாக தோன்றும். உண்மையில் புஷ்ஷும் பிளயரும் விரும்புகின்ற பலஸ்தீன நாடு அல்ல அரபாத் விரும்பிய நாடு இரண்டுமே ஒன்றிலிருந்து ஒன்று வேறுபட்டது. இன்று

அபிலாசைகளை நிறைவேற்றவே பலஸ்தீனம் போன்ற அரசுகளும், மக்களும் காணப்படுவதுடன் மேற்கின் பொருளாதார நன்மைகளை அடைவதற்கான வாய்ப்பையும் ஏற்படுத்தும். இவ்வாறான வாய்ப்புக்களை கொண்டே அமெரிக்காவின் விஸ்தரிப்பும் இராணுவ



கூட்டுப்படைகள் கைப்பற்றி விட்டதாகத் தெரியவந்துள்ளது. ஆனால் தொடர்ந்துதாக்குதல்கள் நிகழ்வதனை பன்னாட்டு செய்தி ஊடகங்கள் உறுதிப்படுத்தி வருகின்றன. பாரியளவான உயிர் சேதங்களை விளைவித்த தாக்கு



தலாக அமைந்திருப்பதுடன் அமெரிக்க கூட்டுப்படைகளுக்கு அதிகபாதிப்பினை ஏற்படுத்தியுள்ள தாக்குதலாகவும் காணப்படுகின்றது. பலூஜா நகரமே அழிவது போன்ற தாக்குதலை நிகழ்த்திய அமெரிக்க கூட்டுப்படைகள் மக்களை மிகமோசமான பிடிக்குள் சிக்கவைத்துள்ளன. மக்களை தீவிரவாதிகளென கூறிக்கொண்டு தாக்குதல் நிகழ்த்துவதாகவும் சாதாரணமக் களை தீவிரவாதத்திற்கு உதவு வதாக கூறி தாக்குதல் நிகழ்த்து வதாகவும் தெரியவருகின்றது.

இதே சந்தர்ப்பத்தில் இடைக்கால அரசை விமர்சித்து மக்கள் வீதியில் குதித்து ஆர்ப்பாட்டம் நிகழ்த்தியுள்ளனர். ஈராக்குக்காக உருவாக்கப்பட்ட அரசாங்கம் அவசரகாலச் சட்டத்தை அமுல்படுத்தி தீவிரவாதத்தை அழிப்பதெனக்கூறிக் கொண்டு மக்களை அழிக்கவே

அமெரிக்க இராணுவமே பல இடத்தில் பிரயோகித்து தோற்றுப் போனது. அதனையே மீண்டும் மேற்கொள்வதனால் அழிவைமட்டுமே நிகழ்த்தலாம். ஆனால் நிச்சயமாக அமெரிக்கா இராணுவத்தினதும் அதன் ஆட்சியாளரினதும் பிரதான நோக்கம் இஸ்லாமிய இனத்தின் அழிவை கணிசமாக சாத்தியப்படுத்துவதே தீர்வுக்கான வழியாக கருதுகிறது போலவே காணப்படுகின்றது.

**ஐங்கரன்**


இவ்வகையான தாக்குதலின் ஆரம்பம் தற்போதுதான் நிகழ்கிறதென்று கூறிவிடமுடியாது. அது மிக நீண்டகாலமாக நிகழ்ந்துவரும் ஓரம்சமே. ஆனால் இவ்வகையான தாக்குதல்களின் எதிரொலிப்புக்கள் ஈராக்கிய இடைக்கால அரசையும் அதன் அடுத்தகட்டத்தேர்தலையுமே பாதிப்பதாக உள்ளது. இவ்வகையான விடயங்களை மேற்கொண்டு வரும் அமெரிக்கப் படைகள் ஈராக்கின் இடைக்கால அரசை பயன்பாட்டுக்கும், பிரயோகப்படுத்துவதற்குமாகவே தயார் செய்துவருகின்றதே

திரம் என்பனவற்றை எல்லாம் அமெரிக்கர் தமது நலனுக்கும் ஆட்சிக்காகவும் வைத்துக் கொண்டு செயல்படுகின்ற தன்மையே வெளிப்படுத்துகின்றது.

பலூஜா போன்று பலஸ்தீனமும் இக்கட்டான நெருக்கடிமிக்க அரசியல் சூறாவளிக்குள் அகப்பட்டுள்ளது. அப்பாஸ் தாக்கப்பட்டுள்ளமையும் பலஸ்தீன அரசாங்கத்தின் அடுத்த கட்ட நகர்வு உள் அக முரண்பாட்டுக்குள் அகப்பட்டு விடலாமென சந்தேகிக்கப்படுகின்றது. யசீர் அரபாத் மிக மோசமானவராகவும், நலன்களை அனுபவித்தவராகவும் குற்றச்சாட்டுக்கள் எழ மறுபக்கத்தில் அரபாத்தின் மனைவி சுஹாவை அரசியலுக்குள் கொண்டுவர முடியாத மேற்கின் தோல்விகள் இத் தகைய அகமுரண்பாட்டை மேலும் அதிகரிக்க வாய்ப்பை கொடுப்பவையாகவே காணப்படுவன. இயல்பாக இஸ்லாமிய அடிப்படைவாத சக்திகளின்பலவீனங்களும், மாற்று அரசியல் பற்றி சிந்தித்துக் கொண்டிருக்கும் சகோதரசக்திகளும் அக முரண்பாட்டை வளர்ப்பவையாகக் காணப்படுவன.

இவ் அக முரண்பாடு திட்டமிட்ட அடிப்படையில் மேற்கு சக்தியினாலும் இஸ்ரேலினாலும் வளர்க்கப்பட்டு வருகின்றது. இதனை முறியடிக்கும் பலம் ஆளுமை என்பன தற்போதைய பலஸ்தீன தலைமையிடம் உண்டா என்பது சந்தேகத்துக்குரியதாகவே உள்ளது. அந்தவகையில் அமெரிக்க, பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் கூறியிருப்பது அதிர்ச்சியான செய்தியா கவே அமையும். இது நல்ல தருணம் பலஸ்தீன

ஈராக்கில், ஆப்கானிஸ்தானில் அமைந்தது போல் போலியான சனநாயகம், சுதந்திரம், அமைதியைக் கொண்ட ஒரு நாட்டைப் பற்றியே இரு வரும் பேசிக்கொள்கின்றார்கள். அரபாத்தினால் பலஸ்தீன அரசமைப்பது பற்றிய தெளிவான போக்கோ அல்லது திட்டமோ இல்லாது விட்டாலும் மேற்குலகம் கூறியவற்றுக்கெல்லாம் ஆமாப்போட்டவராக அரபாத்



இல்லை என்பதே புஷ், பிளயர், அவ்வாறு கூறியமைக்குக் காரணமாகும்.

அரபாத்தின் போக்கில் அல்லாத ஓரரசை தற்போது அமைப்பதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளது என்பதே அவர்களது கருத்தாகும். அவ்வகைய அரசு பலஸ்தீனர்களுக்காக அல்லாது அமெரிக்கர்களுக்கும் அவர்களது கூட்டாளிகளுக்குமுரியதாகவே உள்ளதாகும். அதனையே மேற்குலகம் விரும்புகின்றது.

மேற்கின் அரசியல் ஆதிக்கமும் உலகத்திற்கு பொதுவானதாக அமையும். எனவே அதனை இலக்காகக் கொண்டே பலஸ்தீன அரசை அமைப்பது பற்றிய திட்டமிடலை வெளிப்படுத்தியுள்ளனர்.

பொருளாதார அடிப்படையில் பலஸ்தீனம் போன்றவற்றால் நன்மை இல்லாவிட்டாலும் இத்தகைய அரசுகளிடமிருந்து எதிர்ப்புகள் ஏற்படக் கூடாது என்பது பொதுவான எதிர்பார்ப்பாக மேற்குலகம் கொண்டிருக்கின்றது.

ஆனால், மேற்கு விரும்புவதுபோல் குறைந்தபட்ச அரசை அமைப்பதில் கூட இஸ்ரேலிய தரப்பு இடம் கொடுக்குமா என்பது சந்தேகமாகவுள்ளது. மேற்குடன் நெருக்கமான அரசாக இஸ்ரேல் காணப்பட்டாலும் ஓர் எல்லைக்கு அப்பால் தனது பாதுகாப்பையும் மக்களின் பாதுகாப்பையும் இழக்கும் நிலைக்குள் இஸ்ரேல் தரப்பு செயல்படாது என்பது குறிப்பிடக் கூடியது. அவ்வாறு இஸ்ரேல் தரப்பு செயல்பட்டாலும், சுமூகத்தன்மையை சாத்தியப்படுத்தினாலும் பலஸ்தீனர்கள் மத்தியில் எழுந்துள்ள அகமுரண்பாட்டுச் சக்திகள் தெளிவான தீர்வை சாத்தியப்படுத்த அனுமதிக்கும் என எதிர்பார்க்க முடியாது.

முடிவாக பலூஜாவும் பலஸ்தீனமும் அமெரிக்க வல்லரசின் அரசியலில் இன்னோர் முனைகளாகவே அமைந்துள்ளன. உலகம் பொம்மை அரசுகளின் கூட்டால் உருவாக்கப்பட வேண்டுமென அமெரிக்கா சார்ந்த மேற்குலகம் விரும்புகிறது. ●

# நிறைவேற்று அதிகாரத்துக்கு முடிவுகட்ட...



நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி முறையை நீக்குவது தொடர்பாக கடந்த 10 வருடங்களுக்கும் மேலாகப் பேசப்பட்டு வந்தபோதும் இப்பொழுது அதுதொடர்பான சில முயற்சிகள் துரிதப்படுத்தப்பட்டுவருகின்றமையை தகவல்கள் வெளிப்படுத்துகின்றன. அதிலும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி முறையை ஓராண்டுக்குள் அல்லது அதிகபட்சம் 2006 டிசெம்பருக்குள் நீக்கியேயாக வேண்டிய தேவையிலுள்ளார். அல்லாவிடின் அது அவரது அரசியல் வாழ்வுக்கு முடிவாகிவிடக் கூடும்.

இவ்வாறு சனாதிபதி முறையை நீக்கினாலும் பிரதமருக்கு அதிகளவு அதிகாரம் அதாவது தற்போது நிறைவேற்று அதிகாரம்கொண்ட சனாதிபதிக்கு இருக்கின்ற சில அதிகூடிய அதிகாரங்களை நீக்கிவிட்டு பிரதமருக்கு நிறைவேற்று அதிகாரங்கள் வழங்குவது தொடர்பிலேயே இப்பொழுது ஆராயப்படுவதாக தெரியவருகிறது. நிறைவேற்று அதிகாரம் கொண்ட பிரதமராக சந்திரிகா குமாரதுங்க மாறுவது குறித்து அண்மையில் இந்துப் பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியில் அரசியலமைப்பு மாற்றம் பாதி அரசியலமைப்பு மாற்றமாக இருக்கலாம் எனக்கூறியிருக்கிறார்.

அதேபேட்டியில் அரசியல் நிர்ணய சபை தொடர்பான முழுநடைமுறைகள், மற்றும் சர்வசனவாக்கெடுப்பு தொடர்பாக இவற்றை எவ்வாறு நடைமுறைப்படுத்துவது என்பது குறித்து பேராசிரியர் பீரிஸ் முன்னரே எழுதித்தந்திருப்பதாக சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க கூறியிருக்கிறார்.

ஆனால், அரசியல் நிர்ணய சபை என்பது அரசியலமைப்புக்கு முரணானது என தற்போது பீரிஸ் கூறிவருகின்றார். எவ்வாறாயினும் இதில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனக்குச் சாதகமான சில விடயங்களை வைத்திருப்பார் என எதிர்பார்க்கலாம். ஆனால், அது எவ்வளவு தூரம் சாத்தியமாகும் என்பது கேள்விக்குரிய விடயமாகும்.

ஐக்கிய தேசியக் கட்சி நிறைவேற்று அதிகாரம்கொண்ட சனாதிபதி முறையை முற்றுமுழுதாக மாற்றியமைப்பதற்கு விரும்பவில்லை. நாடாளுமன்றத்துக்கோ நீதிமன்றத்துக்கோ பொறுப்பின்றி வரம்பற்றமுறையில் சனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை ஒழிக்க ஆதரவு வழங்கப்போவதாகக் கூறுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியைப் பொறுத்து நிறைவேற்று அதிகாரம்கொண்ட சனாதிபதி முறையை நீக்குவதில் அதற்கு அக்கறையுமில்லை. அதனை ந'க்கப்போவதாகக் கூறவும இல்லை. ஆனால், சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் முதலாவது ஆட்சிக்காலத்தில் இதனை மாற்றுவது தொடர்பான பிரச்சினை எழுந்தபோது சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனது பதவிக்காலம் முடிந்த பின்னர் சனாதிபதி முறையை நீக்க விரும்பினார். ஆனால், ஐ.தே.க. உடன் சனாதிபதிமுறை நீக்கப்படுமானால் அதற்கு ஆதரவு வழங்குவதாகக் கூறியது. அத்துடன் மேலும் சில மாற்றங்களையும் சனாதிபதி சந்திரிகா கொண்டுவர முயன்றதாகவும் குறிப்பாக தனது அதிகாரப் பகிர்வு குறித்தயோசனைகளை கொண்டுவர முயன்றதாலும் அப்பொழுது அம்முயற்சி பலன் தரவில்லை. இப்பொழுது ஐ.தே.க தனது நிலைப்பாட்டை வெளியிட்டிருக்கிறது. அதாவது நிறைவேற்று அதிகாரமுறை இலங்கை போன்ற நாடுகளுக்கு அவசியம் என்றும் ஆனால், சனாதிபதியின் அதிகாரங்கள் குறைக்கப்படு வதற்கு- நெருடலாக உள்ள அதிகாரங்களை நீக்குவதற்குத்தாம் சம்மதம் என்றும் கூறியுள்ளது.

அடுத்த பெரும் கட்சியான ஜே.வி.பி. சனாதிபதி முறை முற்று முழுதாக மாற்றப்படவேண்டுமென முன்பிருந்தே கூறிவருகிறது. அதற்கு ஆதரவு வழங்கவும் தயாராக இருப்பதாகக் கூறிவருகின்றது. ஆனால், ஜே.வி.பியின் ஆதரவு மூன்றிலிரண்டு பெரும்பான்மையைப் பெற போதுமானதாக இல்லை. அத்துடன் சனாதிபதி சந்திரிகாவின் நோக்கம் நிறைவேறக்கூடிய வகையில் ஐ.தே.க நடந்துகொள்ளாத அதே வேளை ஜே.வி.பியும் தனக்குச் சாதகமற்ற முறையில் ஆதரவை வழங்காது.

எனினும் இப்பொழுது சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எடுக்கும் முயற்சிகள் அவருக்கு எவ்வாறான விளைவைத்தரும் மூன்றிலிரண்டு பெரும்பான்மையின்றி அவர் நினைத்ததைச் சாதிக்கமுடியுமா? என்பதெல்லாம் இப்பொழுது சர்ச்சையிலுள்ள விடயங்களாகும்.

**வேலவன**

## நேர்நோக்கு

# மக்களின் குறைகள் இன்னும் தீரவில்லை

பெரும்போரையும் போரின் சுமைகளையும் கடந்த இருசகாப்தங்களாக சுமந்து வந்த எமது தாயகத்து மக்கள், இன்று மௌனவழியில் பயணித்துக் கொண்டு இருக்கின்ற சமாதான சூழலில் பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் முகம் கொடுத்து வாழவேண்டிய ஒரு துர்ப்பாக்கிய



நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளனர். கல்வி, பொருளாதாரம், சுகாதாரம், போக்குவரத்து உள்ளிட்ட அடிப்படை வசதிகள் இதுவரையில் எந்த வளர்ச்சிப் போக்கையும் எட்டவில்லை என்பதை விட, எமது மக்களுக்குக் கிடைக்கப் பெறவில்லை என்பதே பொருத்தப்பாடானது.

எமது தாயகப் பகுதிகளில் கணிசமான பிரதேசங்களைவிட பெரும்பாலான பகுதிகள் இராணுவ ஆக்கிரமிப்புக்கள் மூலம் ஆக்கிரமிக்கப்பட்டு விடுவிக்கப்பட்ட நிலையில் எந்த ஒரு அபிவிருத்திப் பணிகளும் இதுவரையில் முழுமையாக செய்துமுடிக்கப்படவில்லை. சாதாரண அடிப்படைவசதிகளைக் கூட பெற்றுக் கொள்ளமுடியாத அவல நிலையில் இன்றும் எமது மக்கள் சொல்லொனா துன்பதுயரங்களை அனுபவித்து வருகின்றனர். அந்தவகையிலே, எமது தமிழ்மாணவர்களின் கல்வித்தேவைகள் பற்றிநோக்குவோமாயின் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் உள்ள, பாடசாலைகள் இராணுவ ஆக்கிரமிப்புக்கள் மூலம் முற்றாக அழிக்கப்பட்ட நிலையில் மீளவும் தற்காலிகக் கொட்டகைகளில் இன்றும் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன. அண்மைநாட்களாக பருவமழை பெய்ய ஆரம்பித்துள்ள நிலையில் சில பாடசாலைகள் இயங்கமுடியாத அவலநிலையில் உள்ளன. இதேபோன்று வவுனியா வடக்குப் பகுதியில் 83 பாடசாலைகளில் இரண்டுபாடசாலைகள் மட்டுமே எஞ்சியிருந்தன. அதாவது இராணுவத்தினர் நிலைகொண்டிருந்த இருபாடசாலைகளை தமது பாவனையில் வைத்திருந்தமையால் இரு பாடசாலைகளையும் அழிக்கவில்லை. ஏனைய 81 பாடசாலைகளையும் முற்றாகவே படையினர் அழித்துவிட்டு சென்றனர். இன்று ஒவ்வொருபாடசாலைகளும் புதிதாக அமைக்கவேண்டிய நிலை. அவற்றை அமைப்பதற்கான நிதியினை உரியமுறையில் வழங்க அரசுமுன்வராமை. இது போன்று தமிழர் தாயகப்பகுதிகள் முற்றாகவே புறக்கணிக்கப் பட்டுவருகின்றன.

மருத்துவ வசதி என்பதில் எந்த மாற்றமும் இல்லை. போர்ச்சூழலில் கணிசமான அளவு மருந்துகள் வந்தவண்ணம் இருந்தன. தற்பொழுது கூடுதலான மருந்துகளுக்கான தட்டுப்பாடுகள் நிலவிவருகின்றன. பெரும்பாலான மருத்துவமனைகளில் மருத்துவர் பற்றாக்குறை, இவ்வாறு உள்ளபிரதேசங்களில் உள்ள வீதிகள் புனரமைக்கப்படாத நிலையில் போக்குவரத்துக்கள் மேற்கொள்ளமுடியாத நிலை. இவ்வாறு உள்ள சிலபகுதிகளில் விடுதலைப்புலிகளின் மருத்துவப்பிரிவான தியாக தீபம் திலீபன் மருத்துவசேவையினர் மருத்துவ நிலையங்களை, அமைத்து மருந்துவசேவையினை, மேற்கொண்டுவருகின்றனர். இது ஓரளவு உதவியாக உள்ளதாக அவ்வப் பகுதி மக்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

அடுத்து முக்கிய பிரச்சினை, பொருளாதாரப்பிரச்சினை, இன்றைய சூழலில் தமிழர் தாயகப் பகுதிகளில் 60 வீதமான இளைஞர் யுவதிகள் கல்வி கற்றுவிட்டு, அல்லது கல்வியை இடை நிறுத்திவிட்டு முற்றாகவே, பாடசாலை செல்லாது தொழில்வாய்ப்பின்றி பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். தமது அடிப்படை வசதிகளை, பூர்த்தி செய்யமுடியாதுள்ளனர். அதைவிட குடும்பங்களின் சுமைகளைத்தாங்கி நிற்பவர்கள் பல்வேறுபட்ட பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகின்றனர். அந்தவகையிலே, கிளிநொச்சிநகரில் உள்ள, அன்றாடம் கூலித்தொழில் செய்யும் ஒரு கீழ்மட்ட வருமானம்பெறும் குடும்பத் தலைவரைச் சந்தித்தபோது அவர் முன்வைத்த கருத்துக்கள் யாவும் நியாயமானது தான் அதாவது, தனது குடும்பத்தில் ஆறு அங்கத்தவர்கள் உள்ளதாகவும் அதில் உழைக்கும் நிலையில் தான்மட்டும்தான் உள்ள தாகவும் கூறினார். அன்றாட கூலித்தொழிலுக்குச சென்றால், நாள் ஒன்றிற்கான வேதனமாக 250முதல், 300 ரூபா கிடைப்பதாகவும் அது தற்பொழுது பொருட்களின் விலையுடன் ஒப் பிடுகையில் தனது குடும்பவாழ்விற்கு, போதாது எனவும் தெரிவித்ததுடன் தற்போது பொருட்களின் விலை, நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்றது. அதாவது அரிசி ஒருகிலோ- 35 ரூபாவிற்கு மேல் எட்டிவிட்டது. அதேபோன்று ஏனைய பொருட்களின் விலையும் எட்டிப்பிடிக்க முடியாத நிலையில் உயர்வடைந்து செல்கின்றது. வாழ்க்கைச் செலவு பிள்ளைகளின் கல்விச் செலவு என பணத்தின்தேவை, நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்லும் நிலை எல்லாநாளும் வேலை இருக்கும் என்பது இல்லை. குறைந்தது இரண்டு நாட்கள் வேலை இல்லாது விட்டால் எமது குடும்பத்தின்நிலை மிகமோசமான நிலைக்குத் தள்ளப்பட்டுவிடும். அதைவிட முன்னர் இருந்த எமது வீட்டினை இராணுவத்தினர் முற்றுமுழுதாக அழித்துவிட்டனர். தற்பொழுது தற்காலிக வீடொன்றை அமைத்து அதனுள் வாழ்வு ஓடிக்கொண்டு இருக்கின்றது. நிம்மதியாக வாழ ஒரு வீடுகூட இல்லை. என அவர் தனது மன ஆதங்கத்தை வெளிப்படுத்தினார். இந்நிலை தமிழர்தாயகத்தில் உள்ள 80 வீதமான மக்கள் அனுபவித்துவரும் ஒரு பெரும் அவலவாழ்வு. இன்று போரினால் சிதைக்கப்பட்ட எமது தாயகத்தில் உதவிகள் செய்வதாகவும், உதவி புரியவுள்ளதாகவும் வந்து மக்கள் மத்தியில் பல்வேறு பிரசாரநடவடிக்கைகளை மேற்கொண்டு மக்களை ஏமாற்றிவிட்டு அதற்காக ஒதுக்கீடு செய்யும் நிதியை கொண்டு தம்மை வளப்படுத்திக்கொண்டு வாழ்க்கை ஓட்டுகின்றனர். ஆனால் மக்களுக்கு, ஓரிரு, விரல் விட்டு எண்ணக்கூடிய நிறுவனங்கள் மட்டுமே சேவையாற்றி வருகின்றன. போரின் போது அரசு திட்டமிட்டு எவ்வாறான புறக்கணிப்புக்களை எமது மண்ணில் எமது மக்களுக்கு செய்துவந்ததோ அதேசெயற் பாட்டைத்தான் இன்றும் செய்துவருகின்றது என்பது தெட்டத் தெளிவாகத் தெரிகின்றது.

**சு.பாஸ்கரன்**

தீவகத்தின் நுழைவுப்பாதைகளை மூடிவிட்ட சிறிலங்கா படைகள் புங்குடுதீவு நோக்கி நகரத்தொடங்கின.

அதற்கு முன்பதாக பண்ணைப்பாலத்தின் தென்பகுதிக்கு நகர்ந்திருந்த சிங்களப்படைகளின் யாழ்ப்பாண தளபதியான பிரிகேடியர் விஜய விமலரட்ண விடுதலைப்புலிகள் நடத்திய எறிகணை வீச்சினால் காயமடைந்தார். அத்துடன் ஏனைய படையினருக்கும் 'சேதங்கள் ஏற்பட்டன.

இதன்பின் புங்குடுதீவு நோக்கி வேலணையிலிருந்து சிங்களப்படைகள் நகர ஆரம்பித்தன. முன்னரே தெரிவிக்கப்பட்டது போல தீவுகளின் அப்போதைய வாசிகளாக வயோதிபர்களே எஞ்சியவர்களாவர். புங்குடுதீவின் வசதியான பெரிய வீடுகள் வெறிச்சோடிக்கிடந்தன. அவற்றில் சிலவற்றில் மட்டும் வயோதிபர்கள் சிலர் இருந்தனர். சிங்களப்படைகள் இந்த இரு தீவுகளையும் அலசித் துடைத்தெடுத்தனர் என்று சொல்லமுடியாது. குறிப்பாக புங்குடுதீவில் மக்கள் பயன்படுத்த புறம்போக்கு வெளிகள், பற்றைக்காடுகள் பெருமளவில் கிடந்தன. படைகள் பிரதான சாலைகளுடன் மட்டும் நின்றுகொண்டன. அச்சம் காரணமாக அவை அந்தப்பகுதிகளுக்கு செல்லவில்லை. ஆக படைகள் சல்லடைபோட்டுத்தேடாத தீவாக அதுவே இருந்தது. புங்குடுதீவில் இருந்தவர் பட்ட அவலம் பற்றிப் பின்னர் பார்க்கலாம். சிங்களப்படைகள் தீவகத்தின் முழு ஆக்கிரமிப்புக்கும் தலைமையகமாக படை பிரிகேட்தளத்தை ஊர்காவற்றுறையில்



23

# ஒரு பயணத்தின் மீள்நினைவுகள்...

அமைத்தது. சிறிலங்கா படைகள் ஊர்காவற்றுறை முதல் மண்டைதீவுவரை கரையோரம் எங்கும் தொடர் காவலரண்களை அமைத்தன.

இந்தக்காவலரண்கள் கடற்கரையோரத்தில் இருந்த இந்த அரண்கள் மூலம் யாழ்ப்பாணத்தின் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளை இலகுவாக அவதானிக்கலாம்.

மிகக்குறுகிய தூர இடைவெளியாக கடல் இருக்கிறது.

சுமார் 100 மீற்றர் இடைவெளியில் இந்த அரண்கள் படையினரால் அமைக்கப்பட்டிருந்தன. அதாவது படையினரின் ஏற்பாட்டைப் பொறுத்தவரை ஒரு ஈ, காக்கா கூட தீவுக்குள் நுழைய முடியாதபடிக்கு அவை இருந்தன. அதேவேளை மண்டைதீவில் கடற்படைத்தளம் ஒன்று அமைக்கப்பட்டது.

மண்டைதீவு கடற்படைத்தளம் கிழக்குக் கடலேரியை அவதானிப்பதற்கானதாகும். அங்கு இக்கடலை அவதானிப்பதற்கு அதாவது விடுதலைப்புலிகளின் நடமாட்டத்தை அவதானிக்கவென ராடார் நிலையமும் கூட அமைக்கப்பட்டது. இதற்கு நேர்கிழக்காக பூநகரியில் அமைந்த படைத்தளத்திலும் இக்கடலை அவதானிக்க கடற்படைத்தளம் அமைந்தது. இந்தப்பக்கம் இப்படி இருக்க, சிறிலங்கா படையினர் தளம் அமைக்காத தீவுகளும் இருந்தன. அவை நெடுந்தீவு, அனலைதீவு, எழுவைதீவு. தீவகத்தின் முன்பகுதிகள் தமது கட்டுப்பாட்டில் இருப்பதால் இவற்றுள் எதையும் செய்யமுடியாது என்ற இறுமாப்பே இந்தத்தீவுகளில் அவர்கள் நுழையாத காரணம். ஆனால், நெடுந்தீவைப்பொறுத்தவரை அவர்கள் அதில் நுழையாததற்குக் காரணம் அச்சம்தான். ஏனெனில் அது ஏனைய தீவுகளிலிருந்து தொலை தூரத்தில் இருந்ததாகும்.

விடுதலைப்புலிகள் தாக்குதலை நடத்தினால் தமது படைகளுக்கு உதவமுடியாது என்ற அச்சம் காரணமாகவே அவர்கள் நெடுந்தீவில் தமது பிரசன்னத்தை வைக்கவில்லை.

ஆனால், சிறிலங்கா படைகள் தீவகத்தில் தம்மை நிலைகொண்டு யாழ்ப்பாணத்தை 'முழுமையாக ஆக்கிரமிக்க மேற்கொண்ட திட்டங்கள் அங்கு வைத்தே விடுதலைப்புலிகளால் தவிடு பொடியாக்கப்பட்டன.

சிங்களத்தின் துட்டகைமுணுகூட சமாதியானது இங்குதான்

விடுதலைப்புலிகளுக்கு தான் வைத்த பொறியாகவே தீவக ஆக்கிரமிப்பை சிங்களப்படைகள் நடத்தின. மண்டைதீவில் 1990இல் வீரச்சாவைத்தழுவிய மாவீரர்களுக்காக அமைக்கப்பட்ட நினைவுத் தூபியைச் சிதைத்த அநாகரிகத்தையும் இங்கு குறிப்பிட வேண்டும்.

தமிழ்மக்களின் உழைப்பின் சின்னங்கள் அங்கு தகர்க்கப்பட்டன. அம்மண்ணின் மக்கள் இரவில் நிலங்களில் அவலப்பட்டனர். இருக்க இடமின்றி சிதறிவிட்டனர். இந்தச்சிதறல் எங்குமாக வியாபித்தது.

துருவன்




# இலங்கையின் முது மனிதன் அவுஸ்ரலொயிட்

இலங்கைத்தீவின் முது மனிதன் திராவிடரின் மூதாதை. அம்மனிதன் பலாங்கொடை மனிதன். அவன் அவுஸ்ரலொயிட் இனக் குழுவைச் சேர்ந்தவன்.

திராவிடர்களின் மூதாதைகளின் இனக்குழு; அவுஸ்ரலொயிட்.

பலாங்கொடை மனிதனுக்கு வருவோம். இன்று சிங்கள தேசமாக உள்ள இரத்தினபுரியிலுள்ளது பலாங்கொடை என்ற இடம். இந்தப் பலாங்கொடையின் பாகியன் என்ற கற்குகை ஒன்றிலிருந்து மனித எலும்புக்கூடு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது அந்த எலும்புக்கூடு. அது ஒரு ஆணினுடையது. இலங்கைத்தீவில் எடுக்கப்பட்ட மிகத் தொன்மையான முதல் மனித எலும்புக்கூடு அது. அது எடுக்கப்பட்ட இடத்தின் அடிப்படை யில் அதற்கு இடப்பட்ட பெயர் பலாங்கொடை மனிதன்.

காபன்-14 காலக்கணிப்பு அமெரிக்காவின் தொல்லியல் ஆய்வாளர்களால் மேற்கொள்ளப்பட்டது. அது 28 ஆயிரம் ஆண்டுகள் முதல் 37 ஆயிரம் ஆண்டுகள் வரை தொன்மையானது...பலாங்கொடை மனிதனின் எலும்புக்கூடு என அந்தக் காலக்கணிப்பில் உறுதிசெய்யப்பட்டது.

தென்ஆசியாவில் எடுக்கப்பட்ட அதி கூடுதல் தொன்மை



வாய்ந்த மனித எலும்புக்கூடு இது வென அமெரிக்காவின் கொர்னல் பல்கலைக்கழக தொல்லியல் ஆய்வுப்பிரிவினர் தெரிவித்துள்ளனர். இது நவீன மனிதனான ஹோமோ சேபியன்ஸ் சேபியன்ஸ் ஆகும். மனிதனின் உயிரியற்பெயர் ஹோமோ சேபியன்ஸ் சேபியன்ஸ் என்பதாகும். நவீன மனிதனான ஹோமோ சேபியன்ஸ் சேபியன்ஸ் இறுதிப் பரிணாமமாகும். அதன் மூத்த மனித எலும்புக்கூடு தென்னாசியாவில் இலங்கையின் தென்பகுதியில் மட்டும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது; முக்கியமான விடயம். அந்த மனித எலும்புக்கூடுகள் மீதான இனப்பகுப்பாய்வின் போது அது ஆதி அவுஸ்ரலொயிட் இனக் குழுவினது என அடையாளம் காணப்பட்டன. முக்கியமாக பலாங்கொடை மனிதன் பற்றிய ஆய்வில், அந்த மனிதன் அவுஸ்ரலொயிட் இனக்குழுவின் அம்சங்களைக் கொண்டுள்ளதாகவும் அவன் குகைகளில் வாழ்ந்ததாகவும், குறிப்பிடப்படுகின்றது. பலாங்கொடை மனித எலும்புக்கூடு பாகியன் என்ற குகைகளிலேயே எடுக்கப்பட்டது. இந்த மனித வாழ்வை பலாங்கொடைப் பண்பாடு, (Balangoda culture) என வரலாற்றாய்வாளர்கள் குறிப்பிடுகிறார்கள். அந்தப் பலாங்கொடை மனிதன் தீயை உண்டாக்கத் தெரிந்தவன் என்றும், ஆயினும் இறைச்சி உட்பட்ட உணவுகளை சமைக்காமலேயே அவன் உண்டான் என்றும், பிற்காலத்தில் கி.மு.1000 ஆண்டளவில் அந்தப் பலாங்கொடை மனிதன் விவசாயத்தைப் பற்றியும், மட்பாண்டக்கலை பற்றியும் செப்பமானகற்கருவிகளை ஆக்குதல் பற்றியும் துளையிடுவது பற்றியும் அறிந்திருந்தான் என்றும் வரலாற்றாய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.



இந்த மனிதனின் பண்பாடு வளர்ச்சியையும் எமது பெருங்கற் பண்பாட்டையும், இணைத்துப் பார்க்கும்போது, அது எமது மூதாதைகள் என்பதைத் தெளிவாக உணரலாம்.

இந்திய உபகண்டத்தில் 5 லட்சம் ஆண்டுகளின் முன் மனித மூதாதைகள் இருந்ததை கற்கால ஆயுதங்கள்மூலம் அறியப்பட்டது. அந்த மூதாதைகள் இலங்கையில் குடியேறியிருக்கலாம் என்ற கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளபோதும், அதற்கான சான்றுகள் எவையும் இல்லை.

பலாங்கொடை மனிதனை இலங்கையிலுள்ள வேடர்களுடன் இணைத்துப்பார்க்கும் தன்மையிற் சிலர் ஈடுபட்டபோதும் அவர்கள் இந்த நூற்றாண்டுவரை, அவர்கள் வேட்டையிலேயே ஈடுபட்டுவந்தனர். வளர்ச்சியற்றிருந்தது போன்ற காரணத்தால் அது கைகூடாது போனது. வேடர்கள் 'வேடொயிட்' என இனப் பகுப்புச் செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கையில் சிங்களவர் வரலாறு 2500 ஆண்டுகளின் முன் ஆரம்பமாவதை விஜயன் வருகையோடு கூறுவது மகாவம்சம். விஜயன் வருகையில் இலங்கையில் காட்டுமிராண்டிகள் வாழ்ந்ததாக அது குறிப்பிடுகின்றது. ஆனால், 3000 ஆண்டுகட்கு முன்பதான பலாங்கொடை பண்பாட்டின் வளர்ச்சி இதைப் பொய்யாக்குகின்றது. அத்துடன் அது தமிழரின் பெருங்கற்பண்பாட்டு வாழ்வின் கூறுகளுடனும் இணைகின்றது.

பலாங்கொடை மனிதனின் இனக்குழுவான அவுஸ்ரலொயிட் திராவிட மூதாதைகளின் இனக்குழுவாகும். அப்படியானால் இலங்கையில் முது குடிகள் யார்? அவர்கள் தொன்மை எதுவரையானது.

மேலும் ஆய்வுகள் எம்மை உறுதிசெய்யும்.

இலங்கையில் எலும்புக்கூடு சுவடாக கிடைத்த முதுமனிதன்-பலாங்கொடை மனிதன் எனக் கண்டோம். அவன் திராவிட இனக் குழுவின் மூதாதை என்பதை மானுடவியல் ஆய்வுகள் மூலமாகவும் கண்டோம். இன்று இதற்கு முன்னதாக லட்சோப லட்சம் ஆண்டுகளுக்கு பின்னே செல்லப்போகிறோம். அங்கிருந்து தொடங்குவோம்.

3கோடி 70 லட்சம் ஆண்டுகளின் முன்பதாக பூமியில் மனிதன் பரிணமிக்க முன் இரு கால்களால் நடக்கும் குரங்கு பரிணமித்தது. அதற்கு இடப்பட்டுள்ள பெயர் பிலியோ ‡தேகஸ் அடுத்த கட்ட பரிணாமம் 2 கோடி 60 லட்சம் ஆண்டுகளில் ஏற்பட்டது. அதுபரிணாமம் புரோகான்சன்.

அடுத்த கட்டம் மரியோ பித்தேகஸ், அதனை அடுத்த ஆரியோ பித்தேகஸ். ஒரு கோடி 20 லட்சம் ஆண்டுகளில் அது ராயபித்தகஸ் என்று பரிணமித்தது. 30 லட்சம் ஆண்டுகளில் பரிணமித்தது, ஆஸ்திரலோ பித்தேகஸ் ஆபிரிக்கன், ஆஸ்திரலோ பித்தேகஸ் கனமானது.

ஆஸ்திரலோ பித்தேகஸ் வளர்ந்தது என்ற மூவகை மாற்றங்கள். இந்த காலம் பிளைத்தோசின் காலம் என வரலாறுக்கு முற்பட்ட புவியியல் காலம் வரையறை செய்கின்றது. ஆஸ்திரலோ பித்தேகஸ் என்பது குரங்கு நிலையிலும். மனிதநிலையிலும் இருந்த முக்கிய பரிணாமம் ஆத்திரலோ பித்தேகஸ். ஆகவே இதனை குரங்கு மனிதன் என குறிப்பிடுகிறார்கள். குரங்கு நிலையிலிருந்து விடுபடும் மனிதனின் மூதாதையான அடுத்த பரிணாமம் பித்த காந்தரப்பஸ் மனிதன் என்பதற்கான பரிணாமப் பெயர் கொண்ட முதல் பரிணாமம்.

ஹோமோ எரக்டஸ் என்ற பெயரைப் பெற்றது. இதன் காலம் 10 லட்சம் ஆண்டுகளாகும். இந்த நிலையில் நாம் இந்திய துணைக் கண்டத்துக்கு வருகிறோம். மனிதனின் மூதாதை என்ற பரிணாமமாக பிதகந்த தரபஸ்னிக் எலும்புக்கூடு இந்தோனேசியாவின் யாவதீவில் கண்டெடுக்கப்பட்டது. இதனால் அதற்கு 26 லட்சம் ஆண்டுகள் முதல் 15 லட்சம் ஆண்டுகள் வரையானதாக கூறப்படுகின்றது. கிழக்கு ஆபிரிக்காவில் யாவமனிதன் போன்ற அதே பரிணாமம் வாழ்ந்ததற்கான சுவடுகள் இனங்காணப்பட்டன. காடர் என்ற ஆற்றுப் பள்ளத்தாக்கில் அச்சுவடுகள் காணப்பட்டன. அங்கு 40 லட்சம் ஆண்டுகளின் முன் மனிதனின் மூதாதைகள் வாழ்ந்ததாக கருதப்படுகின்றது.

ஆபிரிக்காவின் கிழக்கு இந்துமா கடலின் பகுதியாக உள்ளது. ஆகவே இக்கடலின் எல்லையாக உள்ள ஆபிரிக்கா, இலங்கைத்தீவு உட்பட்ட இந்திய துணைக்கண்டம். அவுஸ்திரேயாவில் இந்த மனித மூதாதைகள் வாழ்ந்ததாக கருதப்படுகின்றது. பிதகாந்தரப்பஸ், செற்ரந்தி ரோப்பஸ், அட்லாந்திதிரோப்பஸ், ஆகிய மனித பரிணாமங்கள் இப்பகுதிகளில் வாழ்ந்ததாக கருதப்படுகின்றது.

(21ஆம் பக்கம் பார்க்க)

குரலோன்

# காரைநகர் தோப்புக்காடு கிராம மக்களுடனான சந்திப்பு

ஐம்பது வருடங்களிற்கு மேற்பட்ட பாரம்பரியத்தை கொண்டதேகாரைநகர்தோப்புக் காட்டுக்கிராமம். ஊரி, பாலாவோடை, துறைமுக வீதியை அண்மித்த கடற்கரையோரமாக குடியேறிய மீனவக்குடும்பங்களே



இங்குள்ளன. மாதிரி வீட்டுத்திட்டத்தில் 1980ஆம் ஆண்டு இக்கிராமம் இணைக்கப்பட்டது. கிராமத்திற்கான சகல அடிப்படை வசதிகளையும் ஏற்படுத்தி 45 வீடுகள் அமைக்கப்பட்டன.

கிராமக் கட்டுமானங்களைத் தன்னகத்தே கொண்டு ஊர் காவற்றுறைப் பிரதேச செயலகத்திற்கு உட்பட்டது இக்கிராமம். ஜே-44 கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட இக்கிராம மக்கள் பத்துவருடங்கள் மாத்திரமே சகல வசதிகளுடனும் வாழ்ந்துள்ளனர். 1990,1995 ஆம் ஆண்டுகளில் இரு பெரும் இடப்பெயர்வுகளைச் சந்தித்துள்ளனர். எதுவித அடிப்படை வசதிகளுமின்றி கடந்த 15 வருடங்களாக அவதியுறுகின்றனர் இப்பகுதி மக்கள்.

ஒரு வீட்டில் இரண்டு மூன்று குடும்பங்கள் என இக் கிராமத்திலுள்ளனர். குடி நீர், மின்சாரம் இன்றியுள்ள இக் கிராமத்திற்கான வீதிகள் திருத்தப்பட்டதற்கான அடையாளங் களின்றியுள்ளது. மின்சார இணைப்பிற்கான மின்கம்பங்கள் இருந்த போதிலும் மின்சார இணைப்புக்கள் வழங்கப்படவில்லை. இக் கிராம எல்லையுடன் மின்சாரம் நிறுத்தப்பட்டமையானது இப் பகுதி மக்கள் புறக்கணிக்கப்படுவதற்கான தக்க சான்றாகவுள்ளது.

225 குடும்பங்களைச் சேர்ந்த

**இரா-வின்**

1200 பேர் வதியும் இக் கிராமத்தில் அண்மைக்காலமாக 16 வயதுடன் பாடசாலையை நிறுத்திக் கொள்வோர் தொகை அதிகமாக வுள்ளது. 6 வயது முதல் 18 வயது வரை 64 பேர் இருக்கின்ற போதிலும், 16 வயதிற்குட்பட்ட 40 பேர் மாத்திரமே கல்விகற்று வருகின்றனர். நான்கு கிலோ மீற்றர் தூரமுள்ள பாடசாலைக்கு கால் நடையாகச் சென்றுவரும் இப்பகுதி மாணவர்கள் குடும்ப வறுமைகாரண மாகவே பாடசாலையைவிட்டு இடை விலகி வருவதாக அறிய முடிகின்றது.

மேலதிக கல்வியைத் தொடர்வதற்கு குடும்ப வறுமை தான் காரணமென இவர்கள் கூறினாலும் வசதியான கல்வி வாய்ப்பின்மையும் காரணமாக அமைகிறது. தோப்புக் காடு மறைஞான சம்மந்தர் வித்தியாசாலையில் தரம் 11 வரை கல்வி கற்க முடிந்தாலும் இப் பாடசாலை கடந்த 10 வருடங்களாக இயங்குவதில்லை.

மாலை நேரக் கல்வியை வழங்குவதுடன் இடைவிலகிய மாணவர்கள் கல்வியைத் தொடர்வதற்கான நடவடிக்கைகளை இக் கிராமத்த வர்கள் மேற் கொள்வதாகத் தெரியவில்லை. யாழ் பல்கலைக் கழக மருத்துவபீட மாணவர்கள் மாலை நேர வகுப்புகளை நடாத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

தோப்புக்காட்டுக் கிராமத்தின் பிரதான பாதையான துறைமுக வீதியை மக்களது பாவனைக்கு



விடாது இலங்கை கடற்படையினர் முகாமமைத்துள்ளனர். அது மட்டுமன்றி இக்கிராமத்தின் மத்தியில் பாடசாலைக்கு அருகில் பெரிய காவலரணையும் இராணுவ அவதானிப்பு கோபுரத்தையும் அமைத்து இவர்களது இயல்பு வாழ்விற்கு தடையாகவுள்ளனர் கடற்படையினர். துறைமுகப் பகுதியை அண்மித்ததான கடற்பரப்பில் மீனவர்கள் தொழில் புரிவதையும் தடைசெய்துள்ளமை இங்கு நினைவுகூரத்தக்கது.

தோப்புக்காடு சுப்பிரமணிய சுவாமிகள் ஆலய பரிபாலன சபைச் செயலாளர் கந்தையா -புஸ்பராஜா தமது கிராமம் தொடர்பாக எம்முடன் பகிர்ந்துகொண்ட கருத்துக்களை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கிறோம்.

இரண்டு தடவைகள் இடப் பெயர்வுகளைச் சந்தித்த இக் கிராமத்திலுள்ள அனைத்து வீடுகளும் சேதமடைந்துள்ளன. இராணுவ வன் செயல்களினால் பத்திற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர். 1990 ஆம் ஆண்டிற்கு முன் சகல வசதிகளுடனும் மிளிர்ந்த எமது கிராமம் இன்று அடிப்படை வசதிகளின்றி குடி நீரை காசிற்கு வாங்கும் அளவிற்கு தள்ளப்பட்டுள்ளது. ஒரு வாரத்தில் ஐந்து நாட்கள் மட்டுமே குடிநீர் வழங்கப்பட்டுவருகின்றமை ஒரு பாரிய பிரச்சினையாகவுள்ளது.

இங்குள்ள பிள்ளைகள் படிக்க ஆர்வமாய் இருக்கின்றனர் ஆனால், கற்பிக்க ஆட்கள் இல்லை. எமது கிராமத்தவர்களில் கல்வி கற்று உயர் பதவிகளிலுள்ளவர்கள் வேறு இடங்களில் குடியோறி வருகின்றனர். இங்குள்ள பாடசாலை கடந்த 10 வருடங்களாக இயங்காமலுள்ளது. இப் பாடசாலையை செயற்படுத்துவதற்கு 75 இற்கு மேற்பட்ட மாணவர்கள் தேவையென அதிகாரிகள் குறிப்பிடுகின்றனர். வெளியிலிருந்து படிப்பிக்க ஆட்கள் வருவினமென்றால் அவர்களிற்கான ஊதியமும் ஆதரவும் நாங்கள் குடுப்பம். ஆனால், யாரும் முன் வருவதில்லை.

தோப்புக் காட்டுக் கிராம மக்களிற்குள்ள பிரச்சினைகளில் தண்ணீர்ப் பிரச்சினை பெரும் பிரச்சினையாகவுள்ளது. கோடைக்காலங்களில் குளிப்பதற்கு கூட இரண்டு கிலோ மீற்றர் தூரம் போகவேண்டும். இங்கு அவசர மாகவும் அவசியமாகவும் தேவைப்படுவது வீதி புனர மைப்பும், குடிநீரும் மின் சாரமுமாகும். இத்தேவைகளை நிறைவுசெய்ய பொறுப்பான வர்கள் முன்வர வேண்டும்.

இன்றைய விலைவாசி உயர்வின் மத்தியில் அத்தியாவசிய பொருட்கள் வாங்குவதற்கே வசதியற்ற, இக்கிராமத்தவர்கள் 700 ரூபா கொடுத்து ஒரு பவுசர் தண்ணீர் வாங்கிப் பாவிக்கும் பரிதாப நிலையிலுள்ளனர். கோவில் மற்றும் விசேட தேவைகளிற்கென இச் செயற்பாடு நீண்ட காலமாகவே இடம்பெற்றுவருகின்றது. நாளாந்தம் சிறு வருமானங்களையே பெறக் கூடிய இக்கிராமத்தவர்கள்



அடிப்படைத் தேவைகளைக் கூடப் பெறமுடியாதநிலையிலுள்ளனர்.


பொருளாதார ரீதியில் கல்வியிலும் சிறிது முன்னேறியவர்கள் இக்கிராமத்தில் இருப்பதில்லை. இதுவரை 15 குடும்பங்கள் தோப்புக்காட்டில் இருந்து இடம்மாறி வேறு பிரதேசங்களில் குடியேறியுள்ளனர். கிராமத்தின் வளர்ச்சிக்கு தடையாக இருப்பவற்றை இனம்கண்டு கிராமத்தை புதியபாதையில் நகர்த்திச்செல்லவேண்டிய பொறுப்பும் உரிமையும் கிராமத்தவர்களிற்கே உண்டு. கிராமிய வளர்ச்சியில் கிராம அமைப்புக்களில் பங்களிப்பு மகத்தானது. இங்குள்ள கிராம அமைப்புக்களிற்கும் மக்களிற்குமிடையேயான தொடர்புகள் மிகக் குறைவாகவேயுள்ளது.

கிராமத்தின் வளர்ச்சி அபிவிருத்தியிலேயே பிரதேச நகர வளர்ச்சி தங்கியுள்ளது. இவற்றைப் பிரதிபலிக்கும் அமைப்புக்களின் பிரதிநிதிகள் இக்கிராமத்தின் மீது தமது பார்வையை செலுத்த வேண்டும். அரச, அரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் இனி வரும் காலங்களிலாவது இக் கிராமத்தவர்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்திசெய்ய வேண்டும்.

காரைநகர் சீநோர் நிறுவனத்தின் தொழிலாளர்களில் அநேகர் இக்கிராமத்தவர்கள். இன் நிறுவனம் இப்பொழுது இயங்குவதில்லை. இராணுவத்தினர் முகாமமைத்துள்ளனர். இருந்த போதிலும் குருநகரில் இயங்கும் வடகடல் நிறுவனத்தில் இப் பகுதி மக்களில் தகுதியானவர்களை உள்வாங்கவேண்டும்.

இக்கிராமத்தை அபிவிருத்தி செய்து ஏனைய கிராமங்களுடன் ஒன்றிக்க வைப்பதாயின் இப் பகுதிக்கான பஸ் போக்குவரத்து ஏற்படுத்தப்படவேண்டும். காரைநகர் பேருந்து தரிப்பிடத்தில் இருந்து துறைமுக வீதியூடாக ஊரிக்கிராமம் வரை பஸ் போக்குவரத்து இடம்பெற்றமை போன்று மீண்டும் ஏற்படுத்தப்படவேண்டும். இதற்கு துறைமுக வீதியை மூடியுள்ள கடற்படை முகாம் அகற்றப்பட வேண்டும். நகரின் மத்தியிலுள்ள அவதாணிப்பு கோபுரமும் காவலரணும் மூடப்பட வேண்டும்.

தோப்புக்காட்டுக்கிராம மக்களை இயல்பு வாழ்விற்கு அழைத்துச்செல்ல மிகவிரைவில் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். பொறுப்பானவர்கள் தமது பொறுப் புக்களை உணர்ந்து செயற்பட வேண்டும். கடற்படையினர் துறைமுக வீதியை திறந்து சுமுகமான போக்குவரத்திற்கு வழிசமைக்க வேண்டும். இவற்றைப் பெறுவதற்கு இக் கிராம மக்கள் எத்தனை நாட்கள் காத்திருக்க வேண்டும்.



## மண்ணின் மைந்தர்களின் கதை

# இலட்சியப் பயணத்தில் ஓடிக்கொண்டேயிருந்தவன்

**— க. மிரேசு —**

1993 இன் இறுதிப்பகுதி மட்டக்களப்பிலிருந்து யாழ்மண்ணிற்குச் சென்றிருந்ததனால் நிறையவே புதிய அனுபவங்களை எங்களால் காணமுடிந்தது. புதிய போராளிகளின் தரிசிப்பும் கிடைத்தது. புதிய தரிசிப்பில் எனக்கு கிடைத்த பெரும்பாலான போராளிகளில் குறிப்பிடக்கூடியவர் வீரவேங்கை கப்டன்:- ஜீவராசா (விசுவலிங்கம் சசிக்குமார்.)

1993 இல் நடந்த பூநகரி தவளைத்தாக்குதலின்பின் எமது பெரியதொரு அணி யாழ் வடமராட்சி சந்நிதி தொடக்கம் மாதகல் வரையிலான நீண்ட காவலரண் தொகுதியை எல்லைக்காவல் செய்யவேண்டியதாயிற்று. இதன்போது தளபதி நாகேஸ் அவர்களும் நானும் ஓர் நாள் வடமராட்சி கோட்டச்செயலகம் அமைந்துள்ள அச்சுவேலிக்குச் சென்றோம். நாம் சென்று சில நிமிடங்களில் ஒருபோராளி அங்கும் இங்கும் ஏதாவது ஒரு வேலையுடன் ஓடிக்கொண்டிருந்தான். பார்ப்பதற்கு நல்ல இராணுவத்திடகாத்திரமான உடல்வாகு. நல்ல உயரம் அதேபோன்று நல்ல சுறுசுறுப்பு, அந்தப்போராளியை கண்டதுமே எனது மனதில் ஒரு எண்ணம் உருவானது. நிச்சயமாக இவன் ஓர்நாள் வித்தியாசமான போராளியாக வருவான் என்று நினைத் தேன். அதேபோலவே அவன் ஒரு சிறந்த போராளி. எதையும் செய்யும் பொறுப்பாளர் என பெயர் பெற்றான். அவன்தான் எங்கள் ஜீவராசா.

வடமராட்சியில் ஜீவராசா ஒரு மருத்துவப் போராளியாகவும் பின் மருத்துவப்பொறுப்பாளராகவும், செயற்பட்டான். மருத்துவத்துறை எவ்வளவு புனிதமானது என்பதை பலருக்குத் தனது உயரிய சேவையினால் உணர்த்தியவன் இவன்.

எந்தவொரு போராளியும் சுகயீனமாக வந்துவிட்டால் சரி உடனே தனது உயிரினை பாதுகாப்பது போலவே பாதுகாப்பான். தாதியும் இவனிடமே தகுதியானதாய் இருந்தது. தாதித்தொழிலில் இல்லாத அர்ப்பணிப்பையும், கடமையுணர்வையும் மேலான செயற்பாட்டையும் செய்தவன். மருந்துகளைவிட எமது பராமரிப்பே ஒரு போராளியை குணப்படுத்தும் என்பதை தனது நிகரற்ற மருத்துவசேவையால் செய்துகாட்டியவன். எந்த நேரமும் ஏதோ ஒன்றை செய்துகொண்டே இருப்பான்.

மேற்குறிப்பிட்ட செயற்பாட்டுக்கு சற்றும் குறையாத அளவு சண்டைக்களங்களில் செய்து காட்டியவன். ஜீவராசாவை நான் கண்டபோது நினைத்தது இவ்வளவு சுறுசுறுப்பானவன், சண்டையில் நின்றால் எப்படி இருக்கும் என்பதே. அதேபோல்தான் அவன் சண்டைக்களங்களில் நிகரற்றவனாகத் திகழ்ந்தான்.

வடமராட்சியிலிருந்து கிட்டுப்படையணிக்கு சென்றவன் சாள்ஸ் அன்ரனி படையணியோடு இணைந்ததும் ஒரு மருத்துவனாகவே காலடிவைத்தான். 96ஆம் ஆண்டு தொடக்கம் சில சண்டைக்களுக்கு மருத்துவனாக சென்றவன். மருத்துவ சேவையுடன் சண்டையையும் திறம்படச் செய்தான் என்று எல்லோராலும் பாராட்டப்பட்டான்.

கப்டன் ஜீவராசா வந்தவுடனேயே பல சண்டைகளை செய்ய அணிகளுடன் சென்றான். இவனது வேகமே இவனை வீரனாக தமிழீழ சண்டையில் அறிமுகப்படுத்தியது. கப்டன் ஜீவராசா சண்டைக்களங்களில் சாதாரண போராளி எனத்தொடங்கி பின் ஒரு கொம்பனி பொறுப்பாளர் என உயர்ந்தமைக்கு அவன் சண்டையில் காட்டியதீரமே காரணமாகும்.

சண்டைக்கென தயாாப்படுத்தும் போது பெரும்பாலும் அவனது அணிக்கு அவனே நிர்வாகப் பொறுப்பாளராக இருப்பான். ஒரு அணிக்குத் தேவையான எந்தப் பொருளையும் விடாமல் வாங்கி அதனை சீராக வழங்குவதில் தனி ஆளுமையே அவனிடமிருந்தது.

சண்டைக்கென சென்றதும் சண்டையுடன் ஏனைய வேலைகளையும் செய்யத் தவறமாட்டான். யாருடைய ஒப்புதலின்றியும் காயக்காரர்களுக்கு மருந்து கட்டுவான். அதன்பின் அவர்களை களத்திலிருந்து வெளியேற்ற ஏற்ற நடவடிக்கை செய்வான். களத்திலே வீரச்சாவடைந்த போராளிகளை உடனுக்குடன் அனுப்புவதில் மிகவும் கரிசனையுடையவன். அதேபோல் சண்டையில் நிற்கும்போது எதிரியை எதிர்கொள்ள என்னென்ன செய்யவேண்டுமோ, அவைகளைச் செய்வான். எதிரி சூழ்ந்துவரும்போது சண்டைசெய்வான். கட்டளையை இடைவிடாது வழங்குவான். அதன் பின்னர் சண்டை சிறிதுவேகம் குறைந்ததும் காயக்காரர், வீரச்சாவு அவைகளை கவனிப்பதும் சற்று மேல்சென்று அடுத்தகட்டச் சண்டைக்கு தயார்ப்படுத்துவதுமாகத் தனது வேகத்தை அதிகரிப்பான்.

சண்டைக்களங்களில் சில இக்கட்டான நிலைகளை உடனே சாதுரியமாக சமாளிப்பான். காயமடைந்த போராளிகளுக்கு மருந்து கட்டும் போதே எதிரி பக்கத்தில் வந்த சமயங்கள் கூடுதலாக இருந்திருக்கிறது. அதன்போது காயக்காரரை பாதுகாப்பாக இருக்கச் செய்துவிட்டுத் தனது கருவியை மூர்க்கமாக இயக்கத் தொடங்குவான். சில வேளைகளில் உணர்ச்சியின் உச்சத்துக்குச் சென்றவன் தன் சக போராளியை காப்பாற்றவேண்டும் என்பதற்காக எழுந்து நின்று கத்திக் கத்தி சண்டைபிடிப்பான். என்ன கதைத்துக்கொண்டு சண்டைபிடிக்கிறான் என்று எவருக்குமே தெரியாது. டேய் எங்களை யாரென்று நினைக்கிறாய் என்று மாத்திரம் அடிக்கடி சொல்லுவான்.

சண்டையொன்றில் தடை உடைத்து உள்நுழையும்போது எதிரி எல்லோரும் கொல்லப்பட்டு விட்டனர். என்றே நினைத்து உள் நுழைய எதிரிகள் பலபேர் திடீரென தாக்குதலை தொடர்ந்துவிட, திடீரென நடந்த மாற்றத்தால் என்ன செய்வது என்றபிரச்சினை எழுந்துவிட்டது. வேகமானவன் உடனே முடிவெடுத்தான்.

டேய்தம்பி நீ அதில போடு...

நீ அங்கேயிருந்து அடி...

என வேகவேகமாக செயற்படத் தொடங்கினான். அவர்களின் கருவிகள் அனல் கக்கத்தொடங்கின. வேகம் எதிரியை நிலைகுலைய செய்தது. எதிரி சற்றும் எதிர்பார்க்காததால் ஓடத்தொடங்கினான். அந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி இவர்கள் தங்களது வேலையை வேகமுடன் செய்து குறித்த பிரதேசத்தை உடனடிக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.


ஊரியான் களமுனையில் எதிரி திடீரென புலிவேட்டை எனும் ஒரு நடவடிக்கையை தொடங்கி ஊரியான் வெட்டையால் முன்னேறத் தொடங்கிவிட்டான். அன்று நடந்த சண்டையில் முதலில் எதிரியின் நகர்வை அவதானித்து தன்னுடன் நின்றவர்களை உடனே ஒழுங்குபடுத்தித் தாக்குதலை தொடங்கினான். அவனது வேகமான செயற்பாட்டால தான் அன்று பெரியதொரு இழப்பு தவிர்க்கப்பட்டது.

02.11.1999அன்று விடுதலைப் புலிகளின் கழுத்தை நெரிக்கப் புறப்பட்ட சிங்களவெறியர்களின் கைகளை துண்டாட முடிவெடுத்த நாள். ஓயாத அலைகள் 03இன் ஆரம்பமே எதிரியை கொன்றொழிக்கும் திட்டமாக அரங்கேறியது. எமக்கு எதிராக எதை எதிரி செய்கிறானோ அதே எதிரியை அதேபாணியில் கொன்று விடுவதே எமது இலட்சிய போராட்டத்திற்கு நாம்செய்யும் கடமை என போராளிகளுடன் சொல்லிய வீரன், சண்டைக்குச் சென்று விட்டான். தடையணியின் பொறுப் பாளன் என்ற ரீதியில் சண்டையின் முழுப் பொறுப்பும் அவனுடையதே. எனவே சண்டை தொடங்கியவுடன் தடை உடைக்க நேரமெடுத்து விட்டது.

எமது பக்க நிலைமையை உணர்ந்தவன் தடையணி, காப்புச் சூட்டு அணி, இப்படி எல்லா இடமுமாக மாறி மாறி ஓடி சண்டையை வழிநடத்துகிறான். இவனின் அணிப்போராளிகளின் இரத்தத்தாலும், சதையின்ாலும், உயிரினாலும் தடை உடைக்கப்பட்டுவிட்டது. தனது போராளிகளின் நிலையை உணர்ந்தவன், சண்டையில் தனது வேகமான செயற்பாட்டைத்தொடங்கினான். எஞ்சிய அணிகளை தொடர்ந்து சண்டையில் ஈடுபடுத்தத் தொடங்கி தானும் சண்டையில் இறங்கினான். சண்டை உக்கிரம்பெற்று எதிரி ஓடத்தொடங்கினான். ஆனால், எங்கிருந்தோ எதிரியின் ரவை ஒன்று அவன் உயிரை பறித்தது. தாயகக் கனவுடனேயே உயிர்விட்டான் ஜீவராசா. எதிலும், எப்போதும் வேகம் வேகம் என்றிருந்தவன் உயிர்துறந்து ஓய்ந்துபோனபோது அவனுக்காகவே நாம் வேகம் பெறவேண்டியதாயிற்று. ●








# தனிவெளியில்...!



எல்லாமே சூனிய மாய்க் கிடந்தது. அந்தத் தனியறையும் ஒரு யன்னலும் அந்த ஒற்றைக்கண்ணாடிக் கதவும் அதற்குமிஞ்சினால் யன்னல் வழிதெரியும் வானைமுட்டும் அந்த மலையும் பச்சையுடுத்த மரங்களும்தான்......

அதைவிட்டால் தனிமையைத் தவிர வேறெதுவும் அவள்துணையில்லை....அது பின்நிலாக்காலம். வானம் இருண்ட பின் அந்த மலைகளையும் மரங்களையும் தாண்டி அவளைப்பார்க்கும் அந்த நிலாவானமும் இவற்றை விட்டால் மதியமும் மாலையும் வந்து போகும் பிள்ளைகளும் அவள் கணவனும் வேறுயாரையும் பார்க்க முடியாது. அந்தக்கட்டிலும்தான் இப்போ அவள் உலகாய்.... இப்போதெல்லாம் எல்லோர் மீதும் கோபம் கோபமாய் வருகிறது..... சிலவேளை களில் பிள்ளைகள் மீதும் எரிந்து விழுமளவிற்குத் தன்னையே இழந்துவிடுகிறாள்.

எனக்கிப்பெல்லாம் சரியான கோவம் வருகுது...... நான் தனிச்சமாதிரியும்..... எனக்கொருத்தரும் இல்லாத மாதிரியுமாயிருக்கு....இமைமுட்டிய கண்களைத் துடைத்தபடி மருத்துவரிடம் கேட்டாள்.

அதப்பிடித்தானிருக்கும் இந்தக்குளிசையள் முடிய சரியாயிடும் இந்தக்குளிசைட குணமே இதுதான்....கனக்க யோசிக்கத் தேவேல்ல நீங்க......மருத்துவரின் அந்த வார்த்தைகளில் அவளுக்கு நம்பிக்கையில்லை....

இல்ல..... எனக்கேதோ நடந்திட்டு....இப்ப எனக்கு வருத்தமெண்டு ஒருதரும் என்னைக் கவனிக்கினமில்ல..... பிள்ளையள் கூடி அம்மாக்கு நெடுக வருத்தமெண்டு சொல்லுதுகள்...... அதுகளுக்கும் அம்மா வருத்தக்காரியெண்ட நினைப்புத்தானிப்ப..... நானெல்லாருக்குமிப்ப பாரமாப்போட்டன்.....ஓ..... நானிப்ப எல்லாருக்கும் பாரந்தான்....சீ.... ஏனிப்பிடி நான் இருக்கிறன்..... நல்லாயிருந்த எனக்கெப்பிடி வருத்தம் வந்தது......?அவள் சிந்தனை முழுவதும் தான் நோயாளியாகவும் தன்னை எல்லோரும் ஒதுக்குவதாகவும் தான் பட்டது.

அந்தப்பலகணியில் நின்று வானத்தையே அண்ணாந்து பார்த்துக்கொண்டிருந்தவளின் சிந்தனைகள் அறுபட அந்த அழைப்பு அவள் செவிகளில் விழுகிறது. , ஒன்பது மணியாயிட்டுது.... 1500மில்லி லீட்டர் அன்ரிபயோட்டிக் போத்தலுடன் வந்த மருத்துவத்தாதி சொன்னாள்.

6 மணித்தியாலத்துக்கு ஒரு தடவை ஏற்றப்படுகின்ற அந்த அன்ரிபயோட்டிக்கைக் கண்டாலே குலைநடுக்கம் அவளுக்கு. அது ஏறிமுடியும்வரை இடது கை நரம்பெல்லாம் வலியெடுத்து உயிரைத்தின்றுவிடும்.

ஆ...வலிக்குது.....கைநரம்பெல்லாம் சுண்டிச்சுண்டிக் குத்துது....அவள் அழுதாலும் அந்த வலி அப்படியேதானிருக்கும். ஒரு மணித்தியாலம் பொறு....என கன்னங்களைத் தடவிச்சொல்லும் தாதியின் நேசம்கூட அவளுக்கு ஆறுதலாக இல்லை.

இந்தச்சனியனைக் கழட்டியெறிஞ்சு போட்டு அந்த மலையில ஏறிக்குதிச்சுச் செத்திட்டா...... இந்த வலியெல்லாம் போய்விடும் என்றுகூட நினைப்பாள். இல்ல நான் சாகக்கூடா என்ர பிள்ளையள் வளர்ற வரைக்கும் நானிருக்கவேணும்....என்ரை குஞ்சுகள் அந்தரிச்சுப் போங்கள்.....அல்லது பிள்ளையளையும் கொன்டு நானும் செத்துப் போட்டாலென்ன.:... அந்த நினைவிலிருந்து தற்காலிகமாக விடுபட்டு இடது கையில் ஏறிக்கொண்டிருந்த அன்ரிபயோட்டிக் போத்தலைப் பார்த்தாள். அது இன்னமும் முக்கால்வாசிக்கு மேலிருந்தது. நெருப்புப்பட்டு எரிவது போலான அந்த எரிவும் நோவும்......

உயிர்போகும் வலியது. இடது கை குளிர்ந்து வலித்துக்கொண்டிருந்தது.

பலகணியூடு மீண்டும் அந்த மலைகளைத் தாண்டி வான்மீது பார்வையை எறிகிறாள். நிலவு அவளையே பார்ப்பது போலிருந்தது. அந்த முக்கால் வட்டத்துள் ஏதோவொன்று வளைந்து கிடப்பது போலிருந்தது. அதை உற்றுப் பார்த்தாள். தடித்த மீசையும் குழிவிழுந்த கன்னமும் மொட்டைத்தலையுடனும் ஒரு மனிதனின் முகம் தெரிவது போலிருந்தது.....

தலையத்திருப்பி அந்த அறையின் கதவைப்பார்த்தாள். அது இன்னும் மூடப்படாது திறந்தபடியே கிடந்தது. வலது கையால் அருகிருந்த அந்தச் சுழல் அலுமாரியை இழுத்து லாச்சிக்குள்ளிருந்த புத்தகங்களைக் கிழறினாள். அதில் முக்கால்வாசிக்கு மேல் வாசித்து முடித்தாயிற்று.

அவள் கண்ணைப்பற்றியிழுத்தது பொன்.கணேசமூர்த்தியின் துளித்துளியாய் நெடுங்கதை நூல். புத்தகத்தின் பக்கங்களைப் புரட்டின விரல்கள். இடதுகை இன்னமும் வலித்தபடியே இருந்தது. துளித்துளியாய்.... நெடுங்கதையின் ஆரம்பமே நோயோடு போராடும் வரிகளாயே இருந்தது.

மனமெல்லாம் வலித்துக்கொண்டிருந்தது.

திருமதி.ராதா மருந்துக்குளிசை போடேல்ல இன்னும்.....! கையில் ஏறிக்கொண்டிருந்த அன்ரிபயோட்டிக் முடிய முன்னம் இரவு எடுக்க வேண்டிய குளிசையுடன் வந்து நின்றாள் தாதி நான்சி.

புத்தகத்தை மூடிவைத்துவிட்டு குளிசையை வாங்கி விழுங்கினாள். அது தொண்டையிலிருந்து உள்ளிறங்கியதும் நெஞ்சுக்குள் ஏதோ புகுந்து நின்று அல்லல்படுத்துவதாய் எரிச்சலாயும் வயிற்றுள் நெருப்புத்துண்டங்களைப் போட்டாற்போலவும் எரிவாயிருந்தது. காரணம் புரியாது எரிச்சலாகவுமிருந்தது. காலுக்குள் கிடந்த தலையணையை உதைந்து கீழே விழுத்தினாள்.

பக்கத்துக்கட்டிலில் படுத்திருந்த அந்த ஜேர்மனியப்பெண் இவளைத்திரும்பிப் பார்த்தாள். அதை இவள் புரியும் நிலையில் இல்லை. அவசர அழைப்புமணியை அழுத்தினாள். திருமதி.ராதா என்ன உதவி வேணும்.....? கேட்டபடி வந்தாள் தாதி நான்சி. கை நோகுது..... உடம்பெல்லாம் எரிச்சலாக்கிடக்கு.... இதைக் கழட்டுங்கோ.... இன்னும் இரண்டு நாள் மட்டும்தான் நாளைண்டைக்கு இது கழட்டிடுவம்..... அதுவரை பொறுமையா இருக்கவேணும். கொஞ்சத்திலை நித்திரையாகீடுவீங்கள்......

அவள் தலையைத் தன் விரல்களால் கோதியபடி சொன்னாள் நான்சி. அவள் சத்தமின்றி அழுது கொண்டிருந்தாள். வாசலடியில் மின்னிக்கொண்டிருந்த மின்விளக்கை அணைத்துவிட்டபடி கதவைச்சாத்திக்கொண்டு போனாள் நான்சி. தன் கட்டிலின் பின்னிருந்த மின்விளக்கைப் போட்டாள். கையில் ஏறிக்கொண்டிருந்த அந்த மருந்துப்போத்தலைத் தாங்கிக்கொண்டிருந்த தாங்கியை உருட்டிக்கொண்டு பலகணிக் கதவைத்திறந்து அந்தக்கதிரையில் போயிருந்தாள். வானம் பாலள்ளி ஊற்றினாற்போல் அந்த மலைகளை முட்டியபடி பால்நிலா ஒளிபாய்ச்சிக் கொண்டிருந்தது.

அர்த்தமின்றிக் கோபம்கோபமாக வந்தது.

**சாந்தி ரமேஸ்**

இப்சிலோன் இரவு விடுதியின் விளக்கொளி நாலாபக்கமும் சிதறி ஒளிர்ந்து கொண்டிருந்தது. அந்த மலை முகடுகளில் அந்த அழகிய பச்சை மரங்களின் இலைகளில் பட்டு மஞ்சளாகிக் கொண்டிருந்தது. அடுத்த அறையிலிருந்த ஜேர்மனியப் பெண்ணும் பலகணியில் வந்து நின்று வானத்தை அண்ணாந்து பார்த்துக் கொண்டிருந்தாள். வானத்து அழகை அந்த மலைகளின் அழகை அந்த மரங்களின் அழகை ரசித்தபடி சிகரெட் புகையை அவள் சுகித்துக்கொண்டிருந்தாள் அந்த ஜேர்மனியப்பெண்.

அழகை ரசிக்கும் ஆர்வமு மில்லை.... அந்த வானத்தையோ.... மலைகளையோ.....எந்த மனிதரையோ கண்ணெடுத்துப் பார்க்கும் மனநிலையில் இவள் இல்லை. அந்தப் பெண்ணின் உதடுகள் சுவைத்துக் கொண்டிருக்கும் சிகரெட்டின் புகைநாற்றம் இன்னும் எரிச்சலைக் கொடுத்தது.

எழுந்து உள்ளே போய் அந்தக்கண்ணாடிக் கதவை இறுக மூடினாள். மருந்து ஏறி முடிந்திருந்தது.


பொன்.கணேசமூர்த்தியின் துளித்துளியாய் தொடர்கதை யில் அவள் கவனம் சிந்திக்கொண்டிருந்தது.

வன்னியின் துயர் நிறைந்த நாட்களை அந்தத்துயர்களை அனுபவித்த அந்தக்கதையின் மாந்தர்களின் கண்ணீர் நிறைந்தவாழ்வும் துயரமும் அவளையும் அழவைத்துக் கொண்டிருந்தது.

அந்தத்துளித்துளியாய் தொடர்கதையின் நாயகன் குன்றனின் இறுதித்துளிகள் அவளது நோய்போல் முடிவின்றி முடிந்தது.

இதயத்தைக் கனக்க வைத்துக் கொண்டிருந்தது. ஆனால், அந்த வாழ்வுக்குள் ஒரு பெரும் பாசப்பிணையள் இருந்ததை அவளால் உணர முடிந்தது. இங்கோ இவள் அன்னிய முகங்கள் நடுவே தனித்துப் போய்.....என்ர கதையையும் இன்னொரு கையெழுதி முற்றும் வைக்குமோ.... அப்படித்தான் நினைத்தாள்.... நோயில் கிடப்பது என்பதும் துயரில் அழுவது என்பதும் எத்தனை கொடுமை.....? மருத்துவமின்றி அந்த மாந்தர்கள் துடித்தார்கள்.

இவளோ கண்ணாய் கவனிக்கும் மருத்துவர்கள் தாதியர்களென அத்தனை பேரும் அருகிருந்தும் யசருமற்ற தனிவெளியில் விடப்பட்டதாய்..... யாராவது உறவுகள் அருகிலிருந்து அழாதை.... எனக்கண்ணீரைத் துடைத்து ஆறுதல் சொல்லார்களா.....? அவள் ஏக்கமது.... ஆனால், யாரும் அருகின்றி அவள் தனித்து அந்த அறையில்....."ஆயிரம் செல்வங்கள் கோடி அது யாருக்கு இங்கே வேண்டும் அரைநொடியென்றால் கூட அந்த ஆனந்தமொன்றே போதும்". ஏதோ ஒரு திரைப் படப்பாடலின் வரிகள் இதய அறைகளில் ஒலித்துக் கொண்டிருந்தது.... ■




## உலக அதிசயங்கள்


தாஜ்மகால் ~இந்தியா
மாபெரும் சுவர் ~சீனா
பிரமிட்டு ~எகிப்து
சுதந்திரச்சிலை~அமெரிக்கா
சாய்ந்த கோபுரம் ~இத்தாலி
தொங்கு தோட்டம் ~பபிலோனியா
நயகரா நீர் வீழ்ச்சி ~வடஅமெரிக்கா

சோ.தர்ஷா,
உடையார் கட்டு ம.வி.

## எங்கள் புறா

புறாக்களில் பல இனங்கள் உண்டு. புறா சமாதானத்தின் அடையாளமாகவும் கொள்ளப் படுகின்றது. துருவப்பிரதேசம் தவிர்ந்த ஏனைய நாடுகளில் புறாக்கள் வாழ்கின்றன.

மாடப்புறா, மணிப்புறா, தவிட்டுப்புறா, பச்சப்புறா என்பன புறாக்களில் சில இனங்களாகும். கோவில் கோபுரங்களில் காணப் படும் புறா மாடப்புறா. புறாக்கள் வீடுகளில் செல்லமாக வளர்க்கப் படும் ஒரு செல்லப்பிராணியாகும். வீடுகளில் வளர்க்கப்படும் புறாக்களில் விசிறி வர்ல் புறா எனும் ஆடும் புறாவும் உள்ளது. சாதாரண புறாக்களுக்கு 12 வால் இறகுகளே உண்டு. ஆடும் புறாவுக்கு 40 வால் இறகுவரை உள்ளன. இவற்றை விரித்து புறா ஆடும் போது மிக அழகாக இருக்கும். தானியங்களும் விதைகளும் புறாவின் உணவாகும். இரையை சேகரித்து வைத்துக்கொள்ள புறாவிற்கு தீனிப்பை உள்ளது. வேண்டிய போது இரையில் ஒரு பகுதியை இரைப் பைக்குக் கொண்டு சென்று செரிமானம் செய்துகொள்ளும். பறவைகளில் அதிகம் நீர் அருந்துவதும் இதுதான். புறா கோழிபோல் தலையைத்தூக்கி நீர் அருந்தாது. மாறாக நீரில் அலகைவைத்து உறிஞ்சிக் குடிக்கும்.



ஆண் புறாவும் பெண் புறாவும் இணைபிரியாமல் வாழும். இரண்டுமே அடைகாக்கும். இரண்டுமே குஞ்சுகளுக்கு உணவூட்டும். நெடுந்தொலைவுக்கு பறக்கக் கூடியதில் புறாவும் ஒன்று. இதனால் பண்டைய காலத்தில் புறாக்களைப் பயன்படுத்தி செய்திகளை அனுப்பியதும உண்டு.

எமது பகுதிகளில் வீடுகளில வளர்க்கும் புறாக்களில் கர்ணப்புறா எனும் இனம், பறக்கும் போதே கர்ணம் போடும். அதைவிட சிலர் அயலவரின் புறாக்கள் வானத்தில் பறக்கும்போது தங்களின் புறாக்களையும் வானில் பறக்கச் செய்து அயலவரின் புறாக்களை பிடித்து விடுகின்றார்கள். சில சிறுவர்கள் இதற்கென பிரத்தியேகமாக அனுபவமுள்ள (சேவிஸ்புறா) புறா ஒன்றையும் வளர்க்கின்றனர். இந்தப் புறா எங்கே யாவது தூரதேசத்தில் கொண்டு போய் விட்டாலும் வீடு வந்து சேர்ந்து விடும்.



செ.செல்வரதி,
பாரதி இல்லம், வள்ளிபுனம்.

## நடந்துவாடி பாப்பா

செல்லமாகச் செல்லமாகச்
சிரித்து வாடி பாப்பா
மெல்ல வாடி மெல்ல வாடி
விழுந்திடாதே பாப்பா!

காலை வைத்துக் காலை வைத்துக்
களித்து வாடி பாப்பா பாலை
இங்கே கிண்ணந் தன்னில்
பார்த்து வாடி பாப்பா

வாய் நுரைக்க வாய்நுரைக்க
பருக வாடி பாப்பா
பாய் விரித்தே அம்மா கூடப்
படுக்க வாடி பாப்பா!

## சொற்சிலம்பம் - 62

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| க் | சூ | ம | சி | ர | ட் | ற |
| ய | கு | நீ | த | ள் | ர் | ல் |
| ப | பா | ஸ் | ன | ன் | ணி | டு |
| ஒ | ல | ச் | தீ | ச | வி | மா |
| லை | ட் | த | பா | ரா | வ | ஜா |
| அ | வ | கா | இ | ய | க் | க |
| சி | பூ | ப் | ஓ | சி | வி | ம் |

கட்டங்களில் காணப்படும் எழுத்துக்களை இணைத்து கேட்கப்படும் வினாவுக்கு விடை அனுப்பி வையுங்கள்.

## சொற்சிலம்பம் - 60 இன் விடைகள்

01. தவளைப்பாய்ச்சல்

02. மார்க்கோணி

### சொற்சிலம்பம் - 60 இன் பரிசுக்குரியவர்

கு.அன்பழகி, தரம்:-09,
கிளி/வேரவில்.இந்து,
மகாவித்தியாலயம்.

### சொற்சிலம்பம் - 60 இன் பாராட்டுக்குரியவர்கள்

01. A.நிரோசி,
ஆஸ்பத்திரி வீதி,
மன்னார்.

02. க.கஸ்தூரி,
யாழ்.கொடிகாமம்,
திருநாவுக்கரசு ம.வி.

03. ம.நிறோஜன்,
யா/தாளையடி றோ.க.த.க,
பாடசாலை.

04. சு.சுபராஜ், தரம் -04,
155, லக்சபானவீதி
தோணிக்கல், வவுனியா.

05. மாதவி,தரம் -04,
றோ.க.பாடசாலை,
புதுக்குடியிருப்பு.

06. வி.லக்ஷனா,
நட்டாங்கண்டல் த.வி,
பாண்டியன் குளம்.

07. ஸ்ரீ.சகிதா,
இல,65 உதயநகர் மேற்கு,
கிளிநொச்சி.

08. உ.றமேஸ்குமார்,
உடுத்துறை ம.வி,
உடுத்துறை.

01. யசீர் அரபாத் எந்த இயக்கத்தின் தலைவர்?

01) ........................................

சொற்சிலம்பம்-62
ஈழநாதம்.
யாழ் சாலை,
கிளிநொச்சி.

02. இலங்கைக்கான ஜப்பானின் விசேட தூதுவர்?

01) ........................................


பெயர் :- ........................................

முகவரி :-........................................

........................................

## முயலாரின் வீடு

பகுதி-02



## சென்றவாரத் தொடர்ச்சி...

இந்நிலையில் 1999 நடைமுறைப்படுத் தப்பட்ட புதிய கல்விச் சீர்திருத்தத்தின்கீழ் நடைமுறைக்குவந்த 6ஆம் தரம் தமிழ் மொழியும் இலக்கியமும் என்ற பாடநூலையும் 2004 இல் பல்தேர்வு பாடநூலாக தற்போது வந்துள்ள 6ஆம் தரம் தமிழ்மொழியும் இலக்கியமும் என்ற பாடநூல்களின் இடையே வேறுபாட்டை புரிந்துகொள்ள, இவ்விரு சீர் திருத்தங்களின்படி வெளியான இந்நூல்களின் பாட அலகுகளின் தலைப்புக்களை ஒப்பு நோக்கினாலே ஓரளவு புரிந்துகொள்ளமுடியும்.

1999 இன் பாடநூல் அலகுகள்.

நூலாசிரியர் திரு.ந.சிதம்பரநாதன

01. நமது தாய்மொழி.
02. அருள் விளக்கேற்றுவோம்.
03. நல்லதீர்ப்பு.
04. உயிர்களிடத்தில் அன்பு.
05. பிறர் மனதை புண்படுத்தாமை.
06. முரசு.
07. இயற்கைகாட்டும் இன்பக்காட்சிகள்.
08. பழைய புத்தகம்.
09. உறவுமுறைக் கடிதம்.
10. அவனது ஆசை.
11. வெண்ணிலா.
12. நான் நடுங்கினால் நீங்கள்...
15. சக்தி வள முன்னோடிகள்.
16. நீர்வீழ்ச்சிகளும் மின்சக்தியும்.
17. மனங்கவர்ந்த மலையக சுற்றுலா.
18. வீதித் தூய்மை.
19. வீதி ஒழுங்குகள்.
20. பயணம்.




இத்தலைப்புக்களை மேலோட்டமாகவேனும் ஒப்பு நோக்கும் எவராலும் தமிழின் இலக்கிய செழுமைகள் முன்னைய பாடத் திட்டத்திலிருந்து தற்போதைய பல்தேர்வுப்பாடத்திட்டத்தில் எவ்வளவு தூரம் விலகிச்சென்றுள்ளது என்பதை புரிந்துகொள்ளமுடியும். முன்னைய பாடத் திட்டத்தில் வடிவங்கள் மட்டுமன்றி, உள்ளடக்கமும் தமிழின் தொன்மை, மேன்மை,

உலகம் விரைவாக மாறிவருகிறது. எனவே தகவல் தொழில் நுட்பத்துறையிற் சிறந்த தேர்ச்சியும் திறன் விருத்தியும் அனுபவ முதிர்ச்சி

வேண்டுகின்றேன்.

உலக மயமாக்கல் கருத்துருவாக் கத்தை விரிவாக்கம் செய்வதிலும் உற்பத்தி சார் நடவடிக்கைகளுக்கு பெருந்தூணாக விளங்கும் தகவல் தொழில்நுட்பத்தினை வலியு றுத்தி நிற்பனவாகவே மேற்படி இரு எடுத் துக்காட்டுகளும் விளங்குகின்றன. தகவல் தொழில்நுட்பம் என்பது ஒட்சிசனைபோல உயிர்வாழ அவசியமானது. அது இல்லா விடில் உயிர்வாழ்க்கையே இல்லை என்பதான மிகைப் படுத்தலை நாசூக்காக செய் துள்ளமை கண்கூடு. தகவல் தொழில்நுட்ப அறிவை பெற் றிருக்க வேண்டும் என்பதில் ஒரு கருத்துக்கு இட மில்லை. எனினும் அதனை சுவாசத்திற்கு ஒப்பான தாக கூறுவது எவ்வளவு தூரம் பொருத்தமானது என்பது வினாவாகும்.

தாங்கள் போகும் பூகோள மாதல் திசைக்கு எதிர்காலச்சந்த தியை துணைக்கு அழைத்துச் செலலும் முயற்சி இது எனில் மிகையில்லை. தயாரிக்கப்பட்ட தமிழ்மொழியும் இலக்கியமும் என்ற மூன்று பாடநூல்களிலுமே கருப்பொருட்கள் ஒன்றாத லால் அம்மூன்று நூல்களிலுமே உலகமய மாதல் சிந்தனையும் அதற்கு துணைபோகும் அம்சங்களே பரந்துகாணப்படுகின்றன. மேலே குறித்தவை சில எடுத்துக்காட்டுக்கள் மட்டுமே. அத்துடன் தனியாரால் தயாரிக்கப்பட்ட நூல் களில் ஒன்றில் சுருதி கூட்டியும் மற்றதில் சுருதி குறைத்தும் உலகமயமாதல் ஒலிக் கின்றன என்பது உண்மை.

# பல்தேர்வு பாடநூலில் பலியாகிப் போகும் தனித்துவங்கள்

13. சுவாமி விபுலானந்தர்.
14. வாக்குறுதி.
15. ஜவரானோம்.
16. நீதிச்செய்யுள்.
17. சூழல் காப்போம்.
18. காலையும் இரவும்.
19. ஔவையும் இடையச் சிறுவனும்.
20. மன்னன் மாண்பு.
21. பல்சுவைப்பாடல்கள்.
22. உவமை வழி போதனை.

நூலாசிரியர்.
திரு.வை.கா.சிவப்பிரகாசம்.


01. குதூகலம் குலுங்கும் குடும்பம்.
02. அழகு சிந்தும் கிராமம்.
03. கருத்துள்ள நவீன கொண்டாட்டம்.
04. இனிய வீட்டுத்தோட்டம்.
05. ஆற்றுநீர், ஊற்றுநீர், வேற்றுநீர்.
06. நான் ஓடினால்.
07. நீர்ப்பாதுகாப்பு முறைகள்.
08. நாட்டார் பாடல்கள்.
09. அனிச்சம் பூ.
10. அன்புள்ள ஆரோக்கியா.
11. மாம்பழப்பாகு செய்வோம்.
12. கருத்துப்பரிமாற்ற ஊடகங்களும், சமூகமும்.
13. ஹலோ கலா.
14. தீ....தீ.
15. மூவரில் ஒருவர்.
16. நீர்வீழ்ச்சியின் நவீன பயன்பாடுகள்.
17. இன்பச்சுற்றுலா.
18. வீதியலங்காரம்.
19. அவை நல்ல ஒழுங்குகள்.
20. சிரிப்புத்தான் வருகுது ஐயா.

2004 பல்தேர்வு பாடநூல் அலகு.

01. மகிழ்ச்சியான குடும்பம்.
02. எங்கள் கிராமம்.
03. எமது விழாக்கள்.
04. வீட்டுத்தோட்டம்.
05. நீரை பெறும் வழிகள்.
06. ஆற்றுவளம்.
07. நீர்வளம் பேணல்.
08. நாட்டார் பாடல்கள்.
09. எமது உணவு கலாசாரம்.
10. உணவும் ஊட்டமும்.
11. உணவை பாதுகாப்போம்.
12. தகவற் பரிமாற்றம்.
13. அயலவரும் நாமும்.
14. நெருப்பின் சுயசரிதை.

செழுமை, விழுமியங்கள், பண்பாடு என்பவற்றை தன்னகத்தே கொண்டவையாக விளங்கின.

ஆனால், பல்தேர்வு பாடநூலில் உரையாடல், நாடகம், பாடல், கட்டுரை என வடிவங்கள் உள்ளனவே தவிர, உள்ளடக்கம்




(சக்தி, தொடர்பாடல், நீர்) உலக மயமாக்கலின் நோக்கினை நிறைவுசெய்யும் அம்சங்களாகவே உள்ளன என்பது வெள்ளிடைமலை.

பாடத்தலைப்புக்கள் நேரடியாகவும் மறைமுகமாகவும் உலக மயமாதலின் அம்சங் களையே பிரதிபலிக்கின்றன. சிலவிடங்களில் முண்டுகொடுத்து நிற்கின்றன. இலக்கிய பாரம் பரியங்கள், அம்சங்கள், பண்பாடு அம்சங் களை தவிர்க்கமுடியாமல் கூறநேருகையில், அவற்றை வெறும் தகவல்களாக வெளியிடும் இப்பல்தேர்வு பாடத்திட்டம் உலகமயமாதலின் அம்சங்களையும் துணைபுரியும் அம்சங்களை மட்டும் அதன் நன்மைகள், தேவைகள் பற்றி வானலாவ புகழ்கின்றது. வலியுறுத்தி நிற் கின்றது. மாணவரிடையே வலிந்து ஓர் கருத்துத் திணிப்பை மேற்கொள்ள முனைவதையும் காணலாம்.

"கருத்துப்பரிமாற்றமும் ஊடகங்களும் என்ற தலைப்பிலான 12ஆம் பாட அலகின் இறுதியில் (பாடப்பந்தியிலுள்ளவாறு தரப்படு கிறது.)

யும் பெறுபவர்களுக்கு வளமான எதிர்காலம் வாய்க்கும் என்பதில் ஐயமில்லை" என குறி பிடப்பட்டுள்ளது.

இதேவிடயத்தினை இதேபாடநூலில் பிறிதொரு இடத்திலும் வலியுறுத்தப்படுகிறது. அதனையும் நோக்குவோம்.

பாடம்-13, தலைப்பு- ஹலோ கலா.... (தொலைபேசி உரையாடல்) உள்நாட்டில் வசிக் கும் சிறுமி கீதாவிற்கும் வெளி நாட்டில் வசிக்கும் மாமிக்கும் (உறவுவழி அல்லாத) இடையி லான உரையாடலாக அமைவதை நோக்குவோம் (பாடத்தில் உள்ள வாறே உரையாடல் தரப்படுகிறது.)

ரேகா-...

.கீதாக்கண்ணு. நீ நன்றாகப்படிக்கக் கூடியவள் என்று எனக்குத்தெரியும். கடைசியாக நடந்த பரீட்சையில் எத்தனை 'ஏ' சித்தி பெற்றாய்? சங்கீதமா? நடனமா? சித்திரமா? உனக்கு பிடித்த பாடம்?

கீதா-

எல்லாப்பாடங்களிலும் 'ஏ சித்தியே கிடைத்தது. சங்கீதத்தில் எனக்கு விருப்பம் இருந்தாலும் தகவல் தொழில் நுட்பத்திலேதான் எனக்கு அதிக ஆசை.

ரேகா-

கீதா ஏன் தகவல் தொழில் நுட்பக்கல்வியை அதிகம் விரும்புகிறாய்?

கீதா-

மாமி, தகவல் தொழில் நுட்ப விஞ்ஞானம் கற்றால் எதிர்காலத்தில் தொழில் வாய்ப்புக்கள் கிடைக்கும். அதுமட்டும் இல்லை சமூக சேவைசெய்ய சந்தர்ப்பமும் கிடைக்கும்.

**தருமை வதனன்**

ரேகா-

கீதாக்கண்ணு...நீ நல்ல புத்திசாலி. நீ சொல்வதைக் கேட்கக் கேட்க சந்தோசமாய் இருக்கிறது. நான் உனக்கு என்னசெய்ய வேண்டும் சொல்?

கீதா-

தாங்யூ மாமி, இப்போது படிக்கும் தகவல் தொழில் நுட்ப விஞ்ஞானக்கல்விக்கு இங்கே கிடைக்கும் புத்தகங்களும் சஞ்சிகை களும் போதும். பல்கலைக்கழகக்கல்வி கற் கும் சந்தர்ப்பத்தில் அம்மா உங்களோடு தொடர்பு கொள்வா.

உங்கள் ஆசிமட்டும் இப்போது

ஒரு வருடத்திற்கான 160 பாட வேளைகளில் (பல்தேர்வு பாடத்திட்டப்படி) சக்தியும் தொடர்பாடலும் என்ற கருப்பொரு ளுக்கே அதிக பாடவேளைகள் ஒதுக்கப்பட்டுள் ளன. அதாவது 40 பாடவேளைகள் ஒதுக்கப் பட்டுள்ளமை இக்கருப்பொருளுக்கு அளிக்கப் பட்ட முக்கியத்துவத்தை உணர்த்துகிறது. ஏனைய கருப்பொருட்களும் வணிக நோக்கிலா னது. அல்லது அதற்கு துணைசெய்வதாகவே உள்ளமையால் கணிசமான பாடவேளைகள் இதற்காக பயன்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளன என்றே கொள்ளவேண்டும்.

இத்தகைய நிலைமையானது இன்றைய உலகில் எஞ்சியிருக்கின்ற மானுட விழுமியப் பண்புகளை மேலும் அழிவுப் பாதைக்கே இட்டுச் செல்லும். எமது பகுதி பாடசாலை ஒன்றில் அண்மையில் நடந்த சம்பவம் ஒன்றை எடுத்துக் காட்டாகக் கொள்வது மிகப்பொருத்தமாக அமை யும். தரம்-9 வகுப்பறையில் ஆசிரியர் ஒருவர் தமிழ் மொழியும் இலக்கியமும் என்ற பாடத்தில் பாஞ்சாலி சபதம் என்ற பாடப்பகுதி கற்பித்து முடிந்தபின், புத்தகத்தின் பாடப்பரப்புக்கு அப் பால் பாஞ்சாலிக்கு நிகழ்ந்தது என்ன? அக் கதையை முழுமையாக அறிய மாணவர்கள் ஆர்வமாய் கேட்டனராம். ஆசிரியரும் மிகுதிக் கதையை கூறி கர்ணன் திரைப்படத்தில் பாஞ் சாலியின் துகில் மலை போல் குவிந்துகிடப் பதை நன்றாகக் காட்சிப் படுத்தி இருக்கிறார்கள் என்றாராம் அவர். இதைக்கேட்டதும் ஒரு மாணவி "ச்சே...அநியாயம்....அந்தக் காலத்தில் (பாஞ்சாலி துகில் உரியப்பட்ட) நான் பிறக்க வில்லையே...என்று வருத்தப்பட்டாளாம். பாஞ் சாலியின் துகிலுரிந்த துச்சாதனனை துவம்சம் செய்து, கொடூரத்தை பார்த்திருந்த பாண்டவருக் கும் நாலு கேள்வி கேட்டிருப்பேன்." என்றுதான் கூறப்போகிறாள் என நினைத்து ஆசிரியரும் 'ஏன்' என்று கேட்டாராம்.

துச்சாதனன் உரியும் போது மலை போல் குவிந்த பாஞ்சாலியின் சேலையை, அள வளவாக வெட்டி, கூடியவிலைக்கு விற்றிருப் பேன். இந்திய சேலை நல்லவிலைபோகும் என்றாளாம் அம்மாணவி.

இங்கு குறிப்பிட்ட மாணவி பாஞ் சாலிக்கு நேர்ந்த அவலத்தையிட்டு வருத்த மடையவோ, பெண் ஒடுக்கு முறைக்கு எதி ராகவோ கிளர்ந்தெழும் மனவெழுச்சியை வெளிப்படுத்துவதற்குப்பதிலாக, (துகில்) உரியப் பட்டதிலும் உழைப்பைத்தேடி, இலாபம் தேடும் மனப்பாங்கையல்லவா வெளிப்படுத்தியுள்ளாள். மாறிவருகின்றகாலங்கள் சமூக நீதியையும் மானுடப்பண்புகளையும் தின்று எதனையும் வணிகக் கண்கொண்டே பார்க்கும் சமூகம்

(21ஆம் பக்கம் பார்க்க)


# திறன்மிகு நுண்ணுயிரிகள்





ஜப்பானில் கண்டு பிடிக்கப்பட்ட 'திறன்மிகு நுண்ணுயிரிகள்' என்ற கருத்து இன்று அனைத்து நாடுகளிலும் பிரபலமாகிவருகின்றது. அறிவியலில் அனைத்து கண்டுபிடிப்புகளும், தயாரிப்புமுறைகளும் காப்பீடு உரிமை பெற்றுவருகின்ற இக்காலத்தில் 'காப்பீடு உரிமை' ஏதும் பெறாத இந்தக் கருத்து இன்று மிகவும் பரபரப்பாகப் பேசப்பட்டு வருகின்றது.

மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கு நெதர்லாந்து நாட்டில் 'திறன்மிகு நுண்ணுயிரிகள்' திரவம் தயாரிக்கப்பட்டு வருகின்றது.

பழுப்பு நிறத்தில் இருக்கும் அடர்வு மிகுதியான இந்தத் திரவத்தில் லாக்டோபேசிலஸ் பாக்டீரியா, ஒளிச்சேர்க்கை பாக்டீரியா, ஈஸ்ட், அசிட்னோமைசைட்ஸ் ஆகிய நுண்ணுயிரிகள் உள்ளன. இந்த நுண்ணுயிரிகள் இயற்கையான முறையில் சேகரிக்கப்பட்டவையாகும். காற்றுள்ள சூழ்நிலையிலும் காற்றில்லா சூழ்நிலையிலும் வளரும் வகையில் இதில் நுண்ணுயிரிகள் உள்ளன. இந்த திறன்மிகு நுண்ணுயிரி திரவத்தை ஸ்வீடன் விவசாய விஞ்ஞானி பிரபலப்படுத்திவருகின்றார். இது கழிவு நீரை சுத்திகரித்து மீண்டும் பயன்பாட்டுக்கு உரிய நீராக மாற்றுவதில் முக்கியபங்கு வகிக்கின்றது. அடர்வுமிகுதியான இந்தத் திரவம் முதலில் காபோஜதரேற் மிகுதியான வெல்ல நீரில் கலந்து ஒரு வாரத்திற்கு நொதித்தல் முறைக்கு உட்படுத்தப்படுகின்றது. பின்பு மீண்டும் அரிசி கழுவிய நீரில் நொதித்தல் முறைக்கு மீண்டும் உட்படுத்தப்படுகின்றது.




இவ்வாறு தயாரிக்கப்பட்ட இந்தத் திரவம் ஜியோலைட் எனப்படும் வேதிப்பொருளுடன் கலக்கப்பட்டு கழிவு நீரில் இடப்படுகின்றது. இந்த திறன்மிகு நுண்ணுயிரி திரவத்தில் ஒட்சிசன் ஒடுக்கும் பண்பு மிகுதியாக உள்ளது. எனவே, கழிவு நீரில் உள்ள துர்நாற்றத்தை இது உடனடியாக நீக்குகின்றது. இந்தத் திரவத்தை திடக் கழிவுப் பொருட்களை உரமாகவும் பயன்படுத்தலாம். கழிவு நீரைச்சுத்திகரிக்க மட்டுமன்றி இது வயல்கள், தோட்டங்களில் உள்ள பயிர்கள், தாவரங்களின் வளர்ச்சியை அதிகரிக்கவும் 'திறன்மிகு நுண்ணுயிரி' திரவம் பயன்படுத்தப்படுகின்றது. வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யாத, பன்னாட்டு நிறுவனங்களால் தயாரிக்கப்படாத, மரபணு மாற்ற தொழில்நுட்பங்கள் ஏதும் இல்லாத திறன்மிகு நுண்ணுயிரிகள் திரவம் என்பதால் சுற்றுச்சூழல் நிபுணர்களும், ஆர்வலர்களும் இதனை உடனடியாக ஏற்றுக்கொண்டுள்ளனர். மூன்றாம் உலக நாடுகளில் நதிகளைச் சுத்திகரிக்க தற்போது லட்சக்கணக்கான ரூபாய் செலவிடப்பட்டு வருகின்றது. நதிகள் சுத்திகரிப்பிலும் திறன்மிகு நுண்ணுயிரி திரவத்தையும் பயன்படுத்தலாம் என ஸ்வீடன் விவசாய விஞ்ஞானி கூறுகின்றார்.



**த.அருவி**

---

# நீரிழிவு நோயாளிகளுக்கு முக்கியமான ஆலோசனைகள்




நீரிழிவுநோய் பற்றிய அனாவசியமான பயம் பொதுவாக நிலவுவதைக்காண்கிறோம். இப்பயம் தவறானது. முன்னேற்றம் அடைந்துவிட்ட தற்கால வைத்திய முறைகளைப் பயன்படுத்துவதோடு, அவசியமான உணவுக் கட்டுப்பாடுகளை கடைப்பிடிப்பதன் மூலம் நோயைக் கட்டுப் படுத்தி ஏனைய சராசரி மனிதர்களைப் போலவே நீரிழிவு நோயாளர்களும் நலமான பூரண வாழ்வு வாழலாம்.

சில நோயாளிகளுக்கு - முக்கியமாக வயதான நீரிழிவு நோயாளிகளுக்கு - உணவுக் கட்டுப்பாடுடனேயே நோயைக கட்டுப்படுத்தக்கூடியதாக இருக்கும். ஏனையோர்கள் தினசரி மாத்திரைகளை உட்கொள்ளவோ அல்லது தினசரி இன்சுலின் ஊசி மருந்தை ஏற்றவோ வேண்டியிருக்கும். இவர்களும் உணவுக் கட்டுப்பாடுகளை கட்டாயம் அனுசரிக்கவேண்டும்.

நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்த முடியுமேயன்றி முழுமையாக குணப்படுத்த முடியாது. எனவே சரியான உணவு முறைகளைக் கடைப்பிடிப்பதையும், மருந்துகளை உட்கொள்வதையும் சீவியகாலம் முழுவதும் தொடரவேண்டி நேரிடலாம்.

நீரிழிவு நோயாளர்கள், வேறு நோய்களால் பாதிக்கப்படும் போதும், அவற்றிற்கான மருந்துகளை உட்கொள்ளும்போதும், நீரிழிவு நோய்க்கான மருந்துகளை நிறுத்திவிடக்கூடாது; தொடர்ந்து உட்கொள்ள வேண்டும். கிருமியால் தொற்றும் நோய்கள் ஏற்படும் போது நீரிழிவு அதிகரிக்கும்; அத்தருணங்களில் கூடிய அளவு நீரிழிவு மருந்துகளை உட்கொள்ளும்படி வைத்தியர் ஆலோசனை கூறக் கூடும்.



பாதங்களில் ஏற்படும் புண்களே நீரிழிவு நோயாளர்களுக்குப் பெரும்பாலும் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்துகின்றன. எனவே உங்கள் பாதங்களின் பாதுகாப்பில் போதிய கவனம் செலுத்துங்கள். எப்பொழுதும் காலணிகளை அணியுங்கள். கால்களை- முக்கியமாக விரலிடுக்குகளைச் சுத்தமாகவும், ஈரலிப்பின்றியும் வைத்திருக்கவேண்டும்.

நகங்களை வெட்டும் போது விரல் நுனிகளை காயம்படாமல் அவதானமாக (வளைத்து வெட்டாமல், நேராக) வெட்டவேண்டும்.

தள்ளாட்டம், எளிதில் கோபமடைதல், கடும் பசி, வியர்வைபோன்ற அறிகுறிகளை அலட்சியப்படுத்தாதீர்கள். இவை இரத்தத்தில் குளுக்கோசின் அளவு மிகவும் குறைவதால் (Hypoglycemia) ஏற்படலாம். அலட்சியப்படுத்தினால் மயக்கம் (Coma) ஏற்படலாம். இது ஆபத்தானது. எனவே ஆரம்ப அறிகுறிகள் தென்பட்ட உடனேயே சிறிது இனிப்பை (குளுக்கோஸ்/சீனி/இனிப்பு) உட்கொண்டால் சிறிது நேரத்தில் தெளிவு ஏற்படும். பதினைந்து நிமிடங்களுக்குள் திருத்தம் ஏற்படாவிட்டால், நோயாளியை வைத்தியசாலையில் அனுமதிக்கவேண்டும்.

இரத்தத்தில் குளுக்கோசின் அளவு அதிகமானாலும் (Hyperglycemia) மயக்கம் உண்டாகலாம். இதன் ஆரம்ப அறிகுறிகளாக, அதிக தூக்கம், அதிக தண்ணீர்த் தாகம், அடிக்கடி சிறுநீர் கழித்தல், வாந்தி போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

இரண்டு விதமான மயக்கத்தையும் வேறுபடுத்தி அறிவது அவசியம், எவ்வகை மயக்கம் என்பது உறவினர்களுக்குத் தெளிவாகாவிட்டால் முற்கூறியபடி இனிப்புக் கலந்த பானத்தைப் பருக்கி 15 நிமிடம் அவதானிக்கவேண்டும். நோயாளிக்குத்தெளிவு ஏற்படாவிட்டால் வைத்திய சாலையில் அனுமதிக்க வேண்டும்.

நீரிழிவு நோயாளிகள் தமது பிள்ளைகளுக்குத் திருமணம் செய்து வைக்கமுனையும்போது, பரம்பரையில் நீரிழிவு இல்லாத குடும்பத்தில் வரன் எடுப்பது நல்லது. இதனால் அவர்கள் தமது பேரக் குழந்தைகள் எதிர்காலத்தில் நீரிழிவு நோய்க்கு உட்படுவதற்கான சாத்தியக்கூறைக் குறைக்க முடியும்.



## கவிதைகள்

### விருப்பங்களுக்கு அப்பால்...!

நான் சிரிக்கும் பொழுதுகளில்
யாரையோ மயக்கப்போகிறாள்
என்கிறார்கள்.
நான் அழுகின்ற பொழுதுகளில்
நல்ல நடிப்புக்காரி என்கிறார்கள்.
நான் மௌனித்திருக்கின்ற
பொழுதுகளில்
சரியான பிடிவாதக்காரி என்கிறார்கள்.
நான் சற்றுக் கதைக்க
எத்தணிக்கின்ற பொழுதுகளில்
பொல்லாத வாய்க்காரி என்கிறார்கள்.
நான் சோகமாகத் திரிகையில்
விடியாத மூஞ்சைக்காரி என்கிறார்கள்.
நான் கொஞ்சமென்னை அலங்கரிக்கையில்
சரியான ஆட்டக்காரி என்கிறார்கள்.

இப்போ
அடுப்பூதிக்கொண்டிருக்கும் நான்
படிக்கின்ற காலங்களில்
விஞ்ஞானம் படிக்கும்படி வற்புறுத்தப்பட்டேன்
ஒரு வைத்தியராக வருவதே
எனது அப்பாவுக்கு விருப்பமென்பதால்....

பதினாறு வயதில்
என்னை அன்பு செய்த ஜீவனுக்கு
கலங்கிப்போன கண்களால்
நன்றி சொல்லிப் பிரிந்தேன்
'பெண்' திருமணம் செய்யவேண்டியது
பெற்றோர்களது விருப்பப்படியே என்பதால்....

கவிதைப் புத்தகங்கள் படிக்கும்
கனவுகளை கத்தரித்துவிட்டு
எனது சம்பாத்தியத்திலும் கூட
நடுப்பக்க சினிமாவரும் சிற்றிதழ்களையே
வாங்கிப் போட்டுக் கொண்டிருக்கின்றேன்
வீட்டில் எல்லோருக்குமே
அது தான் பிடிக்குமென்பதால்....

எனது ஓய்வுப் பொழுதுகளில்
முற்றத்து மாமரத்துக்கு கீழிருந்தே
புத்தகங்கள் வாசிக்கின்றேன்
எங்கள் வீட்டு நாய்க்குட்டிக்கும்
எனது கால்மீதே
தலைவைத்துப்படுக்க விருப்பமென்பதால்...


நான் வாழ்ந்து முடிப்பதற்குள்
எப்போதாவது
எவரேனும்
எனது விருப்பங்கள் பற்றியும்
கேட்க மாட்டார்களா?

யாழ்வீரன்

### ஒளியின் நடனம்...

காற்றில்....
நழுவவிட்ட –உன்
வார்த்தைகளை
முட்களாய் மாற்றும் வித்தை
எங்கனம் சாத்தியமாகிறது... என்
எண்ணக் கூட்டிற்குள்
குஞ்சு பொரித்துக்
காத்திருக்கும்....
நிறையக் கேள்விகள் – ஆனாலும்
அன்பே!...
எனக்குள் நிகழ்கிறது
ஒளியின் நடனம் – என்
கனவுகளிற்கு
ஒளியூட்டிய படி....
நான்– கைகளை
குவித்துக் கொண்டு
காவலிருக்கிறேன்...
ஒளியின் நடனம்
நின்று போகாதிருக்க... இப்போது
தீர்ந்து போயிருக்கிறது
உள்ளிருந்தேயெழும் கவிதை
ஆச்சரியமாய்....
எனக்கே புரியாதிருக்கின்ற
இக் கவிதையின் பாடுபொருள்
எனினும்
எனக்குள் நிகழ்ந்து...
கொண்டேயிருக்கிறது....
இன்னும் தீராமல்
ஒளியின் நடனம்.

த.அகிலன்



மீண்டும் மீண்டும் பாடக் கூடியமாதிரி, மீளமீள நினைவில் எழுகிறமாதிரி, காதில் இனிய இசையடையாகத் தங்கிவிட்ட மாதிரி, சிலபாடல்களைக் கொண்டொரு இசைத்தட்டாக வந்துள்ளது - அலைபாடும் பரணி.

கொண்டிராதது ஒரு காரணம். வாழ்வைவிட்டு விலகியிருப்பது இன்னொரு பக்கம். ஆனால், வாழ்வின் இரத்தமும் சதையுமான உணர்வுகளையும் அதன் வலிய சேதிகளையும் விடுதலைப்பாடல்கள் சொல்வதால் அவை 'கசெற் இலக்கியம்' என்ற தனிக் கவனிப்புக்கு மிகச் சுலபமாக வந்துவிட்டன.

இந்தப் பாடல் இசைத்தட்டும் கசெற் இலக்கியத்தின் ஒரு பகுதிதான். கடற்புலிகள், கடற்கரும்புலிகள், நீளநெடும்பயணத்தில் கடலோடி விடுதலைத் திரவியம் கொண்டு வரும் நீரோடிகள், கடலோரமக்கள் எல்லோரின் வந்திருப்பது பரணிப்பாடல்கள், வெற்றிச்சங்கு என்பதன் இன்றைய வடிவமா என்றும் யோசிக்கவைக்கிறது.

சிலபாடல்கள் சடாரென கீழேயிறங்கி சோகந்ததும்பும் இசையை மீட்டுகின்றன. கடல் வாழ்க்கை எப்படியெனச் சொல்கின்றன.

பாடல்கள் புலிவீரத்தைச்சொல்கின்றன. நேவியின் ஆய்க்கினைகளைச் சொல்கின்றன. கடலோர வாழ்வின் கதியைச் சொல் கின்றன. கடல் வாழ்க்கை எப்படியெனச் சொல்கின்றன.

வீரம், வெற்றி, இழப்பு, துயரம், எதிர்பார்ப்பு, வேண்டுதல் என்று வாழ்வின்

# அலை பாடும் பரணி

## பாடல்கள் பற்றிய பகிர்வு

இந்தச் CD யில் அல்லது கசெற்றில் ஒன்பது பாடல்களுள்ளன. ஒன்பது பாடல்களும் கடலை மையமாகக் கொண்டவை.

எங்களுடைய கடல், கடற்புலிகள் ஆளுகின்ற கடல், கடற்கரும்புலிகளின் நினைவுகளூறிய கடல். கடற்புலிகளின் காவலோடு கடலோடிகள் படகோடும் கடல்.

இந்தக் கடலில் - நீள நெடும்பயணம் போய் விடுதலைக்காய்த் தேடித்திரவியம் கொண்டுவந்த எங்கள் கப்பலோடிகளின் கதையை அலை பாடுகிறது பரணியாய்.

அலைக்குத்தான் தெரியும் ஆயிரம் ஆயிரம் ரகசியங்களை சொல்லமுடியாதிருக்கும். பெருங்காவியங்களில் உண்மைகளை, கடற்கரும்புலிகளாயும் கடற்புலிகளாயும் கடலிலே காவியமான விடுதலை முகங்களை அலை அறியும். வீரப்புலிகளின் மனங்களை அலைக்குப்புரியும். அவர்களாடிய சமர்களை அலைஅறியும்.

அலை சொல்லத் துடிக்கும் சேதிகளை உற்றுக் கேளுங்கள். அது பாடுகிறது பரணி. அது பாடுகிறது நெய்தலை. அது பாடுகிறது கடற்காவியத்தை. அது பாடுகிறது கடற்புலிகளின் பாயிரத்தை.

இங்கே அலைபாடும் பரணியில் ஒன்பது பாடல் களிருக்கின்றன. நெடும் பயணத்தில் ஆழக்கடலோடி விடுதலைக்கு 'வெற்றிக் கணைகள்' கொண்டுவரும் புலிகளின் நினைவாய் இந்தப் பாடல்கள் வெளியிடப் பட்டுள்ளன. ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதம். ஒவ்வொன்றும் அதனதன் செழிப்போடு இசைக்கின்றன.

'கசெற் இலக்கியம்' என்று சொல்லப்படுமளவுக்கு கடந்த இருபதாண்டுகளில் தமிழீழ விடுதலைப்பாடல்கள், எழுச்சிப்பாடல்கள் அடையாளம் பெற்றுள்ளன. எத்தனைதான் பக்திப்பாடல்கள் வந்துள்ள போதும் அவற்றால் தனி அடையாளத்தைப் பெறமுடியவில்லை. அவை எந்தப் புதுமையையும்

வாழ்வும் உணர்வும் கதையுமுண்டு.

பாடல்களை வீரா, நாவண்ணன், அம்புலி, வேலணையூர் சுரேஷ், புதுவை இரத்தினதுரை, அறிவுமதி ஆகியோர் எழுதியுள்ளனர். வசிகரன், நிரோஜன்,சுகுமார், சீலன், சாந்தன், இசையரசன், சந்திரமோகன், திருமலைச்சந்திரன், யுவராஜ், மணிமொழி, மேரிஎனப்பலர் பாடியிருக்கிறார்கள்.

இந்த இசைத்தட்டின் விநோதக்கலவைகளாக ஒவ்வொருபாடல்களும் ஒலிக்கின்றன. இசைப்பிரியனின் இசையாள்கை பாடல்களை நினைவோடு இணைத்து விடுகின்றன. கடலோரத்தில் நிற்பதாக உணர்வேற்படுகிறது சில பாடல்களில். கடலில், அலைகளின் எறிவுகளில் விழுந்தெழும்பிப் பயணிப்பதாக இருக்கிறது சில பாடல்கள். வசி, மேரி, அந்தச் சின்னப்பிள்ளை இசையரசன்



கடலோடிகளின் நினைவோடிடும் கானப்பதிவு

பாடல்களில் கூடுதலாக இளையோரே பங்கேற் றிருக்கிறார்கள். பாடல்களை எழுதியுள்ள வீரா, வேலணையூர் சுரேஷ், அம்புலி மற்றும் ஒலிப்பதிவுக் கலைஞர் மலையவன், இசைய மைப்பாளர் இசைப்பிரியன், இணைக்கலைஞர்கள் திருமாறன், கபிலன் ஆகியோரும் பாடகர்களில் இசையரசன், வசிகரன், நிரோஜன், சந்திரமோகன், மேரி

என்போரும் இளையோரே.

இதனால்தானோ என்னவோ புது ரத்தம் பாய்வதுபோல இந்த இசைத்தட்டு துள்ளிசையும் மெல்லிசையும் கலந்திருக்கிறது. இந்தத் துள்ளிசையும் மெல்லிசையும் கலந்த கலவையாக இது என்ற இளைய குரல்கள் புதியவரவாக மகிழ்வூட்டுகின்றன.

எல்லாவற்றையும் ஒரு துளியாக்கித் தருவதில் இசையமைப்பாளரின் திறன் இருக்கும். இங்கே இசைப்பிரியன் அதை வெற்றியாக்கியுள்ளார். இளைய இசைப்பிரியனுக்கு பாராட்டுக்கள் கூடவே அலைகளுக்கும்.

ஒரு பாடலில் மட்டும் வேறெங்கோ கேட்ட இசையும் பாடல்களும் மெல்ல நினைவுவெளியில் தட்டுகிறது. மற்றும்படி வெற்றிகரமான பாடல்கள்.

நிதர்சனத்தின் உருவாக்கத்தில் கடற்புலிகள் வெளியீடாக இந்த இசைத்தட்டு வெளிவந்துள்ளது.

அழகேந்தி

# மேலும் மேலும் வெளிவரும் --------
# சிங்கள மக்களின் மன உணர்வுகள்

25-07-2004 சண்டே லீடர் இதழில், செஸ்ளாஸம்ஸ் ஒரு கருத்துக்கணிப்பின் பெறுபேறுகளை வெளியிட்டிருந்தார். "பிரபாகரன் தேர்தலில் நின்றால் வாக்களிப்பீர்களா?" என்பதுதான் கருத்துக்கணிப்புக்கான ஒரே கேள்வியாக இருந்தது. அவர் கருத்துக்கோரியவர்களில், அவரே வெளியிட்ட பதில்களின் அடிப்படையில் (வெளியிடாதவற்றில் இந்த வீதம் அதிகமாக இருக்கலாம்) 66% மானோர் "ஏன் வாக்களிக்கக்கூடாது என்பதிலிருந்து அவர் ஆட்சிக்கு வந்தால் குற்றச்செயல் குறையும்'', ''சட்டமும் ஒழுங்கும் பேணப்படும்", "விடாப்பிடியான கொள்கைப்பிடிப்புள்ள அவர்தான் நாட்டில் சட்டம் ஒழுங்கை தளம்பாமல் பேணுவார்'' போன்ற கருத்துகளை வெளியிட்டிருந்தனர். (எரிமலை - ஓகஸ்ட் 2004 ''பிள்ளையார் பிடிக்க குரங்காய் முடிந்த கதை" கட்டுரையை பார்க்கவும்) ஐலண்ட் பத்திரிகை தமிழர்கள், புலிகள், பிரபாகரன் என எல்லோருக்கும் எதிரான பச்சை இன வாதத்தை கக்கும் பத்திரிகை என்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம். தமிழ்த் தேசிய எதிர்ப் பாளர்கள் அல்லது UTHR(J) போன்ற போலி அமைப்புகளுக்கு களம்தந்து களிப்பதும் தெரிந்த விடயம்தான். ஆங்கிலத்தில் வெளிவரும் 'ஐலண்ட்' பத்திரிகையே இதில் அதிக தீவிரம் காட்டும் ஒரு தென்னிலங்கை பத்திரிகையாகும். தமிழ்த் தேசியத்துக்கு எதிரான கருத்துகளை வெளிநாட்டவர் நுகர்வுக்கு வழங்குவதுதான் இதன் நோக்கம். பொதுவாகவே ஒரு பத்திரிகையில் வெளிவரும் விடயங்கள் பத்திரிகை ஆசிரியபீடத்துக்கு ஒப்புதலானவை என்றே கருதப்படும். வெளிவரும் விடயங்களுக்கு ஆசிரியபீடமே பொறுப்பேற்க வேண்டும். அல்லது "இது ஆசிரியரின் கருத்தல்ல" என்ற குறிப்போடு வெளிவரும் என்பது பத்திரிகா தர்மமாகும்.

13.11.2004 ஆம் திகதிய ஐலண்ட் இதழிலே 9ஆம் பக்கத்தில் ஆசிரியருக்குக் கடிதங்கள் பகுதியில் ''பிரபாகரனிடம் கையளிப்போம்'' என்ற தலைப்பில் 'அரிஸ்ரோட்டில்' என்ற வாசகர் எழுதிய கடிதத்தை அதன் முக்கியத்துவம் கருதி முழுமையாகத்தருகிறேன்.

பிரபாகரனிடம் கையளிப்போம்.

கடந்த 50 வருடங்களாக, சனநாயகம் என்ற போர்வையின் கீழ் சிறிலங்காவானது சுயநலன்களை இலக்காகக்கொண்ட சிறுபான்மைக் குழுக்களால் முண்டுகொடுக்கப்பட்ட சிங்கள மேலாண்மைகொண்ட அரசியல் கட்சிகளால், அப்பாவிகளும் எளிதில் ஏமாந்துபோகின்ற இயல்பு கொண்டவர்களுமான மக்களுக்கு பாதகமான முறையில் துர்-ஆட்சி செய்யப்பட்டுள்ளது.

அரசியல்வாதிகளும் அவர்களது (குளப்படிப் பிள்ளைகள் உள்ளிட்ட) குடும்பத்தினரும் அவர்களது அடிவருடிகளும், (பிரதானமாக அரச நிறுவனங்களை சேர்ந்தவர்களான) குண்டர்கள் மற்றும் பாதாள உலக காடையர்களின் ஆதரவோடு, நாட்டு மக்களின் நலன்களை காவுகொடுத்துதாங்கள் கொழுத்து செழித்துள்ளார்கள்.

அடிமைகளுக்கு வாக்குரிமை இல்லாமல் குடிமக்களுக்கு (கல்விகற்ற மேட்டுக்குடிகள்?) மட்டும் வாக்குரிமை வழங்கும் என புராதன கிரேக்கர்களால் எதிர்பார்க்கப்பட்ட சனநாயகம் இதுதானா?

சிறிலங்காவில் இருக்கும் வாக்காளர்களில் பெரும்பான்மையானோர் எளிமையானவர்களும் இலகுவில் ஏமாறப்படக்கூடியவர்களுமான கிராமவாசிகள் ஆகும். இவர்களிடம் எந்தஅரசியல்ஞானமும் இல்லை. பசியையும் ஏழ்மையையும்தான் அவர்களுக்குத் தெரியும். "நிலவிலிருந்து அரிசி வரும்'', "உள்ளவரிடம் எடுத்து இல்லாதோருக்கு கொடுத்தல்", "சிங்களம் மட்டும்'', பௌத்தத்துக்கு முதன்மை இடம்'' போன்ற கவர்ச்சிகரமான ஆர்ப்பரிப்பு குருட்டுத்தனமாக ஏற்றுக்கொண்டு வாக்களிப்பார்கள்.

இவ்வாறானவற்றில் ஆகப்பிந்தியதான 'சிறிலங்காவை பிரிக்காதே' என்ற ஆர்ப்பரிப்பு UNP,SLFE,JVP, ஹெல உறுமய, சிஹலஉறுமய சிங்கள பௌத்தர்களின் தலைவர்களாக சுயபிரகடனம் செய்துள்ளவர்கள், மகாநாயக்கர்கள் ஆகியவர்களால் ஓங்கி ஒலிக்கப்படுகின்றது. நானும் இதனை சிறு திருத்தத்துடன் ஏற்றுக்கொள்கிறேன். "கூறுபடாத சிறிலங்காவை'' கடந்தகாலங்களில் தங்களைத்தாங்களே ஊழல்வாதிகள் என்று மெய்ப்பித்துக்கொண்டவர்களை கொண்ட கும்பலிடம் கையளிக்கக்கூடாது என்று கூறவிரும்புகிறேன்.

எனவே சிறிலங்காவை முழுமையாகவே பிரபாகரனிடம் கையளிப்போம். அவர் சிறப்பான பணியை ஆற்றக்கூடும். அவரிடம் கையளித்தால் வேலைநிறுத்தங்களோஇலஞ்சம் மற்றும் ஊழல்களோ நிச்சயமாக இருக்க மாட்டாது.

இது அனாமதேய கடிதம் என்பது உண்மைதான். வழமையாகவே தமிழ்த் தேசியத்துக்கு எதிராக சொந்தப் பெயரில் எழுத துணிவு இல்லாமல் புனை பெயரில் எழுதப்படுபவற்றை முக்கியத்துவம் கொடுத்து பிரசுரிக்கும் ஐலண்ட் இல் வெளிவந்திருக்கும் இந்த அனாமதேய கடிதத்துக்கும் அதே முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்றே எடுத்துக் கொள்ளலாம்.

அந்தவகையில் சிங்கள மக்கள் தங்கள் ஆழ்மன உணர்வுகளை வெளிக்காட்டத் தொடங்கியுள்ளார்கள். வேதாகமத்தில் கூறப்படுவதுபோல் "சுவரில் தெரியும் முன்னறிவிப்புகளை" (writings on the wall) பௌத்த சிங்கள பேரினவாதிகளுக்கு தலைமைத்துவத்தை வழங்க அதீத பிரயத்தனம் செய்பவர்கள் புரிந்து கொள்வார்களா? வெள்ளம் தலைக்கு மேல்போய்விட்ட அவர்கள் புரிந்துகொள்ள முயல மாட்டார்கள் என்பதே கடந்த காலங்கள் தந்த பாடமாகும்.


**புளோரன்ஸ்**

---

# யார் பாதாளத்தில்...?



கடந்த மார்ச் மாதத்துக்குப் பின்னர் இந்திய கிரிக்கெட் அணி வெளிநாடுகளில் எந்த ஒரு நாள் போட்டித் தொடரையோ டெஸ்ட் தொடரையோ கைப்பற்றாது வெறுங் கையுடன் நாடுதிரும்பியது. அத்துடன் தனது மண்ணில் வரலாற்று தோல்வியை அது சந்தித்தது. அதாவது அவுஸ்திரேலியாவிடம் 35வருடங்களுக்குப் பின்னர் தாயக வெற்றியை பறிகொடுத்த தாகும்- அந்த தொடர் தோல்விகளுடன் நாளை அது இன்னும் ஒரு விசேடமான அணியுடன் தனது மண்ணில் டெஸ்ட் போட்டியை ஆரம்பிக்கவுள்ளது.



விசேட அணி என்று கூறப்படும் அணியென்றால் தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியாகும். இந்திய அணியைப்போன்றே தென்னாபிரிக்க அணியும் பல போட்டிகளில் தோல்வியடைந்ததுடன் அதன் பயிற்றுநர் பதவி விலக வேண்டியநிலையும் ஏற்பட்டது. அத்துடன் அவ்வணியில் களையெடுப்பும் நிகழ்ந்துள்ளது.

அவ்வணியில் கலீஸ், டிப்பென்னர் ஸ்மித் போயே ஆகியோர் சிறிலங்காவுக்கு பெரும் சவாலாக இருப்பர் எனக் கருதப்பட்டது. ஆயினும் அவ்வணி படுதோல்வியடைந்து சென்றது.

அத்துடன் இங்கிலாந்தில் நடைபெற்ற I.C.C மினி உலக கிண்ணப் போட்டியிலும் பெரிதாகச் சாதிக்கவில்லை.

தற்போது இந்த தரங்களுக்கு வீழ்ச்சிகண்டுள்ள மேற்படி இரண்டு அணிகளிலும் மேலும் வீழ்ச்சியடையும் அணி எது என்பதை இரு டெஸ்ட் போட்டிகளும் தெளிவாக்கிவிடும்

ஆயினும் எந்த நிலையிலும் தாக்கப்பட்ட நாகமும் புலியும் வீறு கொண்டு எழுவது போல இவ்விரு அணிகளும் போட்டிகளில் மோதுவது சுவாரஷ்யமாகவும் பரபரப்பானதாகவும் இருக்கும் என்பதில் ஐயமில்லை.

---

# பட்டை தீட்ட வேண்டிய இரத்தினக்கல்

இப்புவியில் எவ்வளவு பெறுமதியான இரத்தினக்கல் ஒன்று புதைந்து கிடந்தாலும் அதனை இனங்கண்டு பட்டை தீட்டி பதித்து அதனை சூடும் போதே அதன் பெறுமதியும் மகிமையும் புலப்படும். அவ்வாறே சில திறமை வாய்ந்தவர்களின் திறனும் வெளிக்கொணர்ந்த பின்னரே அவர்களின் பெருமை வெளிப்படும்.

இந்த வகையில் யாழ் மாவட்டத்தில் ஏழை விவசாயிக் குடும்பத்தை சேர்ந்த சிவலிங்கம் தர்சனி என்ற வீராங்கனையும் பெருமைக்குரியவராகிறார். உண்மை யான திறனுள்ளவர்கள் விளம்பரங்களின் மூலம் தன்னை பெருமைப்படுத்திக் கொள்வதில்லை. பெருமையை விரும்புகிறவர்ளே அதனை தேடிப் பெறுவர். யாழ் மாவட்டத்தில் யுத்த அனர்த்தங்களால் பெரிதும் பாதிக்கப்பட்ட பிரதேசம் பலாலி ஆகும். சுமார் 12வருடங்களுக்கு முன்பு யுத்த நிலை தீவிரமடைந்த காலங்களில் மக்கள் அகதி முகாம்களிலும் வீடுகளிலும் அடங்கிக் கிடந்தவேளை வலைப்பந்து என்றாலே என்னவென்று புரியாத தர்சனி அங்கு ஆரம்ப பயிற்சியிலீடுபட்டார். அப்போது வலைப் பந்தாட்டம் தனக்கு எவ்வளவு அதிர்ஷ்டத்தை தரப் போகிறது என அவர் எண்ணியிருக்கவில்லை.

1980 ஆம் ஆண்டு பிறந்த இவர் சிறுமியாக இருந்த போதும் இவரின் உயரம் இவரை சிறுமியாகக்காட்டவில்லை. அத்துடன் போர் அழிவுகளை சந்தித்து வரும் குடாநாட்டிலேயே ஒரு சிறந்த வலைப்பந்தாட்ட வீராங்கனையாக வளர்ந்து விடுவாள் என்றும் அவரது பெற்றோரும் எதிர்பார்க்கவில்லை.

பாடசாலைக் கல்வியை முடித்து உயர் தரப்பெறுபேறுகளை எதிர்பார்த்து காத்திருக்க அவரை பல வலைபந்தாட்ட கழகங்களில் இணைத்துக் கொள்ள அவரின் தந்தையான சிவலிங்கம் என்பவரை நாடிய போது அவர் மறுப்புத் தெரிவித்தார். எனினும் இறுதியில் கிழக்குமாகாண வலை பந்தாட்ட அணி பயிற்சியாளரின் வேண்டுகோளை ஏற்று இவர் அவ்வணியில் இணைந்தார். தேசிய (சிறிலங்கா) அணியின் பயிற்றுநரான லோர்டஸ் இவர் தமது நாட்டுக்கு அருங்கொடை என்று தேசியஅணியில் இணைத்துக் கொள்ள சென்றவேளை குறிப்பிட்டுள்ளார்.

அண்மையில் சுகதாஸ விளையாட்டரங்கில் பயிற்சியின் பின்னர் இவர் ஓய்வு எடுத்திருக்கும் போது பிரபல ஆங்கில நாளோடு இவரை பேட்டி கண்ட போது வீர, வீராங்கனைகள் தமது பெருமைகளை வெளிப்படுத்த ஆவலாக இருக்கும் இந்நாட்களில் இவர் அமைதியாக பேட்டியளித்ததுடன் தன்னை பிரபல்யப்படுத்த விரும்பவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

சிங்கப்பூரில் விரைவில் நடைபெறவுள்ள ஆசிய வலைப்பந்தாட்டப்போட்டிகளில் இவர் பங்கேற்கவுள்ள அதேவேளை ஆசியாவிலேயே இவரே மிகவும்



உயரமானவராக இருக்கலாம் என நம்பப்படுகிறது.

அகில இலங்கை ரீதியில் இவர் தனது திறமைகளை வெளிப்படுத்தியிருப்பதோடு ஆசிய போட்டிகளிலும் இவர் சிறப்பாக ஆடலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. இவரது திறமைக்கு இவரின் உயரம் ஒரு காரணமாக இருப்பினும் இவரின் ஆட்டத்திறனும் பாராட்டத்தக்கது. ஆசிய வலைப்பந்தாட்டத்தில் இவரது அணி வெற்றி பெறுமாயின் அது தமிழீழத்துக்கும் தமிழ் மக்களுக்கும் பெருமையே.




பாரதிராஜா பாணியில் காதலை அழகாக, கலையாக, காவியமாக காண்பிக்கும் புதிய படம் விஷ்வ துளசி. இப்போதுவருகின்ற படங்களில் காதல், அதனுடன் இணைந்த காட்சிகளெல்லாம் ஒருவித பெண் முறைத்தன்மையுடன் காண்பிக்கப் படுகின்றன. தவிரவும் ஒரேமாதிரியான காட்சிகள், உத்திகள், கதைகள், காதல்கள்.

விஷ்வதுளசி இவற்றிலிருந்து சற்று மாறுபடுகிறது. ஒரு மெல்லிய விலகல். ஆனால் அழகானது. மலையாளச் சூழலின் கதை. காட்சிகளும் கேரளக்காட்சிகள். யானை, அருவி, மலை, கேரளமக்கள், கோவில்கள் இப் படிப்பல.

மம்முட்டியும் நந்திதாதாஸரும் பிரதான மையப்பாத்திரங்களில் நடித்திருக்கிறார்கள். மம்முட்டிக்கென்றிருக்கும் அடையாளமும் கவனமும் தனியானது. அதுபோல நந்திதாதாஸ் 'அழகி'யில் நந்திதாதாஸ் ஒருவகை யென்றால் விஷ்வதுளசியில் இன்னொருவகை.

# விஷ்வதுளசி

இளவயதில், கிராமத்தில் சங்கீத ஞானமுள்ள குடும்பத்தில் ஒரு சிறுபெண், வீணை மீட்டுவாள், நடனமாடுவாள். அந்தக்கிராமத்தின் ஜமீன் குடும்பத்தில் இளவயதுடைய ஆண் இசைபயில இந்தப் பெண்ணின் வீட்டுக்கு வருகிறான். இளமை அரும்பும் வயதில் மனதுக்குள் குறுகுறுப்பான ஒரு ஈர்ப்பு. இதை விரும்பாத அவளுடைய மாமன் மகன் அவனும் இந்தச் சக வயதுடைய ஆணே. மாமன் திடீரென நோயால் இறக்கும்போது தன் விருப்பத்துக்கு இந்தச் சிறுபெண்ணுக்கும் தன் மகனுக்குமாக மாலை மாற்றிவிடுகிறார். இந்தப் பெண்ணுக்கு இதில் துளி விருப்பமும் இல்லை. மாமன் மகன் நல்ல மனதுடையவனும் இல்லை. எல்லாம் தலைகீழாகி விடுகின்றன. எதுவும் செய்வதற்கில்லை என்ற நிலையில் மாமனின் வாரிசு-- அந்த நல்ல இளைஞன் பிரிவில் ஆடிப்போகிறான்.

மாமனின் மகன் மின்னல் தாக்கி மன நிலை குழம்பிவிடுகிறான். இதுயாருக்கும் தெரியவில்லை. அவன் வேற்றூருக்குப் போய்விடுகிறான். காலம் இருபது வருடங்களை விழுங்கிய பிறகு மீண்டுமவன் திரும்ப அந்த ஊருக்கு வருகிறான்.

நினைவுகள் மீட்கப்படுகின்றன. அழியாதவை நினைவுகள்தானே. இளம்பராயத்து நினைவுகள் அந்தப்பருவ முகங்களில் இசையும் நடனமும் இயற்கைக் காட்சிகளுமாகப் பார்ப்பதற்கு வெகு சுவாரஷ்யத்தையூட்டுகின்றன.



ஆனால், யதார்த்த மிகைதான் இது. இந்த யதார்த்த மிகை படம் முழுவதிலும் மெல்லிதாகஉண்டு. அதுதான் பாரதிராஜாவின் அலைகள் ஓய்வதில்லை, காதல் ஓவியம், போன்ற படங்களில் வருவது போல கொஞ்சம் அழகுபடுத்திக் காட்டுதல்.

ஆனால், பின்னாளில் இருபது வருடங்கழித்தபின் பழைய காதல் நினைவுகளோடு பேசவும் முடியாமல், பேசாதிருக்கவும் முடியாமல் மனதுள் யுத்தம் நிகழ அத்தனையையும் தாங்கமுடியாதிருக்கும் அவஸ்தைக்காலக்காட்சிகள் சிறப்பானவை. மம்முட்டியும் நந்திதாதாஸ்சும் மிகச் சிறப்பாக நடிக்கிறார்கள்.

வயது, அதன் பக்குவமும் முதிர்ச்சியும், இடைவெளிக்காலம், நடந்த நிகழ்ச்சிகள், இருவருக்குமிடையிலான பிரச்சினைகள், அதன் தெளிவுகள் எல்லாமே நல்லமுறையில் இயல்போடு காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

இன்னும் இருவருக்கும் திருமணம் நிகழாதிருப்பது, இன்னும் இருவரின் இதயத்திலும் அந்தநாளின் நினைவுகளும் அன்பும் பெருகிக் கிடப்பது எல்லாம் அவர்களை அந்தவயதுடைய நிலையில் பார்ப்பது மிகச்சிறப்பு.

காட்சிகள், அவற்றை படமாக்கியவிதம், லைற்றிங் (ஒளிக்கையாள்கை) நடனம், இசை, கிராமத்தின் அமைதியும் அழகும் என எல்லாம் தனிக்கவனத்தைக் கோருகின்றன.

பருவவயதுக் காதலையும் வயதைக் கடந்த பின்னும் மாறாதிருக்கும் காதலையும் இணைத்து இருவகையில் தந்திருக்கிறார் இயக்குநர்.

பழகிப்போன ரசனைமுறைக்கு தீனிபோடுவதில் இந்தப்படம் பின்தங்கலாம். ஆனால் ஒரு காதல் மிக அழகானது, அது எந்தச் சோதனைகளையும், எவ்வளவு காலத்தையும் கடந்தது என்பதற்கு விஷ்வதுளசி ஒரு சாட்சி.

ஒரு வரியில் கூறுவதானால் விஷ்வதுளசி ஒரு காதற்காவியம். மனப் போராட்டங்கள், வாழ்வின் கதி எப்படியெல்லாம் திசைமாற்றி என்னென்ன காரியங்களையெல்லாம் நிகழ்த்திவிடுகின்றன என்பதற்கு இன்னுமொரு சாட்சி.

இது மாதிரியான முக்கோணக்காதற்கதையைக் கொண்ட சினிமாக்களை முன்பு ஸ்ரீதர் எடுத்திருந்தார். பிறகு பலபடங்கள் வந்திருக்கின்றன. ஆனால் அவற்றிலிருந்து விஷ்வதுளசி வேறுபடுவது அது நகரும் அழகான விதத்தாலும் சொல்வதிலுள்ள கலைநயத்தாலுமே.

ஆட்டோ கிராப் ஒருவகையென்றால் விஷ்வதுளசி இன்னொரு வகை. ஆனால், படத்தின் இறுதிக்காட்சி வழமையான சினிமாவுக்குள் சரணடைந்த துதான் படத்தின் ஆகப்பெரிய பலவீனம். ஆனாலும் அழகைக் காண்பதற்கு விஷ்வதுளசியில் இடமிருக்கிறது. மனதில் அது இடத்தைப் பிடிக்கிறது.

**ஆரதி**

---

# ஒளிப்படம்

eelavision. com என்றொரு இணையத்தளம் ஒளிப்படத்துக்காக இயங்குகின்றது. அதில் ஈழக்காட்சிகளை நீங்கள் பார்க்கலாம். எல்லாமே ஒளிப்படங்கள். அழகிய, பொருள்நிறைந்த, கவனத்துக்குரிய ஒளிப்படங்கள்.

நீங்கள் பார்த்திராத காட்சிகள், நீங்கள் பார்க்க வேண்டிய காட்சிகள், நீங்கள் பார்த்திருந்தும் கவனியாதுவிட்ட காட்சிகள், பார்த்தால் ஆச்சரியப்படவைக்கும் காட்சிகள். எல்லாவற்றையும் ஒளிஓவியங்களாக்கியிருக்கிறார்கள்.

எல்லாத்துறைகளுக்கும் வேண்டிய அளவுக்கு இணையத்தளங்கள் உண்டு. தமிழிலும் சில துறைகளில் இணையத்தளங்கள் கவனிக்கும் படியான அளவுக்கு முன்னேறியுள்ளன. ஆனாலும் பொதுவாகப் போதாது. அதிலும் ஒளி ஓவியங்களுக்குப் போதாதது.

இந் தநிலையில் eelavision.com மிகக்கவனத்துக் குரியது. மிகவும் முக்கியமானது. பாராட்டவேண்டியது. இன்று ஒளிப்படங்கள் (Photo's) எல்லா நிலையிலும் முக்கியமானவையாகி விட்டன. தவிர்க்கமுடியாத அளவுக்கு வாழ்வில் அது கலந்திருக்கிறது. பதிவு, பகிரப்படுதல், ரசித்தல், அலங்கரித்தல் எனப்பல அம்சங்களில் ஒளிப்படங்களிருக்கின்றன.

Photo அல்பங்களில்லாத வீடுகளில்லை இன்று. ஒளிப்படமெடுக்காதவர் எவருமில்லை உலகில். ஏதோ ஒரு தேவையில் ஒளிப்படம் எடுத்தேயாகவேண்டும். எல்லா நிகழ்வுகளும் ஒளிப்படமாக்கப்படுகின்றன. எல்லாப் பத்திரிகைகளும் ஒளிப்படங்களில் கவனமாயிருக்கின்றன. எழுதப்படும் செய்திக்கு ஒளிப்படம் சாட்சி. பத்திரிகைக்கு கூடுதல் கவர்ச்சி. சினிமாவில்கூட ஒளிப்படங்கள் தனியான பகுதியாக இருக்கிறது. சினிமாவே ஒளிமூலமான கலைதான். அதனால்தான் மிகமுக்கியமான ஒளிப்பதிவாளரான தங்கர்பச்சான் ஒளிப்பதிவை, ஒளிப்படத்தை ஒளி ஓவியம் என்கிறார்.

எல்லா நிலையிலும் இடம் பெறுகிற ஒளிப்படங்களை ஒழுங்கான முறையில் பதிவுசெய்யும் பழக்கம் எம்மிடம் குறைவு. சிறப்பானதாக படங்கள் எடுப்பதும் இல்லை. எங்களுடைய போட்டோக்கள் பெரும்பாலும் குறுகியவையாக இருக்கும். அல்லது செயற்கைத்தனம் நிரம்பியிருக்கும்.அல்லது ஒரு வரையறைக்குள் மட்டும் நிற்கும்.

இதையெல்லாம் கடந்து காலப்பதிவாக, சூழற்பதிவாக, படங்களிருப்பதில்லை. ஈழவிசனில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள படங்கள் உங்களுடைய அல்பங்களில் இல்லாதவை. ஆனால் இருக்கவேண்டியவை. ஈழவிசன் புதிய அறிமுகத்தை ஒளிப்படத்துறை பொறுத்துச் செய்கிறது. இருளைக்கிழித்து ஏற்பட்டுள்ள ஒளிக்கீற்றாக அது தெரிகிறது. அதில் ஒரு சுதந்திரத்தன்மையுண்டு. நீங்கள் அந்தப்படங்களைப் பார்க்கலாம். அதில் தொடர்பு கொண்டு அந்தப்படங்களை நீங்கள் பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் நீங்களும் உங்களிடமுள்ள ஒளி ஓவியங்களை அதில் இணைக்கலாம். பங்கேற்பாளர்களை அதிகம் ஈடுபடுத்தும் திறந்தவாசல் அதற்குண்டு.

வெளிப்பரப்பில், எங்களுடைய ஒளிப்படத்துறையை, ஒளிப்பட ஆற்றலை வெளிப்படுத்துகிற நன் முயற்சி இது. அதேவேளையில் எங்களின் அடையாளத்தை பேணுகிற காரியமும்கூட. எம்மைப்பற்றி, எமது சூழல் + தேசம் பற்றி, எமது வரலாறு பற்றி அறியவும் ஈழவிசனின் காட்சிவாசல் உதவுகிறது.

மக்களின் வாழ்க்கை, போர் அழிவுச் சுவடுகள், நினைவுச்சிற்பங்கள், தூபிகள், பண்பாட்டு அடையாளங்கள் + நிகழ்வுகள், இயற்கைக் காட்சிகள், உயிரினங்கள் (பறவைகள்+விலங்குகள் + கடல்வாழ் உயிரினங்கள் உட்பட சகலதும்) மூதாதைகளின் சுவடுகள் என பல தெரிவுகளில் படங்கள் வகைப்படுத்தப்பட்டுள்ளன. இது வரையில் நாநூற்று ஐம்பத்திநான்கு படங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. இன்னும் நிறையப்படங்கள் இணைக்கப்படவுள்ளன.




எமது சூழலில் மிக நல்ல படங்களை பெறுவோர் பலருள்ளனர். ஆனால் ஒளிப்படக்காட்சிகள் நடப்பதில்லை. வெகுசன மட்டத்தில் ரசனைவளர்ச்சியில்லை. நல்ல படம் குறித்த அறிவோ ஈடுபாடோ இல்லை. உதிரி, உதிரியாக சுயஈடுபாட்டோடு எடுத்து தாமே பார்த்து தாமே ரசித்து தமக்குள்ளேயே திருப்திப்பட்டுக் கொள்ளும் நிலைதான் பெரும்பாலுமுண்டு. ஆனால் சிங்களத்தில் ஒளிப்படத்தின் கவனமும் வளர்ச்சியும் மிக அதிகம்.

போராட்டம், போர் நடக்கிற ஒரு தேசத்தில் மிகமுக்கியமான ஊடகமாயிருப்பன போட்டோக்களே. வியட்நாம் போரில் அமெரிக்கப் படைகளின் கொடுமையை வெளிப்படுத்த ஒரு வியட்நாமியச்சிறுமியின் படம் உதவியது. அது அமெரிக்க மக்களின் மனங்களையே மாற்றியது என்பார்கள்.

இதுபோல எதிர்பாராத பல தருணங்களை அற்புதமாக்கி வரலாறாக்கியிருக்கின்றன பல ஒளிப்படங்கள். பல மாற்றங்களை ஏற்படுத்தியிருக்கின்றன பல ஒளி ஓவியங்கள். ஒளிப்படம் ஒரு வலுவான ஊடகம். பலமான சாட்சி. அருமையான பதிவு. நுட்பமும் சுவாரஷ்யமும் கூடிய வரலாறு. அற்புதமான நினைவூட்டி.

எமது சூழலில் ஒளிப்படக் காட்சியை பதினைந்தாண்டுகளின் முன்பு தமயந்தி நடத்தியிருக்கிறார். பிறகு அந்தமாதிரியான கவனத்துக்குரியமாதிரியாக காட்சிகள் நடந்ததாகத் தெரியவில்லை. ஒளிப்படத்துறைக்கு ஊக்கமளிக்கும் முயற்சிகள் நடக்கின்றன. பயிற்சிகள் கொடுக்கப்படுகின்றன. முன்பு நங்கூரம் என்ற அறிவியல் இதழ் ஒளிப்படங்களுக்கு கூடுதல் இடமளித்தது. பலரும் இன்று ஒளிப்படங்களை வியாபாரமாக்க முனையும் சூழலில் இந்தமாதிரியான வெளிப்பாட்டுக்கான இடமளிப்பு பாராட்டப்படுவதற்குரியது.

ஆனால், எல்லா அச்சு ஊடகங்களும், ஒளிப்படங்களைப் பிரசுரிக்கின்றன. ஆனால் அந்த ஒளிப்படத்தைப் பதிவுசெய்தவரின் விபரத்தை, பெயரை எப்படியோ அவை மூடிமறைத்து விடுகின்றன. ஏதோ தாமே தமது உத்தியோக பூர்வப் படப்பிடிப்பாளரை வைத்துப் படமாக்கியதுபோல அவை நடந்து கொள்கின்றன. அப்படி யென்றாலும் கூட அந்தப் பதிவாளர்பற்றிய விபரம் குறிப்பிடப்படவேண்டும்.

ஒளிப்படம் ஒருகலை. கவிதையைப்போல, சிறுகதையைப் போல, சினிமாவைப்போல இதுவும் ஒருகலை. அதுவும் பொருட்செலவைக்கோரும் கலை. பரவலான ஈர்ப்புக்குரிய கலை. ஆனால் அப்படியான சிறப்புக்குரிய ஒளிப்படத்தை பிரசுரிக்கும்போது அதனை எடுத்தவரைக் குறிப்பிடாமல்விடுவது பெரும் பிழையானது. கவிதையை எழுதியவர் தன்னுடைய பெயரைக் குறிப்பிடாது அதனை யாராவது வெளியிட்டால் எவ்வளவு தவறாகுமோ அதேபோல இதுவும் தவறானதே. அதில் எவ்வளவு கோபம் வருமோ அந்தளவு இதற்கும் கோபப்படவேணும். சில இடங்களில் பல படங்களை பிரசுரித்துவிட்டு பொறுப்பில்லாமல் படமாக்கியவர்களின் பெயர்களைப் போடுகிறார்கள். யாருடைய படம் எது என்றும் தெரியாது. அந்தப்படம் எங்கே எப்போது எடுத்தது என்றும் தெரியாது. இதெல்லாம் தெரியாமல் ஊடகக்காரர்கள் இருக்கிறார்கள். அவர்களிடம் ஊடகப்பெறுபேற்றுச் சான்றிதல்கள், பெருமைகள்கூட தாராளமாக இருக்கிறது.

பெயர் போடாமல் ஒரு படத்தைப் பிரசுரிப்பது என்பது தெருவில் கண்டெடுத்த படம் அது என்ற அடிப்படையிலா என்று ஒரு சிறந்த ஒளியோவியர் கேள்வியெழுப்புகிறார் கடுங்கோபத்துடன்.

1999ஆம் ஆண்டென்று நினைக்கிறேன். ஒளிப்படம் எல்லா ஊடகங்களிலும் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது. சில NGOக்கள் கூட அந்தப்படத்தை பயன்படுத்தியிருந்தன. சில அமைப்புகள் அந்தப்படத்தைக் கலண்டரில் கூட அச்சிட்டிருந்தன.

போர் உக்கிரம் பெற்றிருந்த வேளையில் பொருளாதாரத் தடையால் ஏற்பட்ட பட்டினி நிலையைப் பிரதி பலிக்கும் படம் அது. அது முதலில் வெளியானது வீரகேசரியில். ஆனால் அந்தப்படத்தை எடுத்தவரின் பெயர் அதில் குறிப்பிடப்படவில்லை.

(22 ஆம் பக்கம் பார்க்க

**வெளிவாசல்பாலன்**




வேலைகளை ஆளுக்கு ஆள் பகிர்ந்துகொண்டு செய்வது சிறந்தது. ஒரு குடும்பத்தில் பல பெண்கள் இருந்தால் வேலைகளைப் பிரித்துச்செய்யலாம். ஆனால் சில இடங்களில் அப்படி நடப்பதில்லை. குறிப்பிட்ட ஒருவரே வேலைகளை செய்து மாய வேண்டும். விட்டுக்கொடுப்பு என்பது இந்த இடத்திலும் அவசியமாகிறது. வேலைகளை ஆளுக்கொருவர் பிரித்துச் செய்யுங்கள் வேலைப்பளு குறைவடைந்த மாதிரி இருக்கும். சரி ஒரு சில குடும்பங்களில் ஒரே ஒரு பெண் இருக்கிறாள் என்றால் என்ன செய்வது? பொறுமையாக வேலைகளை செய்யத்தானே வேண்டும். உதவிக்கு யாரை கூப்பிடுவது தமது கடமையில் ஒவ்வொருவரும் கண்ணும் கருத்துமாக இருக்கவேண்டும்.

நமது குடும்பத்து வேலைகளை நாம்தானே செய்யவேண்டும். அந்தப் பொறுப்பு நமக்கு இருக்கிறது, இருக்கவேண்டும்.

என் குடும்பம், என் வீடு என் வீட்டு வேலை இதில் எமக்கும் பங்குண்டு என்பதை நாம் உணர்ந்து கொள்ளவேண்டும்.

போட்டி பொறாமைகளை மனதில் வளர்த்துக்கொள்ளாமல் பிரச்சினைகள் இன்றி வேலைகளை பகிர்ந்துசெய்யுங்கள்.

உங்கள் சகோதரிகளோ உங்கள் வீட்டில் உள்ளவர்களோ இதுவிடயமாக கவனக்குறைவாக இருக்கின்றார்களா? அதைப்பற்றி கண்டுகொள்ளாதீர்கள், உங்களால் முடியுமானதை நீங்களே செய்யுங்கள்.

பெண்களை பொறுத்த வரை வீட்டு வேலைகளை பாரமாக நினைக்கக்கூடாது, தங்களது வேலைகளை தாங்கள்தான் செய்ய வேண்டும். அடுத்தவர்களா வந்து செய்துதவப்போகிறார்கள்? சில குடும்பங்களில் வேலைக்குப்போகும் பெண்கள் வீட்டு வேலைகள் செய்ய நேரம் இல்லை என்று சொல்வார்கள் இது ஒரு தவறான குற்றச்சாட்டு.

தங்களைச் சுற்றியிருப்பவர்கள் வேலைகளை செய்து



# போட்டி வேண்டாம்

தருவார்கள் என்ற நினைப்பில் இருப்பவர்களும் நம்மத்தியில் இல்லாமலில்லை. அவர்கள் தனித்து விடுதிகளில் தங்கிவிட்டால் எல்லா வேலைகளையும் தாமேசெய்ய வேண்டும். ஆமாம் பெண்களே நீங்கள் என்றைக்காவது புகுந்த வீட்டில் காலடி எடுத்து வைக்கப் போகிறீர்கள் அங்கே நீங்கள் ஒரு பெரிய குடும்பத்தை நீங்கள் சந்திக்க நேரலாம். எனவே வேலைகள் செய்ய பின் வாங்காதீர்கள்.அதற்காக தொடர்ச்சியாக இருபத்தி நான்கு மணிநேரமும் வேலைகளை செய்து கொண்டே இருக்க வேண்டும் என்பதல்ல.

பிரச்சினைகளை ஏற்படுத்தாமல் சகிப்புத்தன்மையுடன் தங்களுக்குரிய வேலைகளை செய்ய வேண்டும். நீ செய் அவள் செய்யட்டும் என்று போட்டி போட்டுக்கொண்டிராமல் பொறுமையுடனும் சகிப்புத் தன்மையுடனும் வேலைகளை செய்யுங்கள் வேலை செய்வது கூட ஒரு சந்தோஷம்தான்.

பிரச்சினைகளிலிருந்து விடுபட வேலைகளைச் செய்தால் யோசிப்பதற்கு நேரம் கிடைக்காது. பிரச்சினைகளை மனதில் போட்டு குழப்பித்தவிக்காமல் ஏதாவது வீட்டு வேலைகளில் ஈடுபட்டால் மனதுக்கு நிம்மதியாக இருக்கும்.

எனவே பொறுமையுடனும் சகிப்புத்தன்மையுடனும் வேலைகளைச் செய்வோம். குடும்பத்தில் சகோதர சகோதரிகளிடையே வீட்டு வேலைகளைச் செய்வதில் ஏற்படுகின்ற போட்டியால் அந்தக் குடும்பத்தில் யாராவது ஒருவரே பாதிக்கப் படுகின்றார். அது உங்கள் சகோதரியோ சகோதரனாகவோதான் இருக்கும். எனவே வேலைகளை பகிர்ந்து செய்யவேண்டும். இன்னும் சில வீடுகளில் எத்தினை பெண் பிள்ளைகள் இருந்தாலும் தாய்தான் முழுவேலைகளையும் செய்வாள். அவளுடைய வேலையை பங்கு போட்டு செய்ய முன்வராத பெண் பிள்ளைகளும் உண்டு. இதற்கு நான் படிக்கின்றேன் நான் வேலைக்குப் போகிறவள் என கூறும் பெண்களும் உண்டு. இவர்கள் திருந்திக்கொள்ள வேண்டும். வேலைகளை கண்ணும் கருத்துமாகச் செய்வதால் நாம்பல பிரச்சினைகளில் இருந்து விடுபட முடியும். வேலையில்லாமல் வீட்டில் இருக்கும் பெண்கள் தேவையற்ற விடயங்களை மனதில் போட்டு குழப்பி உடல் நலனை கெடுத்துக் கொள்கிறார்கள். ஆனால், உடலில் நோயுடன் எந்நேரமும் வேலைகளை சுறு சுறுப்பாகச் செய்யும் பெண்களிடம் கேட்டால் அவர்கள் சொல்லும் பதில் "நோயின் வேதனையை உணரக்கூட நேரமில்லாமல் வேலை செய்கிறேன் எனவே நோயின் வேதனை எனக்குத் தெரிவதில்லை" என்று கூறுகின்றார்கள். அது முற்றிலும் உண்மை. எனவே நாம் அதிகாலை தொடக்கம் மாலைவரை எமது குடும்ப வேலைகளை பங்கெடுத்து பொறுப்புடன் செய்வோம். கடமையை செய்வதுதானே ஆனந்தம். குடும்பத்தில் உள்ள அனைத்து வேலைகளையும் ஒருவரே செய்து மாயும் இத்துன்பத்தை நீக்கி மகிழ்ச்சியை கூட்டுவோம்.

ரஜித்

## இப்படிச் செய்யலாம்...

*பாத்திரங்களைத் தேய்த்தவுடன் ஈரம் இல்லாமல் துடைத்துவிட்டு அவைகளை வெயிலில் வைத்து எடுக்க வேண்டும். இப்படிச் செய்தால் பாத்திரத்தில் எந்தவிதமான நாற்றமும் இருக்காது. பாத்திரம் துருப்பிடிக்காது.*

✣ ✣ ✣

*பருப்பு அவசரமாக வேக வேண்டுமானால், பருப்பைப் போட்டவுடன் அதில் சிறிது நெய்யை ஊற்ற வேண்டும். வாசனையாக இருக்கும். நன்றாக வெந்துவிடும்.*

✣ ✣ ✣

*வீட்டில் சட்னி அரைக்கும் போதெல்லாம் பெண்கள் சட்னியில் கொஞ்சம் புதினாவைப் போட்டு அரைக்கப் பழகிக்கொள்ள வேண்டும். புதினா கலந்த சட்னி,வாசனையாக இருக்கும், சுவையாக இருக்கும்,அடிக்கடி புதினா சேர்த்துக் கொண்டால்,வீட்டில் உள்ளவர்களுக்கு வயிற்றுக் கோளாறு வராது.*

✣ ✣ ✣

*ஒரே மாதியாகத் தேனீர் தயாரித்துச் சாப்பிடுவதா? வேண்டாம் இதோ ஒரு புதிய முறை. தேயிலையில் கொஞ்சம் இஞ்சியையும் இரண்டு ஏலக்காய்களையும் போட்டுப்பிறகு தேனீரை இறக்குங்கள். இந்தத் தேனீர் சுவையாக இருக்கும். வாசனையாகவும் இருக்கும்.*

✣ ✣ ✣

*கண்ணாடி ஜன்னல்களுக்கு வர்ணம் அடிக்கும் போது கண்ணாடிகளிலே கொஞ்சம் சவர்க்காரத்தை தேய்த்துவிட்டுப் பிறகு வர்ணம் அடிக்க வேண்டும் இப்படிச் செய்தால் கண்ணாடிகளிலே விழுந்த வர்ணத்தைச் சும்மா துடைத்தாலே போதும். அது போய் விடும்.* ✣ ✣ ✣

# முடிவு இதுவல்ல...!

இன்றைய இளம் சமூகத்தினர் எவ்வளவு தான் மூளைசாலியாக இருந்த போதும் தமக்கு ஏற்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணமுடியாமல் தற்கொலை என்ற கோழைத்தனமான முடிவை எடுத்துவிடுகின்றனர். இவ்விடயம் மிகவும் வேதனைக்குரியதும் எதிர்க்க வேண்டியதுமாகும். இந்தப் பெரிய உலகில் எவ்வளவோ இருக்கின்றன. நாம் அனுபவித்து வாழ்வதற்கு. குடும்பத்தில் சச்சரவுகள் உருவாகும் போது பிரச்சினைக்குரிய நபர் கொஞ்சக் காலம் இடம் மாறி இருக்கலாம். அல்லது அப்பிரச்சினைக்கு என்ன காரணம் என்பதை அறிந்து அதனைத் தீர்க்கலாம். வாழ்க்கை வாழ்வதற்கே. நாம் தான் வரும் எதிர்ப்புக்களைத் தாண்டி வாழ்ந்து வெற்றியை படைக்கவேண்டும். பிரச்சினை ஒன்று வரும்போது தற்கொலை செய்து கொண்டால் அதனால் என்ன பயன். இளம் சமூகம் ஆழ்ந்து யோசிக்க வேண்டும். உங்கள் வாழ்வில் நினைப்பவை நடைபெறாவிட்டால் அதை எண்ணி கவலைப்படாமல் மறக்க முயற்சி செய்யுங்கள். உங்கள் கவலைகளை யாரிடமாவது சொல்லி மனதை அமைதியாக்குங்கள். அப்படியும் முடியாவிட்டால் உங்கள் துன்பங்களை எழுத்துக்களாக்குங்கள் அப்போது உள்ளச் சுமைகள் இறக்கப்பட்டு தெளி வடையும்.

எல்லாப் பிரச்சினைகளும் எல்லோருக்கும் இருக்கு என்ற எண்ணத்தைக் கொண்டு உங்கள் பிரச்சினைகளை சுலபமாக நினையுங்கள். பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய உங்கள் பெயர்கள் கோழை என்ற பட்டியலில் வரலாமா? சற்று யோசித்துப்பாருங்கள் எத்தனையோ சாதனையாளர்கள் வாழும் இப் பு,மியில் ஒரு சின்ன விசயத்திற்காக தற்கொலை செய்து உங்கள் உயிரை மாய்க்கலாமா. உங்களுக்காக நீங்கள் வாழும் போதுதான் இப்படியான முடிவுகள் எடுக்கும் நிலை ஏற்படும். இளம் சிட்டுக்களே தியாக மனப்பான்மையோடு பிறருக்காக வாழுங்கள் உங்கள் உடன் பிறப்புக்கள் அம்மா. அப்பா. நண்பன். நண்பி. கணவன். மனைவி. பிள்ளைகள் இந்த முகங்களை மறந்து எப்படி உங்களால் இம் முடிவுக்கு வர முடிகின்றது. இம் முடிவினை எடுக்கும் நீங்கள் வேறு வழியில் சிந்திக்கலாம் அல்லவா. தற்கொலை செய்வோர் இன்று நாளுக்கு நாள் அதிகரிக்கின்றது. இதுவும் ஒரு நாகரிகம் போல் மாறுகின்றது. போரினால் தம் கால்கைகளை இழந்து கண்ணிழந்து வெறும் நடை பிணமாயும் எத்தனையோ உறவுகள் எம் மத்தியில் இருக்கின்றனர் அவர்கள் அப்படி இருந்தும் தங்களால் இயன்றளவு நாட்டுக்கு நன்மை புரிகின்றனர். அந்த உள்ளங்களில் தான் எத்தனை மன உறுதி. அவ்ங்கள் உறுதியோடு நாட்டுக்காக உயிர்வாழும் போது திடகாத்திரமான நீங்கள் கோழைத்தனமான முடிவு எடுப்பது சரிதானா. சிந்தியுங்கள்.

சு.சிவாஜினி

## வெந்தயக் குழம்பு




**தேவையான பொருட்கள்.**

எண்ணெய் -2.மே.க
கடுகு -1/2 தே.க
வெந்தயம் -1தே.க
பூண்டு (உள்ளிப்பூடு) -8-10 பல்லு உரித்து பாதியாக வெட்டி.
பச்சை மிளகாய் -2
வெங்காயம் -3மே.க குவித்து (மெல்லிய 2 செ.மீ அளவு நீளத் துண்டுகள்)
பழப்புளி -ஒரு பெரிய நெல்லிக்காயளவு கரைத்தது.
பால்(தேங்காய்ப்பால் அல்லது பசுப்பால்) -3 டிசிலிட்டர்
உப்பு -தேவையான அளவு
கறிவேப்பிலை -8-10
மிளகாய்த் தூள் -2 தே.க

**செய்முறை:-**

ஒரு கறி சமைக்கும் பாத்திரத்தில் எண்ணையைக் காய விட்டு கடுகைப் போடவும்.

கடுகு வெடித்ததும் முதலில் வெந்தயம் பின்பு பூண்டைப் போட்டு பொன்னிறமாக வதங்க விடவும்.

பின்பு மிளகாய், வெங்காயம் போட்டு குறைந்த நெருப்பில் நன்கு வதங்க விடவும்.

பொன்னிறமானதும் புளி, தூள், உப்பு, 21/2 டிசிலிட்டர் பால் விட்டுக் கலக்கி மூடி நன்றாக வேக விடவும்.

வெந்து வாசனை வந்ததும் மீதிப்பாலை விட்டு கொதித்ததும் கறிவேப்பிலை போட்டு மூடி இறக்கவும்.

*வீடு பகுதியில் வெளிவரும் ஆக்கங்கள் தொடர்பாக உங்களது விமர்சனங்களை எதிர்பார்ப்பதோடு, இப்பகுதிக்கு உங்கள் ஆக்கங்கள், மற்றும் குமரகுரு பரிசுத்திட்ட கூப்பன் ஆகியவற்றை கீழ் உள்ள முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.*

*வீடு,*
*வெள்ளிநாதம், ஈழநாதம்,*
*யாழ்சாலை,கிளிநொச்சி.*




## குமரகுரு புடைவை, அழகுப்பொருள் வாணிபத்தின் பரிசுத்திட்டம்

வெள்ளிநாத வாசகிகளுக்கு கிழமை தோறும் பெறுமதிமிக்க சாறி ஒன்றை குமரகுரு புடைவை வாணிபத்தினர் பரிசளிக்கவுள்ளனர்.
நீங்கள் செய்யவேண்டியது கீழ்காணும் கூப்பனை வெட்டி நிரப்பி அனுப்ப வேண்டும். குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் வாசகிக்கு பரிசு காத்திருக்கிறது.

**குமரகுரு பரிசுத்திட்டம்—23**

பெயர்:.............................................

முகவரி:.............................................

.............................................

**குறிப்பு:**
ஈழநாதம் நிறுவனத்தில் கடமையாற்றும் ஊழியர்களும் அவர்களது நெருங்கிய உறவினர்களும் இப்போட்டியில் பங்குபற்றமுடியாது.

# இலண்டன் TR TECH நிறுவன அனுசரணையுடன் கிளிநொச்சி தொழில்நுட்பக்கல்வி நிறுவகம் நடாத்தும் சர்வதேச அங்கீகாரம் உடைய city & Guilds (LONDON) சான்றிதழுக்கான பின்வரும் பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பம் கோரல்

ஆரம்பமாகிறது Januaryயில்

பயிற்சி நெறி

- Information Technology
- Hardware maintain
- Electronics
- Diploma in English
- Page Maker 7.0

> நவீன ஆய்வுகூட வசதிகளுடன் ஒவ்வொருவருக்கும் தனித்தனி கணினிகள் பயிற்சி நேரத்தில் ஒதுக்கப்படும்.
> நவீன இலத்திரனியல் உபகரணங்கள் மற்றும் நவீன நூலகவசதிகளுடன் கூடியதும் அனுபவம் வாய்ந்த பல்கலைக்கழக வரிவுரையாளர்களால்
> விரிவுரைகளும் நடாத்தப்படும்.
பயிற்சிக்கான கட்டணங்கள் எதுவும் அறவிடப்பட மாட்டாது.

**தகைமைகள்**

க.பொ.த. (சா/த) ஆங்கிலம் உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்த அனைவரும் விண்ணப்பிக்கலாம்.

**தெரிவு:-**

நுண்ணறிவுப் பரீட்சை பெறுபேற்று அடிப்படையில் இடம்பெறும் அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

விண்ணப்பங்களை 30/11/2004 திகதிக்கு முன்னர் கீழ் காணும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

I.T UNIT
Kili TECH
A9 Road,
KilinoChchi.

(5277)


(15 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தோன்றிவருவதன் வெளிப்பாடே இது. மாறி வருகின்ற ஒட்டுமொத்தமான சமூக நிலையின் இம்மாணவி ஒரு குறிகாட்டி மட்டுமே.

இன்றைய நவீன விஞ்ஞான தகவல் தொழில்நுட்ப உலகில் மூலை முடுக்கெங்கும் தினந்தோறும் நடந்தேறும் சம்பவங்கள் இரத்தத்தை உறையச் செய்கின்றன. பாலியல் வன்முறைகள், சிறுவர் துஷ்பிரயோகங்கள், கொடூரகொலைகள், ஆபாசப்படங்கள், போதைப் பொருள் உபயோகம், கொள்ளைகள். என்பன உலகம் முழுவதும் மலிந்தனவாகிவிட்டன.

மனிதமனங்கள் வக்கிரமுடையதாக மாறிவருவதையே எடுத்துக்காட்டுவனவாக உள்ளன. மனித வாழ்வில் பிடிப்பையும் அன்பு, கருணை, சாந்தம், புரிந்துணர்வு, பொறுமை, மகிழ்ச்சி ஆகியவற்றை மக்கள் மனங்களில் வளர்த்தெடுத்து, மன இறுக்கத்தையும் வக்கிரமனப் பாங்கையும் தடுத்து மனிதப்பண்புள்ளவர்களாக மாற்றுவதற்கு கலைகளும் இலக்கியங்களும் பெரிதும் உதவுகின்றன என்கின்றனர் உளவியலறிஞர்கள். கலை இலக்கியங்களை இரசிப்பதிலும் நயப்பதிலும் பொறுமை, அன்பு, உவகை, ஆகிய மனவெழுச்சிகள் வளர்ச்சியடையும் அதேவேளை தீங்கான மனவெழுச்சிகள் பெருமளவு கட்டுப்படுத்தப்படுகின்றன என இவ்வறிஞர்களின் கருத்துக்களை உள்வாங்கியே பொதுவாக கலைத்திட்டங்கள் தயாரிக்கப்படுகின்றன.

கல்வியின் நோக்கம் மனிதனை நல்ல பண்புள்ளவனாக அவனை மாற்றுவதே என்கின்றார் ஓர் கல்வியியல் அறிஞர். இக்கருத்தை பல உளவியல், கல்வியியல் அறிஞர்களும் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

இந்நிலையில் நாட்டின் அபிவிருத்திக்கும் கற்போன் தொழில் வாய்ப்பை பெற்றுக்கொள்வதற்கும் பொருத்தமான கல்வித்திட்டம் அமைக் கப்படுதல் எந்தளவு முக்கியமானது என உணரப்படுகிறதோ அந்தளவுக்கு மனிதப்பண்புள்ளவனாக அவனை மாற்றுவதும் முக்கியமானது. அதைவிட முக்கியமானது எனக்கொள்ளினும் தவறில்லை.

கற்போன் மனதில் மானுடப்பண்புகளை விருத்தி செய்ய கலை, இலக்கியங்களின் இரசிப்புக்கும் பயிற்சிக்கும் கூடுதல் முக்கியத்துவம் பாடத்தில் அளிக்கப்பட்டிருக்க வேண்டும். தமிழ்மொழியும் இலக்கியமும் என்ற ஆறாந்தரத்திற்கான பாடத்திட்ட கையேட்டில் பாடத்தின் பொதுக்குறிக்கோள் 7லில் சமூக கலாசார விழுமியங்களை அறியவும் வளர்க்கவும் மொழியை சாதனமாகக்கொள்வதன் மூலமே சமூகத்துடன் சேர்ந்து வாழுந்திறனையும் ஆளுமையையும் விருத்தி செய்தல் என குறிபபிடப்பட்டுள்ளன.

இதன்படி கலை இலக்கிய விழுமியங்களை அறியவும் வளர்க்கவும் உதவுகின்ற பாட அலகுகள் எத்தனை உள்ளன? அவை எந்தத் தளத்தில் நின்று பேசுகின்றன என்பது கட்டாயமாக கேட்கப்படவேண்டிய கேள்வியாகிறது. பாடத்தின் பொதுக்குறிக்கோளில் மட்டும் குறிப்பிட்டுவிட்டு, அதற்கான வாய்ப்புக்களை பாட அலகுகளில் போதுமான அளவுக்கு இடமளிக்காமல் தவிர்த்திருப்பது எந்தளவுக்கு பொருத்தமானது?

நிதி மூலங்களை அள்ளி வீசும் நிறுவனங்களின் முகங்கோணாமல் பார்த்துக்கொள்ள பாடத்திட்டத்தை தயாரிக்க, முற்பட்டதன் விளைவுகள் ஆறாந்தர தமிழ்மொழியும் இலக்கியமும் என்ற பாடநூலில் தெளிவாகவே தெரிகிறது. இன்று உலகெங்கும் நிகழும் சம்பவங்கள் அடிப்படையில் நோக்கும் போது மனிதப் பண்புகளை எதிர்காலச் சந்ததிகளிடம் விருத்தி செய்யவேண்டிய பணி பொறுப்பு வாய்ந்த கல்வி சமூகத்தினுடையதாகிறது. இல்லையேல்,

"மனிதன் எல்லாம் தெரிந்து கொண்டான் இருந்தபோதும்
மனிதனுக்கு
ஒன்றுமட்டும் புரியவில்லை...
மனிதனாக மனிதனுக்கு வாழ
மட்டும்
புரியவில்லை...ஓ...."

எனப்பாடும் நிலைக்கு உலகம் தள்ளப்பட்டுவிடும். இதற்காகவெனினும் தமிழ்மொழியும் இலக்கியமும் (பாடநூல்) வடிவத்தில் மட்டுமன்றி உள்ளடக்கத்திலும் தமிழ்மொழியும் இலக்கியமுமாகவே இலங்க வேண்டும் என்கின்றேன். நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?

(முற்றும்)

(05 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இங்கு இந்தக் குழுவினர் தங்கியிருந்த காலப்பகுதியில்தான் புலிகள் சிலரையும், புலிகளின் ஆதரவாளர்கள் சிலரையும் ஊடகவியலாளர் ஜி. நடேசன், கல்விமான் தம்பிஐயா ஆகியோரையும் கொலை செய்தனர். இக்கொலைகளை செய்து வரும் போதே கருணா குழுவினர் தாக்குதலுக்குள்ளாகினர். இதனை அடுத்து பொலனறுவ போதிருக்கமா பிரதம பிக்கு எம்.ஐ.சி யினரின் இரகசிய புலனாய்வு நகர்வுகள் பற்றிய தகவல்களை ஊடகங்களுக்கு வழங்கினார். இதுவே அவர்களின் கூட்டு மறைமுக நடவடிக்கைகள் பகிரங்க அரங்கிற்கு வரக்காரணமாக அமைந்தது.

இராணுவ புலனாய்வுப் பிரிவினர் இதுபோன்ற மறைமுக நடவடிக்கைகளை போர்ச் சூழலிலும் சரி, சமாதானச் சூழலிலும் சரி மேற்கொண்டு தமிழர் உரிமைப் போருக்கு பாரிய சேதாரங்களை ஏற்படுத்துவதில் முனைப்போடு செயலாற்றுகின்றனர். 21.12.2002 அன்று எம்.ஐ.சி யினர் உயர் மறைமுக நடவடிக்கை ஒன்றை மேற்கொள்ள இருந்த போது அந்த இரகசியம் அம்பலமாகியது.

கண்டியிலுள்ள அத்துறுகிரியவில் அமைந்துள்ள எம்.ஐ.சி யினரின் மறைவான தளத்தை இராணுவப் பொலிசாரும் (CORPS CEYLON MILITARY POLICE - CCMP) கண்டி விசேட பொலிசாரும் இணைந்து முற்றுகையிட்டதனால் அது பகிரங்கமாகியது. அதாவது கிணறு தோண்டப்போய் பூதம் கிளம்பிய கதையாக முடிந்தது.

இந்த மறைவான தளம் இராணுவப் புலனாய்வுப் பிரிவினரின் வார்த்தையில் INT CELL எனப்படும். தமிழர் தாயகப் பகுதிகளில் இயங்கி வந்த எம்.ஐ.சி யினரின் ஆழ ஊடுருவி தாக்கும் அணியினரின் பின்னணித் தளமாக இந்த INT CELL விளங்கியுள்ளது. இந்த மறைவான தளம் போன்று இன்னும் சில அங்கொன்றும் இங்கொன்றுமாக இயங்கி வருகின்றது.

இராணுவப் புலனாய்வு பிரிவின் ஊடுருவல் தாக்குதல்கள், மனித வேட்டைகள், தடம் தொடர்தல் முரண்பாடுகளை கையாளுதல், பிரித்தாளும் தந்திரோபாயங்களை பிரயோகித்தல், இரகசிய புலனாய்வு பணிகளை மேற்கொள்ளுதல் என இது வரையிலும் பார்க்கப்பட்ட விடயங்கள் ஓரளவுதான். இதற்கு அப்பாலும் அதன் புலனாய்வு வீச்சின் எல்லை பரந்தது.

எம்ஐசி சனாதிபதி பாதுகாப்புப் பிரிவிலுள்ள (PSD) பாதுகாப்புக் குறைபாடுகள் குறித்தும், அலரிமாளிகையில் பொலிசார் கடமை குறித்தும், தமது மேலதிகாரிகளுக்கு தகவல் தெரிவிக்கும் பணிகளையும் செய்கின்றது.

அவ்வாறான பணியில் இரு எம்.ஐ.சி யைச் சேர்ந்த உளவாளிகள் பிச்சைக்காரன் போலவும், குடை திருத்துபவர் போலவும் மாறுவேடங்களில் அலரிமாளிகைப் பகுதியில ஈடுபட்டிருந்தவேளையில் சந்தேகத்தின்பேரில் இருவரும் பொலிசாரால் கைதுசெய்யப்பட்ட செய்தியினை திவயின பத்திரிகை வெளியிட்டிருந்தது.

இராணுவப் புலனாய்வுப் பிரிவு சிறிலங்கா அரசினது புலனாய்வுப் பிரிவினுள் மிகவும் சக்தி வாய்ந்த ஒரு பிரிவாக செயலாற்றி வருகின்றது. அது புலனாய்வு அரங்கை பலமான நிலையில் வைத்திருக்கும் புலனாய்வு வியூகங்களை வகுப்பதிலேயே போதிய அக்கறையை செலுத்துகின்றது. ஆனாலும் பிஸ்டல் குழுவினர் எம்.ஐ.சியின் புலனாய்வு அரங்கை உலுப்பியெடுத்துவருகின்றனர்.

எம்.ஐ.சி யினரின் முக்கிய புலனாய்வாளரான புளொட் மோகன் தொடக்கம் புளொட் மோகனின் நெருங்கிய சகாவான தயாளகுமார் வரை பலர் பிஸ்டல் குழுவினரின் இலக்கிற்கு பலியாகிப்போயுள்ளனர்.

இவ்வாறாக கொல்லப்பட்டவர்களின் பாதுகாப்பு விடயத்தில் அரசு அலட்சியம் செய்துள்ள குற்றச்சாட்டுக்களை சிங்கள இனவாத ஊடகங்கள் செய்தியாக வெளியிட்டுமுள்ளன. அதில் புளொட் மோகன் தனது பாதுகாப்பிற்காக துப்பாக்கி ஒன்றைப் பாவிக்க இராணுவப் புலனாய்வுப் பணியாளர் ஊடாக பாதுகாப்பு அமைச்சரிடம் அனுமதி கோரியிருந்தார். ஆனால், இது தொடர்பாக புளொட் மோகனுக்கு இறந்த தருணம் வரையில் எவ்வித பதிலும் கிடைக்கவில்லை என இராணுவப் புலனாய்வுப் பிரிவு கூறியதாக லக்பிய திஸ்ஸ ரவீந்திர பெரேரா செய்தியொன்றை வெளியிட்டிருந்தார்.


இச் செய்தி சிறிலங்கா இராணுவப் புலனாய்வுப் பிரிவினருடன் இணைந்து இயங்கும் தமிழ் தேசியத் துரோகிகள் அனைவருக்கும் உறைப்பான பாடத்தையே புகட்டி நிற்கின்றது. துரோகம்செய்யும் துரோகிகள் எவருமே பாதுகாப்பாக, அமைதியாக வாழமுடியாது அவர்களை வரலாறும் தண்டிக்கவே செய்கின்றது. ●

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

தற்போதைய இந்தியாவின் தென்முனையாக தமிழகமும், தமிழரின் மூதாதை தாயகமான இலங்கையிலும் இம் மூத்த பரிணாமங்கள் வாழ்ந்ததாக கணிப்பிடப்படுகின்றது.

கருவிகளைப் பயன்படுத்தி மனிதன் ஆரம்பித்தது, தனது உணவுத் தேவைகட்காகவாகும். கிழங்குகளை தோண்டவும் மனிதன் கற்களை கைகளால் பற்றி பயன்படுத்தத் தொடங்கியது முதல் கருவியாகும். இதுவே கற்காலம் எனப்படுகின்றது. தமிழகத்திலும், இலங்கையிலும் பளிங்குக் கற்களை தற்கால மனிதன் கருவியாகப் பயன்படுத்தத்தொடங்கினான். பழைய கற்காலமனிதன் நெடுங்காலம் மலைப்பாங்கான பகுதிகளில் பாதுகாப்புக்காக வாழ்ந்திருந்தான்.

தமிழகத்தின் கோத்தலை ஆற்றுப்படுகை திருவள்ளுவர், பொன்னேரி, பல்லாபரம், வடமதுரை, வடஆற்காடு, திருச்சி, தஞ்சை, மதுரை பகுதிகளில் பழையகற்கால மனிதர்களின் கூம்பு வடிவ கூர்மையான கல்லாயுதங்கள் எடுக்கப்பட்டன. தமிழகத்தில் இந்த மனித மூதாதைகளின் காலம் 2 லட்சம் ஆண்டுகள் முதல், 30 ஆயிரம் ஆண்டுகள் வரை எனக் கூறப்படுகின்றது. அண்மைய நாட்களில் சுவீடனின் உட்சலா பல்கலைக்கழக மானுட அறிவியலறிஞர்களும், அமெரிக்கடென்சில்வேனிய பல்கலைக்கழக மானுடவியல் அறிஞர்களும் மரபணு சோதனை நுட்பங்கள் மூலம், ஒருலட்சம் ஆண்டுகளில் இந்திய உபகண்டத்தில் மனித மூதாதை வாழ்ந்ததாக ஆய்வு முறை ஒன்றை வெளியிட்டனர். ஆனால், முன்னைய ஆய்வுகளில் தற்காலம் 2 லட்சம் ஆண்டுகள் முன் இந்தியாவில் ஆரம்பமானதாக உறுதி செய்யப்பட்டது. ஈழத்தில் அது ஒருலட்சத்து 25 ஆயிரம் ஆண்டுகளில் ஆரம்பமானதாக தற்கால கருவிகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டது. இரணைமடு புவிச்சரிதவியற்படை என்ற வடதமிழீழ மேற்குப்பகுதியில் ஒருலட்சத்து 25ஆயிரம் ஆண்டுகட்கு முன் இந்த தற்கால கருவிகள் கண்டெடுக்கப்பட்டன. ●



# உளவியல் நவீனம்...

## அத்தியாயம்- 04

### பகுதி -23

ஆனால் அவனது தனிப்பட்ட உலகத்தினுள் புகுந்து எமக்குத் தேவையான பதில்களை வலிந்து இழுத்தெடுக்க முயல்வது நிச்சயமாகவே பொருத்தமற்ற செயலாக இருக்கும்




அவன் செய்யும் ஒவ்வொரு செயலுக்குப பின்னாலும் வலுவான காரணம் ஒன்றைக் கொண்டிருக்கும். நபர் என்ற வகையில் அவன் மீது நான் கொண்டிருக்கும் நம்பிக்கையை அவனுக்குப் புரிய வைக்க முடியுமாயின்... அவன்... ஊகித்தறிவதற்கு மறைவான எந்தப் பதில்களோ... வெளிப்படையாக சொல்லப்படாத கருத்து வெளிப்பாடுகளோ... அல்லது மறைத்து வைக்கப்பட்டிருக்கும் நடத்தைகளுக்கான நியமங்களோ... எனது மனதில் உள்ளவற்றை உணர்ந்து நான் ஏற்கெனவே முடிவு செய்து விட்ட ஒரு தீர்வைஅவன் முன்வைப்பதற்கான அழுத்தங்களோ... அல்லது... எல்லாவற்றையும் இன்றைக்கே செய்து விடவேண்டும் என்ற அவசரமோ... இல்லை என்ற எண்ணக்கருவை அவனுக்கு புரியவைக்க முடியுமாயின், சில வேளைகளில், தனது பதில் வினைகள் தருகின்ற பாதுகாப்பு உணர்வையும் அவை சரியானவைதான் என்ற உணர்வையும் அவன் அதிகமதிகம் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கலாம். அவன் அவற்றை வேறுபடுத்திப் பார்த்து புரிந்து கொண்டு, அவற்றை ஏற்றுக் கொள்ள அது உதவக்கூடும். இதற்கு அதிக காலம் எடுக்கும். இருவருமே உண்மையான முயற்சியை எடுக்க வேண்டும். இருவருமே அதிக பொறுமையை கைக்கொள்ள வேண்டியிருக்கும். எல்லாச் சந்தர்ப்பத்திலும் அது அடிப்படையில் நேர்மையானதாகவும் இருக்க வேண்டும்.

திடீரென்று அவன் கைகளை நீட்டி ஒவ்வொரு கையிலும் ஒவ்வொரு துண்டங்களை எடுத்துக் கொண்டு அவற்றை ஒன்றோடு ஒன்றை மோதி "உடைஞ்சு போச்சுது" என்றான்.

"ஓ! உடைஞ்சு போச்சுதா?" என்றேன் நான்.

"ஓமோம்..... உடைஞ்சு போச்சுது" இது அவன்.

வாகனங்கள் நிறுத்தும் பகுதிக்குள் வந்த ட்ரக் ஒன்று திறந்திருந்த பலகணிக் கருகில் வந்து தரித்துக் கொண்டது. பலகணியை நோக்கிச் சென்ற டிப்ஸ் அதனை பூட்டத்தொடங்கினான். பலகணி திறந் திருக்கும் போதே அறைக்குள் மிக வெப்பமாக இருந்தது. எனினும் பலகணியை மூடுவதற்கான கைபிடியை அவன் சுழற்றிக் கொண்டிருந்தான்.


"பலகணியை பூட்டு" டிப்ஸ் தனக்கே சொல்லிக் கொண்டான்.

"பலகணியை பூட்டப்போறீங்களா? அது திறந்திருக்கும்போதே அறைக்குள்ள வெக்கையாயெல்லோ இருக்குது?"என்று அவனைக் கேட்டேன்.

'ஓமோம்" என்ற அவன், "நீ பலகணியை பூட்டு டிப்ஸ்" என்றான். "வெக்கை என்றாலும் பூட்டப் போறீங்களா?" "ஓமோம்......" என்றவன், "டிப்ஸ் பலகணியைப் பூட்டு" குரல் உறுதியாக வெளிவந்தது.

"உங்களுக்கு என்ன வேணும் எண்டு உங்களுக்கு நல்லாத்தெரியும்.... என்ன?" நான் கேட்டேன்.

கண்ணீர்க்கறைகள் படிந்த தன் முகத்தை ஒருமுறை தேய்த்து விட்டுக் கொண்டான். அவனை அணைத்துக் கொண்டு அவனுக்கு ஆறுதல் கூறியிருக் கலாம். அந்த சந்திப்பு நேரத்தை சிறிது நீட்டியிருக்கலாம். அவன் மீதான அன்பையும் அனுதாபத்தையும் வெளிப்படையாகவே காட்டியிருக்கலாம். இவை எல்லாவற்றையும் நான் இலகுவாகவே செய்திருக்கலாம். ஆனால் அந்தக் குழந்தையின் வாழ்க்கையிலே உணர்வு ரீதியான பிரச்சினைகளை மேலும் சேர்த்து விடுவதில் என்ன பயன் விளையப்போகின்றது? அவன் தன் வீட்டைப்பற்றி என்ன எண்ணினாலும் முடிவில் அங்குதான் போகவேண்டும். யதார்த்தமான அந்தக்காரணியை தவிர்க்க முயல்வது அவனுக்கு உதவப் போவதில்லை. அவன் தனது உலகத்தை எதிர்கொள்வதற் கான வலுவை அவன் உருவாக்கிக் கொள்ள வேண்டும். ஆனால் அந்த வலு அவனுக்குள் இருந்துதான் வர வேண்டும். தனது உலகத்தை அது இருக்கும் நிலையிலேயே எதிர்கொள்ளத் தனக்கு இயலுமை இருக்கிறது என்பதை அவன்தானே பட்டறிந்து கொள்ளவேண்டும். டிப்ஸுக்கு பொருளுள்ளதாக இருக்கக்கூடிய எந்த மாற்றமும் அவனுக்குள் இருந்துதான் உருவாக வேண்டும். அவனது வெளி உலகத்தை நாங்கள் உருவாக்கலாம் என்று நாம் எதிர்பார்க்க முடியாது.



இறுதியாக, வீடு செல்வதற்கான ஆடைகளை அணிவித்து விட்டேன். அவன் எனது கையைப் பிடித்துக்கொண்டு மண்டபத்தினூடாக என்னுடன் நடந்து வரவேற்பறை வரை வந்தான். அவனது தாயார் அங்கே அவனுக்காகக் காத்துக் கொண்டிருந்தார். டிப்ஸைப் போலவே, அசௌகரியமான உணர்வுடன்.. அமைதியிழந்து போய்..... தன்னைப் பற்றியோ..... தன் சூழ்நிலை பற்றியோ நிச்சயமில்லாமல்..... அவள் அங்கே காத்துக் கொண்டிருந்தாள்.

டிப்ஸ் அவளைக் கண்டதும், சடாரென நிலத்தில குப்புறப்படுத்துக்கொண்டு கைகால்களை உதைத்துக்கொண்டு கூச்சலிட்டு தன் எதிர்ப்பைத் தெரிவித்தான். (தொடரும்....)

(19 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பின்பு அந்தப்படம் பல ஊடகங்களில் பிரசுரமாகியபோதும் எதிலும் அதன உரிமையாளர் பெயரில்லை. தமிழில் இது பெரும் சாபக்கேடு.

அந்தப்படத்தை எடுத்தவர் பெருமாள்கணேசன இடம் - அக்கராயன். அந்தப் படத்தை காண்பித்து நிலைமையை விளக்கி அன்று பெருந்தொகை நிதியை வன்னிப்பகுதிக்கு எடுத்துவர அது உதவியது என ஒரு நம்பகமான தகவல் உண்டு.

மிகவும் மெலிந்த தோற்றத்தில் வெற்றுப்பாத் திரத்துடன் இருக்கும் ஒரு சிறுவனின் படம் அது.

அதேபோல தி.தவபாலன் யாழ்ப்பாண நகரை அதன் முற்றுகை நிலையை விளக்கும் விதமாகப்படமாக்கியிருந்தார்.

போர்க்களக்காட்சிகளை பல போராளிகள் மிக அருமையாகப் படமாக்கியுள்ளார்கள். யுத்தகளத்தில் ஒரு காட்சியைப்படமாக்குவதென்பது சாதாரணமானதல்ல. ஆனாலும் சாதனையாக இது நடந்திருக் கிறது. கேணல் கிட்டு, . பரதன், முத்துராஜ், சிங்காரம், அருச்சுனா, நிஸாம், தமிழன்பன், கஜானி, செந்தோழன், பழனி, நளன், ஸ்ரீராம், பிரசன்னா, வோஜனா, அருண்மொழிஎனப்பல போராளிகள் மிகத்தரமான ஒளிப் படங்களை எடுத்திருக் கிறார்கள். கலை நுட்பத்திலும் பொருளிலும் சிறப்பானவை அவை. ஆனால், துரதிர்ஷ்டமான விடயமென்னவென்றால் எதுவும் இன்றும் சரியான வகையில் காட்சிப்படுத்தப் படவுமில்லை. ஒளிப்படப் புத்தகங்களாக்கப்படவுமில்லை. பி.சி.ஸ்ரீராம், கே.வி.ஆனந்போன்ற சினிமாக்காரர்களின் ஒளிப்படப்புத்தகங்கள் அந்தளவுக்கு பிறகலைஞர்களின் படங்கள் புத்தகங்களாக்கவில்லை. ஏன் தரமானபடங்களை எடுத்து உலகின் கவனத்தை ஈர்த்து ஐஸக் கருணாகரனின் படங்கள்கூட தமிழ்ப்பரப்பில் கவனம் பெறுவதில் வெற்றியடையவில்லை. அதனால் W.N.O வினூடாகவே அவர், 'போர் நடந்த பின்னணிக் காட்சிகள்' பண்பாட்டு அடையாளங்கள் என்ற வகையில் படமாக்கி வருகிறார். சர்வ தேசக்கவனிப்புக்காக தன்னுடைய பெயருடன் ஐஸக் என்ற பெயரை இணைத்துள்ளதையும் இங்கே கவனிக்கலாம்.

பொதுவாக ஒளி ஓவியம் பற்றிய கவனக்குறைபாட்டுக்கு முதலில் ஊடகங்கள்தான் காரணம் என்ற நிலை மாறவேணும்.

இவ்வாறுசெய்யாமல் ஒளிப்படக்காரனைத் தொடர்ந்தும் சுரண்டுவதென்பது மிகமோசமான நாகரிகமற்ற செயலும் ஒளிப்படத்தை விளங்கிக் கொள்ளாமையுமாகும்.

ஈழவிசன்


அதைத் தொடர்க.



**பாவலன் பதில்கள்** என்ற வாசகர்களின் கேள்விகளுக்கான எங்களின் பதில்களை உங்களுக்குத்தரும் நோக்குடன் இந்தப்பகுதிஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கான கேள்விகளை கீழ் காணும் முகவரிக்கு நீங்கள் அனுப்பி வைக்கலாம்.

*பாவலன் பதில்கள்,*
*வெள்ளிநாதம்,*
*யாழ்சாலை,கிளிநொச்சி.*

# பாவலன் பதில்கள்



*அன்பின் பாவலரே!*

*வெள்ளம் பல ஆயிரக்கணக்கான மக்களை இடம்பெயரச்செய்துள்ளது. இவர்களுக்கான மனிதாபிமான உதவிகள் எப்போது கிடைக்கும்?*

*தீபா,*
*மாங்குளம்.*

அடுத்த வெள்ளம் வர வேண்டும்.

*பாவலா!*

*அரபாத் மரணத்தின் பின்னணி என்னவாக இருக்கும்?*

*ராணி,*
*முல்லைத்தீவு.*

அரபாத்தின் மரணத்தில் பின்னணி இருக்கிறதோ இல்லையோ அவரின் மரணத்தின் பின்னர் பல பின்னணிகள் இருக்கிறது.

*பாவலா!*

*தங்களுக்கு பிடித்த நகைச்சுவையொன்று கூறுங்களேன்.*

*புஸ்பலதா,*
*வன்னேரி.*

ஒரு முறை பேனாட்சோ ஒரு விருந்தில் கலந்துகொண்டபோது ஒரு அழகிய பெண் அவரிடம் கேட்டாராம் நாம் இருவரும் திருமணம் செய்தால் என்னுடைய அழகும் உங்களுடைய அறிவும் சேர்ந்து அறிவும் அழகும் உள்ள ஒரு குழந்தை பிறக்குமல்லவா என்று. அதற்கு பேனாட்சோ கூறினாராம் இதற்குப் பதிலாக என்னுடைய அழகும் உங்களுடைய அறிவும் சேர்ந்து குழந்தை பிறந்து விட்டால் விளைவு விபரிதமாக போய் விடுமே என்றாராம் நகைச்சுவையாக.

*பாவலரே!*

*'மனிதம்' என்பது எது?*

*சிந்து,*
*வவுனியா.*

மன்னிக்கத் தெரிந்த மனிதனின் மனது.

*பாவலா!*

*இன்றைய இலக்கிய படைப்புகள் வேறொன்றின் தழுவலாக உள்ளதே?*

*நிசாந்தன்,*
*பண்டாரிக்குளம்.*

அப்படியானால் அன்றையப் படைப்புக்கள் அதற்கு முந்தியப் படைப்புக்களின் தழுவல் என்று கூற முடியுமா.

*பாவலா!*

*நான் கேட்கும் கேள்வி உமக்கு கோபத்தை உண்டு பண்ணலாம்! இருந்தாலும் கேட்கிறேன் சமாதானம் கிடைக்குமா?*

*முரளி,*
*யாழ்ப்பாணம்.*

நிச்சயம் கிடைக்கும் சிங்கள தேசம் தோல்வியை உணரும் போது.

*வணக்கம் பாவலா!*

*தற்போதைய சினிமா பற்றி தங்கள் கருத்து?*

*காயத்திரி,*
*உருத்திரபுரம்.*

போதைவஸ்துக்கு நிகரான வியாபாரம்.

*பாவலரே!*

*ஆண்களில் சிலர் வேலைக்கு செல்வதில்லையே?*

*சிவானி,*
*திருவையாறு.*

உழைத்துப் பிழைக்கத் தெரியாதவர்கள்.

*பாவலரே!*

*தமிழினத்தின் ஒரே தலைவர் வே. பிரபாகரன் அவர்களின் பிறந்த நாள் ஏற்பாடுகள் நடை பெறுகின்றதே அதில் தாங்கள் பங்கெடுக்கவில்லையா?*

*பிரியதர்சினி,*
*கிளிநொச்சி.*

நான் மட்டும் என்ன! உலகத் தமிழினமே கொண்டாடுகிறது.

*பாவலா!*

*இன்றைய யுவதிகளையும் அன்றையயுவதிகளையும் ஒப்பிடு செய்ய முடியுமா?*

*நிரோசனா,*
*நுணாவில்.*

இன்றைய யுவதிகள் இளைஞிகள் அன்றைய யுவதிகள் இன்றைய முதியவர்கள்.

*பாவலரே!*

*சில கணவர்கள் குடி வெறியில் மனைவியரை தாக்குகிறார்களே அவர்களுக்கு தாங்கள் கூறும் அறிவுரை என்ன?*

*கோமதி,*
*மானிப்பாய்.*

அவர்களின் மனைவிமாரே அறிவுரை கூறுகிறார்களே... அவர்கள் வெறி முறிந்தவுடன் திருப்பி வாங்கிக் கொள்ளும் போது.

*பாவலா!*

*சந்திரிகாவை ஐ.நா செயலர் பதவிக்கு தெரிவு செய்தால்...?*

*சுமன்,*
*மன்னார்.*

பாவம் உலக மக்கள்.




"என்ன கொஞ்சநாளா கெலிகொப்டர் அமந்தறை ஓட்டமாக் கிடக்கு.''

''காலந் நெருங்க நெருங்க சந்திரிகாம்மா பறந்து பறந்துதான் திரியுறாவாம்.''

"எங்க பறக்கிறா... இந்தியாவில போய் ஒப்பந்தம் முடிக்காம வெறுங்கையோடதானே வந்தவா...?''

"இந்தியா அரசாங்கமும் இலங்கை அரசாங்கமும் ஒண்டையொண்டு பிடிச்சுத் தொங்கிக் கொண்டுதானே காலந்தள்ளுகினம். ஒருகாலத்தில இந்திய ராணுவத்தை இலங்கையால கலைக்க அரசியல் படுகொலையளச் செய்தவை ஜேவீப்பீக்காறர்.''

"திருவாளர் குமாரதுங்காவையும் சேர்த்து''

"ம் இப்ப இந்தியாவைக் கூப்பிடப்போய் அவை குழம்பினா அல்லது இவைய நம்பி இந்தியா வந்து இஞ்ச குழம்பினா- ரெண்டு சிக்கல் இவைக்கிருக்கு.

''மெய்யே இந்தியப் படை திரும்பிவரக்க, திரும்பியும் பாராத தமிழ் நாட்டுக் கட்சியள் தான் இப்ப சோனியாவின்ர ஆட்சிக்கு முட்டுக் குடுத்திருக்கினம். இவை குழம்பாமப் பாக்கவேணும், மற்றுமொண்டு, முன்னை இலங்கைக்குள்ள படையனுப்பித்தான், காந்திய வாரிசு கவிண்டது. திரும்பியும் அதேபிழையை விடலாமோ, எண்டும் அங்க கடுமையாக் குழம்பி நிக்கினம்போல''

என்னவோ- இன்னும் ரெண்டுவரியத்துக்க அம்மா அச்சமற்ற வாழ்வும் அயதியத்த நித்திரையும் கொள்ளவேணுமெண்டாப் பறந்துதான் திரியோணும்.

* * *

## படத்திற்கு மெருகூட்டுங்கள் -95



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப்பரிசு வழங்கப்படும்.

**படத்திற்கு மெருகூட்டுங்கள் -95**

..................................................................
..................................................................
..................................................................
..................................................................

பெயர் : ..................................................... **ஈழநாதம்**
முகவரி : ..................................................... யாழ்சாலை,
..................................................... கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் -94



**இ.கண்ணதாசன்,**
**29/1 திருவையாறு,**
**கிளிநொச்சி.**

### பரிசுக்குரிய வரிகள்

*A9 பாதையிலே என்னை இட்டுப்போய்*
*இயமனிடம் கையளிக்க எண்ணும் எசமானே*
*வாலைக்கடித்து நீ வதைத்திடினும்- எழுந்து*
*வண்டியிழுத்து நான் வரமாட்டேன்.*

### பாராட்டுக்குரிய வரிகள்

*இரட்டை வண்டில் மாடு*
*இடர்கள் தாண்டியே செல்லலாம் வீடு.*
*இங்கு நாம் தனியாய் முன்னேற்பாடு,*
*இடைக்காலத்தில் சமாதான மடையுமா நாடு?*

ந.நவலோகன்,
கிளிநொச்சி.

*சமாதானமிங்கு சாகுபடியாகி*
*வருகிறது வைக்கோலாய்*
*மாட்டிற்கே பொறுக்கவில்லை-சில*
*மனிதர்களேனோ மாய்கிறார் இன்னும்.*

சி.ரவிக்குமார்,
திருமுறிகண்டி,

*விடியலின் திசைக்கு நீண்ட தூரப்பயணம்-விடியும்*
*வரைக்கும் தொடருதே இந்தத் துயரம்*
*சோர்வுற்று விட்டால் ஈர்க்குமோ இந்த இதயம்-சோர்வடைய*
*வில்லையே நான்!ஏன் என்னை தட்டியெழுப்புகின்றாய்?*

த.கோகுலராஜ்,
புளியங்குளம்.

*காளை மாடு கால் ஒடிந்து போனதே*
*பாவம் சுமையை சுமக்க முடியவில்லையே.*
*ஏழை எம் வாழ்வு போனதே*
*தம் உடைமை வாழ்வும் நொந்து போகிறதே.*

ரா.சுஜந்தன்,
பரவிப்பாஞ்சான்,

*ஓடி ஓடி உழைத்திட்ட இரு சோடிக்காளைகளும்*
*ஏன் இந்த மண்ணில் வாழ்ந்தென்ன வீழ்ந்தென்ன?*
*என்ற வெறுப்புத்தான் உண்டாயிற்றோ*
*யார் தான் அறிவார்!*

எ.டினோஜன்,
உருத்திரபுரம்,

இந்தப் போட்டிக்கான நினைவுப்பரிசினை **அருச்சுனா புகைப்படக் கலையகம்** வழங்குகின்றது.
புதுக்குடியிருப்பு கிளிநொச்சி.




## ஒலிப்பேழை வெளியீட்டு விழா

மாலதி படையணியின் உருவாக்கத்தில்
இசைவாணர் கண்ணன் அவர்களின்
இசையமைப்பில் உருவான
பாடல் ஒலிப்பேழை வெளியீட்டு விழா.

காலம் : 25.11.2004 வியாழக்கிழமை
நேரம் : காலை 10.00மணி
இடம் : பண்பாட்டு மண்டபம், கிளிநொச்சி

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**

உங்கள் வரவால் நிறைவடையும்,
மாலதி படையணி,
தமிழீழ விடுதலைப்புலிகள்,
தமிழீழம்.



## அரங்கேற்ற வாழ்த்து

கொலண்ட் நாட்டில் வாழும் திரு.திருமதி.பிரான்சிஸ் தம்பதிகளின் செல்வப்புதல்வியும் சலங்கைநர்த்தனாலய நாட்டிய கலாநர்த்தகி ஸ்ரீமதி ஜெயந்தி யோகராசா அவர்களின் மாணவியுமான செல்வி.சிந்தியா அவர்களின் பரதநாட்டிய அரங்கேற்ற விழா சிறப்புற நடைபெற உளமார வாழ்த்துகிறோம்.

மேலும் செல்வி சிந்தியா ஆயகலைகள் அறுபத்து நான்கையும் சிறப்புறக்கற்று சீராக வாழவேண்டும் என்று புனித தோமையார் வழியாக எல்லாம் வல்ல இறைவனை உளமார வேண்டுகிறோம்.

வாழ்த்துவோர்:
பஸ்தியாம்பிள்ளை பிலோமினம்மா-அப்பம்மா, பெரியப்பாமார் குடும்பத்தினர்,
சித்தப்பாமார் குடும்பத்தினர்,அத்தைமார் குடும்பத்தினர் மற்றும் உற்றார் உறவினர்கள்.

3ம்வட்டாரம்,
எழுவைதீவு.

(சி-10761)

**FedEx** Express®

விரைவு · பாதுகாப்பு · நம்பகத்தன்மை

இப்பொழுது உள்நாட்டிலும் வெளிநாட்டின் எப்பாகத்திற்கும் விரைவாக பொதிகள், கடிதங்களை அனுப்பிடவும் பெறவும் நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்

E.mail:- thirumurugan @ lycosmall.com

## திருமுருகன் கொம் நெற்

259,கே.கே.எஸ் றோட்,
யாழ்ப்பாணம்.
[Opposite All Cylon Distributors)
Tel - 021 222 7835
Fax - 021 222 7836

46,ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
[பலநோக்கு கூ.ச.முன்பாக)
Tel - 021 222 7560
Fax - 021 2227310

(சி-10133)

**WESTERN UNION**®

பணப் பரிமாற்றம்
இப்பொழுது உலகின்
எப்பாகத்திலிருந்தும்
துரிதமாகப் பணத்தைப்
பெற்றுக்கொள்வதற்கு



மீண்டும் வன்னியில் புதுப்பொலிவுடன்

## குமரகுரு

உங்கள் இன்றைய தெரிவுக்கு...

புடைவை
அழகுப்பொருள் வாணிபம்

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட அதி நவீன ஆடைகளை
உள்ளடக்கிய திருமணம் மற்றும் மங்கள நிகழ்வுகளுக்கான காஞ்சிபுரம் சாறிகள்
பட்டுசாறிகள் பட்டுவேட்டிகள் மற்றும் சல்வார் சோலிகிற் சூட் கவுண்
சேட் சூட்டிங் மற்றும் பெரியோர்கள் சிறியோர்களுக்கான ஆடைகளை மொத்தமாகவும்
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள உடன் நாடுங்கள்

எமது காட்சியறை
முற்றிலும் குளிரூட்டப்பட்டது.

**குமரகுரு** புடைவை அழகுப்பொருள் வாணிபம்
யாழ்சாலை, கிளிநொச்சி

KUMARAKURU
Textile & Fancy House
Yarl Road, Kilinochchi.

(சி-10740)

SK Graphics

## EXPOAIR

your friend in the skies

## எக்ஸ்போ எயார்

வான்வெளியில் உங்கள் நண்பன்

யாழ் - கொழும்பு
விமானப்பயணத்திற்கு அழையுங்கள்.

யாழ்ப்பாணத்தில்:021-2223891/6297,0772348888/2349999,
கொழும்பில்:0112372952/953, வெள்ளவத்தையில்: 0112360290/291.

e-mail- jaffna@expoavi.com e-mail- reservations@expoavi.com

இலங்கையில் முன்னணி வகிக்கும் நம்பத்தகுந்த உள்ளூர் விமான சேவை

(சி-10126)



இப் பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ம் ஆண்டு நவம்பர் மாதம் 19 ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a NewsPaper

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் - IV

நாதம் - 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | கார்த்திகை-04 | 19 -11-2004 | வெள்ளிக்கிழமை | ஓசை -275




## வரவுசெலவுத்திட்டத்தில் பாரிய பற்றாக்குறை; குறையை நிரப்ப தெளிவான திட்டங்கள் இல்லை

(கொழும்பு)

சந்திரிகா குமாரதுங்க தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் அரசியல் நோக்கத்தை முதன்மைப்படுத்தி தனது முதலாவது வரவு-செலவுத் திட்டத்தை நேற்று முன்வைத்துள்ளது. பற்றாக்குறையான 17287.3 கோடி ரூபாவை ஈடு செய்ய திருப்திகரமான - யதார்த்தபூர்வமான திட்டங்கள் இவ்வரவு-செலவுத்திட்டத்தில் முன்வைக்கப்படவில்லை.

இது ஆய்வாளர்கள் மத்தியில் பல கேள்விகளை எழுப்பியுள்ளது. பற்றாக்குறையை ஈடுசெய்ய அரசாங்கத் திடம் இரகசியத் திட்டங்கள் இருக்கலாம் என சில ஆய்வாளர்கள் சந்தேகம் கொண்டுள்ளனர். அதாவது, எஞ்சியுள்ள அரச உடமைகளை வெளிநாடுகளுக்கு விற்பனை செய்வதாகவும், நாணயத் தாள்களை அச்சிடு வதாகவும் அந்தத் திட்டங்கள் இருக்கலாம் என்றும் சந்தேகம் கிளப்பப்பட்டுள்ளது.

ஏனெனில், ஏனைய வருடங்களை விட இவ்வருடம் பற்றாக்குறை அதிகரித்துள்ள நிலையில் ஏனைய வரு டங்களில் பற்றாக்குறையை நிவர்த்திக்க வெளிநாட்டுக் கடன் வெளிநாட்டு உதவிகள் முக்கிய பங்குவகித்தன. ஆனால், இம்முறை வெளிநாட்டு உதவிகள் பற்றிப் பலமான திட்டங்கள் எதுவும் குறிப்பிடப்படாத நிலையில், அதி கரித்த பற்றாக்குறையை எவ்வாறு அரசு ஈடுசெய்யப் போகின்றது என்ற கேள்வியே இச்சந்தேகத்தைக் கிளப்பியுள்ளது

# அரச ஊழியர்களுக்கு40 வீத சம்பள உயர்வு

# அத்தியாவசியப்பொருட்களுக்கு வற்வரி குறைப்பு!

## மதுபான, குளிர்பான வரிகள் அதிகரிப்பு ஆடம்பர, சூதாட்ட வரிகளும் உயர்வு

(கொழும்பு)

**ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முதலாவது வரவு- செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களுக்கு 40 சதவீத சம்பள அதிகரிப்பு அறிவிக்கப்பட்டுள்ளதோடு, அத்தியாவசியப் பொருட்கள் மீதான வற்வரியும் குறைக்கப்பட்டுள்ளது. அதேசமயம் மது, குளிர்பானங்கள் மீதான வரிகளும் ஆடம்பரப் பொருட்கள் மீதான வற்வரியும் அதிகரிக்கப்பட்டுள்ளன.**

இம்முறை வரவு செலவுத்திட் டத்தில் அரசாங்க ஊழியர்களுக் கான சம்பள அதிகரிப்பு மாதம் ஒன்றிற்கு ஆகக்குறைந்தது மூவாரயித்து இருநூற்று ஐம்பது ரூபாய் ஆகவும் ஆக்கக்கூடுத லான சம்பள அதிகரிப்பு மாதம் ஒன்றிற்கு ஒன்பதாயிரம் ரூபா விற்கு மேற்படாத தொகைக்கும் உட்பட்டு ஏற்கனவே வழங் கப்படுகின்ற படிகளும் சேர்க்கப் பட்டு தற்போதைய அடிப்படைச் சம்பளத்தில் நாற்பது சதவீத அதிகரிப்பை வழங்குவதற்கு நிதி யமைச்சர் யோசனை ஒன்றை முன்மொழிந்துள்ளார்.

மேற்படி சம்பள அதிகரிப்பு ஒரே தடவையில் வழங்கப்பட மாட்டாதெனவும்,அவை இரண்டு கட்டங்களாகப் பிரித்துவழங்கப் படுமெனவும் நிதியமைச்சர்

(ivஆம் பக்கம் பார்க்க)

## ஒரே பார்வையில் வரவு – செலவு மதிப்பீடு

| | | |
|---|---|---|
| ★மொத்த வருமானம் | 31242 .2 | கோடி ரூபாய் |
| ★மொத்த செலவீனம் | 48530 | கோடி ரூபாய் |
| ★பற்றாக்குறை | 17287 .8 | கோடி ரூபாய் |
| ★கல்விக்கு | 5428 | கோடி ரூபாய் |
| ★சுகாதாரத்திற்கு | 4040 .8 | கோடி ரூபாய் |
| ★உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கு | 5547 .9 | கோடி ரூபாய் |
| ★நலன்புரி | 3252 .2 | கோடி ரூபாய் |
| ★விவசாயத்துறைக்கு | 2656 .1 | கோடி ரூபாய் |

## வெளிநாட்டவரின் உதவியின்றி வரவு - செலவுத்திட்டம் தயாரிக்கப்பட்டதாம்

### - நிதியமைச்சர் சரத் அமுனுகம கூறுகின்றார்

பாராளுமன்றத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முதலாவது வரவு செலவுத்திட்டம் நேற்றுப் பிற்பகல் நிதியமைச்சர் சரத் அமுனுகமவினால் சமர்ப்பிக்கப்பட்டது.

இதனைச் சமர்பித்து உரை யாற்றும் அவர், வெளிநாட்டவர்க ளின் உதவியின்றி இந்த வரவு செலவுத்திட்டம் தயாரிக்கப்பட்ட தாகத் தெரிவித்தார். நாட்டின் பொருளதார வளர்ச்சிக்கு கைத் தொழில் உற்பத்தியை அதிகரிக்க சரியான காலம் ஆகும் எனவும் அவர் தெரிவித்தார்.

ஐ.தே.கட்சி கிராமிய மக்க ளுக்கு நலன்கள் எதனையும் செய்யாத நிலைமையிலேயே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி மக்களால் தெரிவு செய்யப்பட்டது

தனியார் துறையை வலுப்ப டுத்த உள்நாட்டு வளங்கள் உரிய முறையில் பயன்படுத்தப்படவுள் ளன. பொருளாதார வளர்ச்சி 5இல் இருந்து 5.5 வீதமாக உயர் ந்துள்ளது அமெரிக்காவுக்கான ஏற்றுமதி 8 வீதம் அதிகரித் துள்ளது.

சேமிப்பு 14 வீதம் அதிகரித்த அதேநேரம் முதலீடு 35 வீதம் அதிகரித்துள்ளது. விவசாய அபி விருத்தி வங்கி ஆரம்பிக்கப்பட வுள்ளது.

இலங்கையில் உள்ள சுமார் 2 இலட்சம் முச்சக்கர வண்டிகள்

(ivஆம் பக்கம் பார்க்க)

## அரச ஊழியர்களின் வருமானத்தில் முதல் முறையாக வரி விதிப்பு

### – வேலை நேரமும் ஒரு மணித்தியாலத்தால் அதிகரிப்பு

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் இம்முறை சமர்ப்பித்த வரவு-செலவுத் திட்டத் தில் முதல் முறையாக அரசாங்க ஊழியர்களும் வருமான வரி செலுத்துவதற்கு நிர்ப்பந்திக் கப்பட்டுள்ளனர்.

மாதாந்தம் 25ஆயிரம் ரூபா விற்கு மேற்பட்ட தொகையை சம்பளமாகப் பெறும் அரசாங்க ஊழியர்கள் 11 சதவீத வருமான வரியைச் செலுத்த வேண்டும் என வரவு - செலவுத் திட்டத்தில் குறிப் பிட்டுள்ளது.

(ivஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் அலுவலகம் மீது ஆரயம்பதியில் கைக்குண்டு வீச்சு

மட்டக்களப்பு ஆரையம்பதிப் பிரதேசத்திலுள்ள விடுதலைப் புலிக ளின் அரசியல்துறை அலுவலகத்தின் மீது நேற்று அதிகாலை கைக் குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இராணுவ கட்டுப்பாட் டுக்குட்பட்ட பிரதேசத்தில் இத்தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தின்போது அலுவலகத்திலிருந்த எவருக்கும் எத்தகைய பாதிப்புகளும் ஏற்படவில்லை. இருப்பினும் அலுவலக கட்டடம் சிறு சேதத்திற்குள்ளாகியுள்ளது. இச்சம்பவம் குறித்து இலங்கை போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவிடம் புகார் செய்துள்ளதாக விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

## போராளிகள்மீதான தாக்குதலைத் தடுக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை

### - புலிகளின் மட்டு. அம்பாறை அரசியல்துறை கண்டனம்

(மட்டக்களப்பு)

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் போராளிகள் மீது மேற்கொள்ளப்படும் தாக்குதல் களைத் தடுப்பதற்கு முன்னேற்ற மான நடவடிக்கைகள் எதையும் அரச படைகள் மேற்கொள்ள வில்லை என விடுதலைப்புலிகள் மட்டு-அம்பாறை மாவட்ட அரசி யல்துறையினர் குற்றம்சாட்டியுள் ளனர். மட்டக்களப்பு வாழைச் சேனைப் பிரதேசத்தில் தமது போராளியொருவர் சுட்டுக் கொல் லப்பட்ட சம்பவம் தொடர்பாக விடுதலைப் புலிகளின் மட்டக் களப்பு - அம்பாறை மாவட்ட அரசியல்துறை விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில்எமது போராளி வர்ணரூபன் எனப்படும் மகேஸ்வரன் றொசான் குமார் வாழைச்சேனை பேத்தாழை கிராமத்தில் வைத்து நேற்று முன்தினமிரவு 9.45 மணியளவில் இனந்தெரியாதவர்களின் கைத்துப் பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி வீரச் சாவைத் தழுவிக் கொண்டுள்ளார்.

(ivஆம் பக்கம் பார்க்க)

## மாவீரர் நாள் நவம்பர் -27



“எமது வீர சுதந்திர வரலாறு மாவீரர்களின் இரத்தத்தாலும் எழுதப்பட்டிருக்கின்றது”

தமிழீழத் தேசியத்தலைவர்
மேதகு வே. பிரபாகரன் அவர்கள்.

## வீரச்சாவு

நேற்று முன்தினம் மட்டு- அம்பாறை மாவட்ட வாழைச்சேனைப் பகுதியில் தேசவிரோதக் குழுவி னரின் தாக்குதலில் போராளி ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார்.

கப்டன் வர்ணரூபன்/றொசான்
மகேஸ்வரன்-ருசான்குமார்
முதலாம் குறுக்குத் தெரு,
கண்ணகி கிராமம்,
வாழைச்சேனை,மட்டக்களப்பு.

என்ற போராளியே வீரச்சாவடைந் தவராவார். இவருக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

## வரிவிளம்பரம்

### வேழன் பதிப்பகம்

உங்கள் சகலவிதமான அச்சக வேலைகளையும் கணினிமூலம் வடிவமைத்து ஓவ்செற்றில் அச்சிட்டுப் பெற்றுக்கொள்ள வேழன் பதிப்பகம். கனகபுரம் வீதி, கிளிநொச்சி. (5284)

### பேச்சுப் போட்டி

யாழ்ப்பாணம் விஞ்ஞானசங்கம் கடந்த காலங்களைப் போன்று இவ்வருடமும் [illegible] நாளை முற்பகல் 10.00மணிக்கு யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் பேச்சுப்போட்டி நடாத்த தீர்மானித்துள்ளது. போட்டியாளர்களின் அனுமதி அட்டைகள் யாவும் பாடசாலை அதிபரினூடாக அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

18 – 11 – 2004 அன்று ஈழநாதம் பத்திரிகையில் 2ஆம் பக்கத்தில் வெளியான சாவு அறிவித்தல் சம்பந்தமான

### நல்லடக்கம் பிற்போடல்

தாளையடியைச் சேர்ந்த மரியாம்பிள்ளை யோசேப்பு அவர்களின் பூதவுடல் 20-11-2004 சனிக்கிழமை தாளையடி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும் என்பதனை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகின்றோம்.

தகவல்
**எமில்ராஜன்**

---

## பணிநிலை வேண்டுகை

### முன்பள்ளிக் கல்வி பயிற்சி உதவித் திட்ட முகாமையாளர்

வடக்கு – கிழக்கு மாகாண முன்பள்ளிகளின் அபிவிருத்தி வேலைத் திட்டங்களில் பணியாற்றுவதற்கு மேற்படி பணிநிலைக்குத் தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பணியின் தன்மைச் சுருக்கும்**

- ☐ கிளிநொச்சியைத் தலைமையாகக் கொண்டு வடக்கு – கிழக்கு மாகாணத்தின் சகல பகுதிகளிலும் முன்பள்ளிப் பயிற்சிகளைக் கண்காணிப்பதும் ஒழுங்குபடுத்துவதும் வளவாளராகக் கலந்து கொள்வதும் பிரதான பணியாகும்.
- ☐ அத்துடன் பயிற்சி தரவுகள், அறிக்கைகள், வரைபுகளை கணனி மயப்படுத்துவதும் இதனோடிணைந்த வேலைத் திட்டங்களை மேற்கொள்வதும் ஆகும்.

முன்பள்ளிக் கல்வித் துறையில் மேற்படி பணிக்கேற்ப ஆற்றலும், தேர்ச்சியும் ஆங்கில அறிவும் கொண்டிருப்பதுடன் உந்துருளி (மோட்டார் சைக்கிள்) சாரதி அனுமதிப் பத்திரமும் கொண்டிருப்பவர்கள் 30.11.2004ஆம் திகதிக்கு முன் கீழ் குறிப்பிடப்பெற்ற முகவரிக்குக் கிடைக்கக் கூடியதாக விண்ணப்பிக்கவும்.

**ஆரம்பப் பிள்ளைப் பருவ அபிவிருத்திப் பிரிவு,**
தமிழர் புனர்வாழ்வுக் கழகம்,
நடுவப்பணியகம்,
கிளிநொச்சி.

(5283)

---

**சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம்**

## கேள்வி கோரல்

### குழாய்க்கிணறு அமைத்தல்

29.09.2004 ஆம் திகதிய உதயன் பத்திரிகையில் வெளியிடப்பட்ட விளம்பரத்திற்கு அமைவாகக் குறிப்பிடப்பட்ட குழாய்க்கிணறுகளை இயந்திர வலு மூலம் அமைப்பதற்கும், கைப்பம்பி பொருத்துவதற்குமான வேலைகளுக்குக் கேள்விகள் கோரப்படுகின்றன. கேள்விகளை அதற்கென வழங்கப்படும் படிவத்தைப் பெற்றுப் பூரணப்படுத்தி 24.11.2004ஆம் திகதிக்கு முன்பு சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

மேலதிக விவரங்களைச் சாவகச்சேரி பிரதேசசபை தலைமைப் பணிமனையில் அறிந்துகொள்ளவும்.

சாவகச்சேரி பிரதேசசபை,
கொடிகாமம். (சி-10623)

ந.பாலசந்திரன்,
செயலாளர்.

---

## கண்ணீர் அஞ்சலி

**அமரர் பொன்னையா வள்ளிப்பிள்ளை**

எமது பாடசாலை அதிபரின் தாயார் அமரர் பொன்னையா வள்ளிப்பிள்ளை அவர்களின் இறப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தார்க்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(சி-10696)

மு/தண்ணீரூற்று இ.த.க. பாடசாலை
ஆசிரியர்கள், மாணவர்கள.

---

## கண்ணீர்ப் பூக்கள்

தோற்றம்
09
08
1950



மறைவு
17
11
2004

மாந்தை கிழக்கு பிரதேச சபையில் பணியாளராகக் கடமையாற்றிய

### அமரர் பசுபதி குணரத்தினம்

அவர்களின் மறைவைக் கேள்வியுற்று துயரடைகின்றோம். அவரின் இழப்பால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மாந்தை கிழக்குப் பிரதேச சபை,
பாண்டியன்குளம்,
நட்டான்கண்டல் (சி-10697)

விசேட ஆணையாளர்,
உத்தியோகத்தர்கள்,
பணியாளர்கள்.

---

## சாவகச்சேரி பிரதேசசபை

**01.01.2005முதல் 31.12.2005 வரை**
**சந்தை/இறைச்சிக்கடைகளைக் குத்தகைக்கு விடுவதற்கான**

## கேள்வி அறிவித்தல்

01.கேள்விப் பத்திரம் வழங்கும் கடைசித்திகதி:- 29.11.2004
02.கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி,- 01.12.2004
கேள்வி திறக்கப்படும் திகதி 02.12.2004 (காலை 10.00 மணிக்கு)

### கேள்வி அறிவித்தல் அட்டவணை

| இல. | குத்தகை விவரம் | ஆகக்குறைந்த கேள்வித் தொகை (வரிவரி தவிர) | கேள்விப் பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப் பணம் (மீளளிக்க முடியாதது) |
|---|---|---|---|---|
| 01 | கொடிகாமம் சந்தைக் குத்தகை (துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு உட்பட) | 1,100,000.00 | 5,000.00 | 500.00 |
| 02 | கொடிகாமம்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 125,000.00 | 500.00 | 200.00 |
| 03 | கொடிகாமம்சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 500.00 | 100.00 |
| 04 | கொடிகாமம் சந்தை கருவாட்டுக்கடை இல.01 | 6,500.00 | 150.00 | 100.00 |
| 05 | கொடிகாமம்சந்தை கருவாட்டுக்கடை இல.02 | 5,500.00 | 150.00 | 100.00 |
| 06 | வரணிச் சந்தைக் குத்தகை | 111,000.00 | 250.00 | 200.00 |
| 07 | வரணிச் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 250.00 | 100.00 |
| 08 | கைதடிச்சந்தை மட்டிறைச்சிக்கடை | 40,000.00 | 250.00 | 200.00 |
| 09 | கைதடிச்சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 20,000.00 | 500.00 | 200.00 |
| 10 | கைதடிச் சந்தைக் குத்தகை | 30.000.00 | 500.00 | 100.00 |

குறிப்பு:-

- இறைச்சிக் கடைகளுக்கான சபையால் விதிக்கப்படும் மாத வாடகைகளைச் செலுத்தவேண்டும்.
- கேள்விப்பத்திரக் கட்டணம், கேள்வித்தொகை, மாதவாடகை என்பவற்றுக்குப் பெறுமதி சேர்க்கப்பட்ட Vat (15%) மேலதிகமாகச் செலுத்தப்பட வேண்டும்.
- கேள்விப்பத்திரங்கள் கோருபவர்கள் விண்ணப்பங்களுடன் அடையாள அட்டையைக் கொண்டு வருதல் வேண்டும்.
- கேள்வித் தொகைக்கு மேலதிகமாக Vat 15% செலுத்தவேண்டும்.
- சந்தை வளவினுள்ள கடைகளுக்கு எந்த வரி அறவீடுகளும் மேற்கொள்ளக்கூடாது.
- கால்நடைகள் கைதடி கொல்களத்தில் வெட்டப்பட்டு சுகாதாரப் பரிசோதகரின் அனுமதியுடன் இறைச்சிகள் கொண்டுவருதல் வேண்டும்.
- மேலதிக விபரங்களைத் தலைமை அலுவலகங்களிலும், உப அலுவலகங்களிலும் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.
- போதிய காரணங்களால் கேள்விகளை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் செயலாளருக்கு உண்டு.

சாவகச்சேரி பிரதேசசபை,
கொடிகாமம். (சி-10623)

செயலாளர்,
சாவகச்சேரி பிரதேசசபை,
கொடிகாமம்.

# ஆசிய வங்கி நிதி உதவியில் அமைக்கப்பட்ட

# பொது நோக்கு மண்டபம், பாலம், மதகுகள் கையளிப்பு



த.பு.கழக நிறைவேற்றுப் பணிப்பாளர் கே.பி. றெஜி அவர்கள் நாடாவை வெட்டித் திறந்துவைக்கிறார்.

(அலுவலக செய்தியாளர்)

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினால் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் நிகொட் கருத்திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் சமூக அபிவிருத்தித் திட்டத்தில் பாரதிபுரம் கிராம சேவையாளர் பிரிவில் அமைக்கப்பெற்ற பொது நோக்கு மண்டபம், பாலம், மதகுகள் மற்றும் புனரமைக்கப்பெற்ற 4.6 கிலோ மீற்றர் நீளமான கிராமிய வீதிகள் என்பன கையளிக்கும் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பொதுச்சுடர் ஏற்றலைத் தொடர்ந்து பொது நோக்கு மண்டபத்தினை தமிழர் புனர்வாழ்வுக்கழக நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜே.பி. றெஜி நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

சமூக பொருளாதார அபிவிருத்திச் செலயகத்தினை நிகொட் திட்டப் பிரதிப் பணிப்பாளர் பிரதிப் பணிப்பாளர், கிராம சேவையாளர், பாரதிபுரம் மகாவித்தியாலய அதிபர் ஆகியோர் நிகழ்த்தினர். கௌரவ விருந்தினர் உரையினை கிளி. மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் நிகழ்த்தினார். தொடர்ந்து முதன்மை விருந்தினர் உரையினை தமிழர் புனர்வாழ்வுக் கழக நிறைவேற்றுப் பணிப்பாளர் நிகழ்த்தினார். அவர் தமது உரையில், தமிழர் புனர்வாழ்வுக்கழகம் வடக்கு-கிழக்கின் எட்டு மாவட்டங்களிலுமுள்ள 25 கிராமங்களில் சமூக அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொண்டு வருகின்றது. எமது மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய வகையில் திட்டங்களைச் செயற்படுத்த வேண்டிய பாரிய பொறுப்பு எமக்குண்டு. எமது மக்களை சமூகப் பொறுப்புள்ளவர்களாக உருவாக்க வேண்டும். எனவே, நாம் நிகொட் திறந்து வைத்தார். மற்றும் கிராம சேவையாளர் அலுவலகத்தினை தமிழர் புனர்வாழ்வுக்கழக நிகொட் திட்டப் பணிப்பாளர் சி. சுடர் திறந்து வைத்தார். அடுத்து கிராம மாலை நேர கல்விச் சிறார்களினால் வரவேற்பு நடனம் இடம் பெற்றது.

தொடர்ந்து தலைமையுரையினை கிளிநொச்சி மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழக நிகொட் இணைப்பாளர் நிகழ்த்தினார். சிறப்பு விருந்தினர் உரையினை நிகொட் திட்ட வேலைத் திட்டங்களில் பங்காளி நிறுவனமாக மட்டும் நின்றுவிடாது பங்களிப்புடனும் செயற்பட்டு வருகின்றோம். இன்று பொது மண்டபத் திறப்பு விழாவையும் கையளிப்பு நிகழ்வையும் முன்னெடுப்பதில் பெருமையடைகின்றோம் எனவும் குறிப்பிட்டார். தொடர்ந்து இடம்பெற்ற கையளிப்பு நிகழ்வில் பொது மண்டபத்திற்கான சான்றிதழை தமிழர் புனர்வாழ்வுக்கழக கிளிநொச்சி மாவட்டப் பணிப்பாளர் வ. றீகன் புனரமைக்கப்பட்ட வீதிகளுக்குரிய சான்றிதழை நிகொட் திட்டப் பொறியியலாளர், அமைக்கப்பெற்ற பாலம், மதகுகளுக்குக்குரிய சான்றிதழை தமிழர் புனர்வாழ்வுக்கழக நிகொட் திட்டப் பணிப்பாளர் ஆகியோர் பிரதேசசபை சார்பில்கிராம சேவையாளரிடம்கையளித்தனர்.தொடர்ந்துமாலை நேரக் கல்விச் சிறார்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (சோ)

# வட்டக்கச்சி - சில்வா வீதியில் வீடு தீப்பிடித்து எரிந்தது



(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி - சில்வா வீதிப் பகுதியில் நேற்று வீடொன்று தீப்பற்றி எரிந்துள்ளது. வீட்டில் எவரும் இல்லாத வேளை இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

யோகலிங்கம் கெங்காதரம் என்பவரது வீடே எரிந்துள்ளது. உரிமையாளர் தனது மகனை பாடசாலையில் இருந்து வீட்டுக்கு ஏற்றிக்கொண்டு வந்த வேளை வீட்டினுள் இருந்து புகை மண்டலம் வெளியே வந்ததாகவும் உடனே உரிமையாளர் வீட்டின் கதவை திறந்தவேளை வீட்டின் சூரியமின்கலத்தில் இருந்த அறை தீப்பற்றி கொண்டிருந்ததைக் கண்ட உரிமையாளர் கூக்குரல் இட்டபோது அயலவர்களும், வீதியால் சென்றவர்களும் ஓடி வந்து வீட்டின் தீயை அணைத்தனர். வீட்டினுள் பொருத்தப்பட்டிருந்த சூரிய மின்கலத்தில் எல்லாப் பகுதிகளும் மற்றும் தங்க நகைகள், உடுபுடவைகள்,அலுமாரிகள் எனப் பல பொருட்கள் எரிந்துள்ளன. ஒன்றரை இலட்சம் ரூபாய்க்கு மேல் நஷ்டம் ஏற்பட்டதாகவும் இச்சம்பவம் சூரிய மின்கலத்தினாலேயே இடம்பெற்று இருக்கலாம் என வீட்டு உரிமையாளர் கூறியுள்ளார். (12)

# மாவீரர் தினத்தை உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்க கிளி.இல் கலந்துரையாடல்

(அலுவலக செய்தியாளர்)

தமிழீழ மாவீரர் நாள் நிகழ்வுகள் தொடர்பாக கிளி. மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் காண்டீபன் தலைமையில் பிரதேச ரீதியாக விசேட கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன.

மாவீரர் தினத்தினை உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்கும் வகையில் ஏற்பாடுகளை மேற்கொள்ளும் பொருட்டு மேற்படி கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன.

மாவீரரின்பெற்றோர்களைகௌரவித்தல், மாவீரர் நினைவுப் பந்தல்கள், பதாகைகள், வளைவுகள் அமைத்தல், சிரமதானப் பணிகள் மேற்கொள்ளல், வீதிகள் இருமருங்கும் அலங்கரித்தல் போன்ற நடவடிக்கைகள் மிகவும் சிறப்பான முறையில் மேற்கொள்ளும் பொருட்டு பொது அமைப்புக்கள், கூட்டுறவு மற்றும் அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள், கிராம பொது அமைப்புக்கள், விளையாட்டுக்கழகங்கள், நிர்வாக ரீதியாகக் கூடி மேற்கொண்டு வருகின்றன.

நேற்றுப் பகல் 10.30 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட அரசியல் துறைச் செயலக மண்டபத்தில் கிளி. மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் காண்டீபன் தலைமையில் நடைபெற்ற விசேட கலந்துரையாடலில் தமிழீழ அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் சோ. தங்கன், கேணல் தீபன், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் கரிகாலன் ஆகியோர் கலந்து சிறப்புரை நிகழ்த்தினர்.

இந்நிகழ்வில் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் மற்றும் விடுதலைப்புலிகளின் நிறுவனங்களின் பொறுப்பாளர் ஆகியோர் கலந்து கொண்டனர். தொடர்ந்து மேற்படி கலந்துரையாடல்கள் விசுவமடு, பளை, முழங்காவில், அக்கராயன் வட்டக்கச்சிப் பிரதேசங்களிலும் நடைபெறவுள்ளன. (சோ)

# திருடனைப் பிடித்து பொருட்களை மீட்டுக் கொடுத்த கலாச்சாரத்தைப் பேணும் இளைஞர் குழு

(நல்லூர்)

இறுவெட்டு இயக்கும் கருவியை (cd player)திருடியவரைக் கைது செய்த கலாச்சாரத்தைப் பேணும் இளைஞர்கள் உரியவரிடம் இருந்து களவெடுத்த ஆறு ஈருருளிகளையும் மீட்டெடுத்துள்ளனர்.

மருதனார் மடம் பகுதியில் உள்ள தேநீர் கடையில் இருந்த இக்கருவி திருட்டுப் போனமை சம்பந்தமாக உடுவில் பிரதேச கலாச்சாரத்தைப் பேணும் இளைஞர்களிடம் முறையிடப்பட்டிருந்தது.

இதனைத் தொடர்ந்து குறிப்பிட்ட கலாச்சாரத்தைப் பேணும் இளைஞர்கள் மேற்கொண்ட விசாரணையின் அடிப்படையில் ஒருவர் பிடிக்கப்பட்டு அவரிடமிருந்து உரிய இறுவெட்டு இயக்கும் கருவியும் மீட்டெடுக்கப்பட்டது.

தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் தன்னால் களவாக எடுக்கப்பட்ட ஆறு ஈருருளிகள் பற்றிய விபரங்களை வெளியிட்டதுடன் அதனை விற்ற இடங்களையும் காட்டினார்.

உரிய ஈருருளிகள் மீட்கப்பட்டு ஈருருளிகளை களவு கொடுத்தவர்களிடம் கையளித்த கலாச்சாரத்தைப் பேணும் இளைஞர்கள் உரியவரைக் கடுமையாக எச்சரித்தும் விடுத்துள்ளனர். (41)


EXPERIENCED ENGLISH TEACHERS WANTED
KILINOCHCHI

The English language college in kilinochchi seeks experienced English teachers to:
* Train local teachers (in school curriculum, grades 3-11)
* teach advanced English

**Requirements**:
* minimum 5 years experience in teaching English to children and adults
* Excellent spoken and written English

please send details of qualifications and experience to:

The principal,
English language college
tamils Rehabilitation Organisation
Jaffna Road, kilinochchi

**Applications close 29.11.2004**
The English language college is an initiative of the tamils Rehabilitation Organisation

(சி.10698)


# காது,மூக்கு,தொண்டை நோய்களிற்கான விசேட சிகிச்சை

வெளிநாட்டிலிருந்து வருகை தந்திருக்கும் காது,மூக்கு, தொண்டை சிகிச்சை நிபுணர் றொபேட்பெஞ்சமின் அவர்களால் காது,மூக்கு, தொண்டை சம்பந்தப்பட்ட நோய்களிற்கான ஆலோசனைகளும், சிகிச்சைகளும் புதுக்குடியிருப்பிலுள்ள டாக்டர் பொன்னம்பலம் வைத்தியசாலையில் நாளை காலை 8.00 மணி தொடக்கம் பிற்பகல் 1.00 மணி வரை வழங்கப்படவுள்ளது.

இதில் பயன் பெறவிரும்புவோர் குறிப்பிட்ட நேரத்திற்குள் வைத்தியசாலைக்கு சமூகமளிக்குமாறு டாக்டர் பொன்னம்பலம் வைத்தியசாலை பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

# தவறிழைப்போர் அனைவரும் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவர்

## -சனாதிபதி அறிவிப்பு

(கொழும்பு)

தவறிழைக்கும் அரசியல் வாதிகள் உட்பட அனைவரும் கட்சி அல்லது அந்தஸ்த்தை பொருட்படுத்துமாறு சட்டத்தின்முன் நிறுத்தப்படுவார்களென சனாதிபதி தெரிவித்துள்ளார்.

நாட்டை அபிவிருத்திப் பாதையில் இட்டுச்செல்கின்ற வேளை அதற்கு இடையூறு செய்பவர்களை நீக்குவதற்கு நான் ஒரு போதும் தயங்க மாட்டேன் என அவர் எச்சரித்துள்ளார். நாவலப்பிட்டி தேர்தல் தொகுதியில் அபிவிருத்தித்திட்டங்கள் பலவற்றை ஆரம்பித்துவைத்து உரையாற்றிய வேளை அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

# ரோகித போகுல்லாகம ஆளுங்கட்சிக்குத் தாவல்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரோகித போகுல்லாகம உயர் தொழில் நுட்ப மற்றும், தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தித் துறை அமைச்சராக நேற்று சனாதிபதி சந்திரிக்கா முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து கொண்டுள்ளார்.

இவர் ஐ.தே.கட்சியின் சிரேஷ்ட தலைவர்களில் ஒருவராவர். இவர் ஐ.தே. முன்னணி அரசியல் கைத்தொழில் அபிவிருத்திக்கான அமைச்சரவை அந்தஸ்து இல்லாத அமைச்சராக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வரவேற்பு ஊர்வலமும் நூல் வெளியீடும்

(அலுவலக செய்தியாளர்)

சைவ சமய துறவிகளின் வரவேற்பு ஊர்வலமும் "யோகர் சுவாமிகளும் கிளிநொச்சியும்" என்ற நூல் வெளியீட்டு விழாவும் இன்று நடைபெறவுள்ளது.

இன்று காலை 9.00 மணிக்கு கிளிநொச்சி கந்தசுவாமி கோவில் முன்றலில் இருந்து ஊர்வலம் ஆரம்பமாகி பிரதான வீதி வழியாக பண்பாட்டு மண்டபத்தை வந்தடைந்தவுடன் அங்கு சைவ சமய துறவிகளின் ஆசியுரையும் நூல்வெளியீட்டு நிகழ்வும் இடம் பெறவுள்ளது.

மகாதேவ ஆச்சிரம சுவாமிகள், கொழும்பு இராமகிருஸ்ணமிசன் சுவாமிகள், நல்லை ஆதின முதல்வர், யாழ். பல்கலைக்கழக பீடாதிபதிகள், பேராசிரியர்கள், இந்து கலாச்கார அமைச்சு உதவிப் பணிப்பாளர், மாவட்ட நீதிபதி ஆகியோர் கலந்து கொள்ளவுள் ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# பளைப்பகுதியில் வயிற்றோட்டம் பரவுகிறது

## சுகாதாரப் பழக்கவழக்கங்களுக்கு வலியுறுத்து

பளைப்பகுதியில் வயிற்றோட்ட நோயின்பரவுதல் அவதானிக்கப்பட்டுள்ளதால் பளைப்பகுதி மக்கள் சுகாதார நடவடிக்கைகளைக் கைக்கொள்ளுவதில் தீவிர கவனம் செலுத்தும்படி அறிவுறுத்தப்படுகின்றனர்.

கடந்த 28 நாட்களில் 37 பேருக்கு வயிற்றோட்டம் ஏற்பட்டுள்ளதாக பளை வைத்தியசாலையின் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. இதனையடுத்து நோய்க் கட்டுப்பாட்டிற்கும், நோய்த்தடுப்பிற்குமான நடவடிக்கைகளை சுகாதாரத் திணைக்களம் தீவிரமாக முன்னெடுத்து வருகின்றது.

கொதித்தாறிய நீரைப் பருகுமாறும் தனிநபர் சுகாதாரத்தை தீவிரமாகக் கடைப்பிடிக்குமாறு மலம் கழிப்பதற்குமுடிந்த அளவிற்கு மலசலகூடத்தைப் பாவிக்குமாறும் திறந்த வெளியில் மலங்கழிக்க நேரின் குழி வெட்டிப்புதைக்குமாறும் பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றனர்.

மழைக்காலம் ஆரம்பமாகியுள்ளதால் நுளம்புப் பெருக்கம் குடிநீர் அசுத்தமடைதல் போன்றவற்றிற்கு அதிகம் வாய்ப்புள்ளது. இவற்றைத் தடுக்கவும், இதன் விளைவாக ஏற்படும் மலேரியா, டெங்கு, வயிற்றோட்டம், நெருப்புக்காய்ச்சல் போன்ற நோய்களில் இருந்து பாதுகாத்துக்கொள்ளவும், சுகாதாரப் பழக்கங்களைக் கைக்கொள்ளும்படியும், கொதித்தாறிய நீரைப்பருகும்படியும், கிளிநொச்சி மாவட்ட பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவுறுத்துகின்றார்.

# நலன்புரி நிலையங்களில் புதிதாக மக்களைப் பதிய கிராம அலுவலர்கள் மறுப்பு

## நலன்புரி நிலையங்களின் சமாச செயலர்கள் புகார்

(நல்லூர்)

பிரிவுகளில் இடம்பெயர்ந்து தனியார் காணிகளில் தற்காலிக கொட்டில் அமைத்து வாழும் சில குடும்பங்களை நலன்புரி நிலையங்களில் பதிய முடியாதென கிராம அலுவலர்கள் மறுத்து வருவதாக நலன்புரி நிலையங்களின் சமாச பிரதேச செயலாளர்கள், அரசாங்க அதிபர் கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளனர்.

சுமார் பதினைந்து வருடங்களுக்கு மேலாக சொந்த இடங்களை இழந்து அகதி வாழ்வு வாழும் இம் மக்களுக்கு நலன்புரி நிலையங்களில் தங்கி வாழும் மக்களுக்குக் கிடைக்க வேண்டிய உதவிகளை வழங்க அதிகாரிகள் மறுத்து வருவதாகவும் தெரிவிக்கின்றனர்.

இடம்பெயர்ந்த மக்களில் ஒரு பகுதியினர் இத்தகைய அலுவலகங்களின் நடவடிக்கையினால் இடம்பெயர்ந்த மக்கள் மேலும் துன்பங்களுக்கும் உள்ளாக்கப்பட்டு வருவதாகவும் உரிய அதிகாரிகள் இவ் விடயத்தில் கூடிய கவனம் எடுத்து இடம்பெயர்ந்த மக்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்ய வேண்டும் என யாழ்.மாவட்ட இடம்பெயர்ந்தோர் நலன்புரிச்சங்கத் தலைவர் ந.கணேசு உரிய அதிகாரிகளை வேண்டியுள்ளார். (41)

சண்டிலிப்பாய், தெல்லிப்பழை, சங்கானை பிரதேச செயலாளர்

# கண்டெடுப்பு

(அலுவலக செய்தியாளர்)

கடந்த 15.08.2004 அன்று மடுத் தேவாலயத் திருநாள் நிகழ்வின் போது ஆலயத்தின் சுற்றுப்புறங்களில் அடம்பன் காவல் துறையினரால் சிறுதொகைப் பணம், அடையாள அட்டைகள், மணிபேஸ்க்ள், கையடக்கத் தொலைபேசி என்பன கண்டெடுக்கப்பட்டு மன்னார் நீதி மன்றில் பாரப்படுத்தப்பட்டுள்ளது. இப் பொருட்களுக்குரியவர்கள் தகுந்த ஆதாரங்களுடன் வந்து பெற்றுக் கொள்ளுமாறு மன்னார். நீதி மன்ற பதிவாளர் கேட்டுள்ளார். (தீ)

# இணையத்தளத்தில் புலிகளின்குரல்

தமிழீழ தேசியக் குரலாக ஒலித்துவரும் புலிகளின் குரல் வானொலி 21.11.2004 இல் 14 ஆண்டுகால சேவையை நிறைவுசெய்து 15ஆம் ஆண்டில் காலடி வைக்கிறது. 14 ஆண்டுகளாக தாயக வானலைகளில், சவால்களுக்கு மத்தியில் ஒலித்துவரும் புலிகளின்குரல் வானொலி புதிய ஆண்டில் இணையத்தளத்திலும் வலம் வரவுள்ளது. WWW.Pulikalinkural.Com என்ற இணையத்தள முகவரி ஊடாக புலிகளின் குரலைக் கேட்கலாம் என்பதை மகிழ்வுடன் அறியத்தருகின்றனர்.

# ரிஸாத் பதியுதீனுக்கெதிராக புத்தளத்தில் ஆர்ப்பாட்டம்

வன்னி மாவட்ட அபிவிருத்தி அமைச்சரும் முஸ்லிம் காங்கிரசின் மாற்றுக் குழு ஊறுப்பினருமான ரிஸாத் பதியுதீனிற்கு எதிராக நேற்று புத்தளத்தில் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டுள்ளது. வடக்கில் இருந்து இடம் பெயர்ந்து அகதி முகாம்களில் வாழும் மக்களினால் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் அவருக்கெதிரான பல கோசங்கள் எழுப்பப்பட்டதாக தொவிக்கப்பட்டுள்ளது.பதியுதீனின் கொடும்பாவியும் ஆர்ப்பாட்டக்காரர்களால் எரிக்கப்பட்டது.

# இராணுவ புலனாய்வாளர் இருவர் பொலநறுவையில் சுட்டுக் கொலை

(கொழும்பு)

பொலநறுவை தொடரூந்து நிலையத்திற்கு அருகாமையில் நேற்றுப் பிற்பகல் இராணுவப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த இருவர் இனந் தெரியாத நபர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். இவர்கள் இருவரும் உந்துருளியில் பயணம் செய்து கொண்டிருந்த சமயம் முஸ்லிம் குடியிருப்புக்குச் செல்லும் வீதியில் வைத்து இத்துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தில் ஒருவர் சம்பவ இடத்தில் கொல்லப்பட்டுள்ளார். அடுத்தவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் மரணமடைந்துள்ளார்

கொல்லப்பட்டவர்களில் ஒருவர் இராணுவ புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த லான்ஸ் கோப்ரல் வி.ஆர்.தசாநாயக்கா (வசந்த) என்றும், அடுத்தவர் புலனாய்வுத்துறையினருக்கு தகவல் கொடுக்கும் இராஜசிங்கம் பிரபாகரன் என்றும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்

கொலையாளிகள் உந்துருளியில் தப்பிச் சென்றுள்ளதாக பொலிசாருக்கு கிடைத்த தகவலையடுத்து அப்பகுதியில் தேடுதலை மேற்கொண்ட பொலிசாரால் சந்தேகத்தின் பேரில் உந்துருளியொன்றுடன் இரண்டு தமிழ் இளைஞர்கள் முஸ்லிம் குடியிருப்பில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்படும்போது இவர்களிடம் ஆயுதங்கள் எதுவும் இருக்கவில்லை என பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# எனக்கெதிராக நடவடிக்கை எடுக்க சனாதிபதிக்கு அதிகாரம் கிடையாது

**ஜே.வி.பி. அமைச்சர் லால்காந்த**

(கொழும்பு)

எனக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு சனாதிபதிக்கு அதிகாரம் கிடையாது. எனக்கு அமைச்சர் பதவி ஜே.வி.பி அரசியல் பீடமே வழங்கி உள்ளது. சனாதிபதி சந்திரிகா எனக்கு அமைச்சர் பதவி வழங்கவில்லை ஆகவே எனக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு சந்திரிகாவுக்கு எந்த அதிகாரமும் கிடையாது. என ஜே.வி.பி அமைச்சர் லால்காந்த தெரிவித்துள்ளார்.

அரசாங்கக்கட்சியில் இருந்து .கொண்டு அரசுக்கு கெதிராக தொழிற்சங்க நடவடிக்கை எடுத்துக் கொண்டு இருப்பவர்களுக்கெதிராக நடவடிக்கை எடுக்கப் போவதாக சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்திருந்த எச்சரிக்கைக்குப் பதிலளிக்கை யிலேயே அமைச்சர் லால்காந்த இவ்வாறு தெரிவித் துள்ளார்.

என் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் ஜே.வி.பி அரசியல் உயர் பீடத்திற்கே உண்டு என்றும் கிராமிய அபிவிருத்தி கால் நடை அமைச்சர் லால்காந்த தெரிவித்துள்ளார்.

### வெளி...

மூலம் நாள் ஒன்றுக்கு 10 .இலட்சம் பேர் பயணம் செய்கின்றனர். இந்த நிலையில் முச்சக்கரவண்டி உரிமையாளர்களுக்கு இந்த வரவு செலவுத் திட்டத தின் மூலம் நிவாரணம் வழங்கப்படவுள்ளது.

பொது வாகனங்களைக் காட்டிலும் தனியார் வாகனங்கள் வீதிகளில் அதிகமாகக் காணப்படுவதன் காரணமாக தனியார் வாகனங்களுக்கான வரிமுறையில் திருத்தம் மேற்கொள்ளப்படவுள்ளது.

வெளிநாட்டு நேரடி முதலீடுகளை அதிகரிக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இலங்கையில் நூற்றுக்கு 8 வீத வளர்ச்சியை அடைவது கடினமானது. எனவே அடுத்த மூன்று ஆண்டுக்காலப்பகுதியில் 6 முதல் 7 வீத பொருளாதார வளச்சியை எதிாப்பாாக்கப்படுகிறது..

தொடரூந்து சேவை இலாபம் கருதிய சேவையாக மாற்றப்படவுள்ளது.

பெருந்தோட்டத் துறையில் பிரதேச அமைச்சுகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள 300 கோடிரூபா பாவில் சுமார் 90 கோடி ரூபாவை தோட்டத்துறையின் வீடமைப்பு, நீர் விநியோகம் மற்றும் மின்சார வசதிகள் செய்துகொடுக்கப்படவுள்ளன.

சமாதானத்தின் மூலமே நாட்டின் அபிவிருத்தியை முன்னெடுக்க முடியும் என்ற சனாதிபதியின் திட்டத்தின் கீழ் வடக்கு கிழக்கின் புனரமைப்பு மேற்கொள்ளப் படும் புனரமைப்பு அமைச்சின் ஊடாக வடக்கு கிழக்கு மாத்திரம் 50 கோடி ரூபா அரசாங்கத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது

வடக்கு கிழக்கு மற்றும் மலையகப் பகுதிகள் உட்பட தென்னிலங்கையின் 6 மாவட்டங்கள் வறுமை கொண்ட இடங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன

இந்த இடங்களின் மக்களுக்கு வேலைவாய்ப்புகளை அதிகரித்து வறுமையை ஒழிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவுள்ளது.

### அரச...

தெரிவித்துள்ளார்.

தற்போதுள்ள நிதித்தடைகளின் காரணமாகவே இவ்வாறு பிரித்துவழங்கப்படவுள்ளதாகத் தெரிவித்த அவர் இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபா அல்லது முன்மொழியப்பட்ட அதிகரிப்பிலே ஐம்பது சதவீதம் இவை இரண்டிலுமே எது ஆகக்கூடுதலான தொகையாக இருக்கிறதோ அந்தத் தொகையை வரும் டிசம்பர் மாதத்திலும், எஞ்சிய தொகையை இரண்டாயிரத்து ஆறாம் ஆண்டு சனவரி மாதத்திலும், வழங்குவதுதற்கான யோசனையை நிதியமைச்சர் கலாநிதி சரத்அமுனுகம சபையிலே முன்மொழிந்தார்.

இதேவேளை ஓய்வூதியக்காரர்களுக்கு அடிப்படை ஓய்வூதியத்தில் பதினைந்து சதவீதத்தினால் அதிகரிப்பு வழங்கப்படுமெனவும், மாதம் ஒன்றிற்கு ஆகக்குறைந்தது 750 ரூபாய் என்கின்ற அடிப்படையிலும் மாதம் ஒன்றிற்கு கூடுதலாக ஆயிரத்து ஐந்நூறு ரூபாய் என்ற அடிப்படையிலும் டிசெம்பரில் இருந்து ஒரு அதிகரிப்பை வழங்குவதற்கன யோசனையையும் நிதியமைச்சர் அவையிலே முன்மொழிந்தார்.

அத்தியாவசிய உணவுப்பொருட்களான அரிசி, பருப்பு, உருளை கிழங்கு, மிளகாய், பால்மா மற்றும் மரக்கறி போன்றவை தொடர்பிலான பெறுமதி சேர்த்த வரி 5 வீதமாக குறைக்கப்படவுள்ளது.

குளிர்பானங்கள் மீதான உற்பத்தி வரி 4 வீதத்தில் .இருந்து 6 வீதமாக உயர்கிறது . மதுபானம் போத்தல் ஒன்றுக்கு 15 ரூபாவால் உயரவுள்ளது. பியர் போத்தல் ஒன்றுக்கு 5 ரூபாவால் நேற்று இரவு முதல் அதிகரித்துள்ளது..

துறைமுக மற்றும் விமானக் கட்டடணங்கள் 1 முதல் 1.5 வீதத்தால் உயர்கின்றன் ஆடம்பரப் பொருட்களுக்கான வற் வரி 15 வீதத்தில் இருந்து 18 வீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. சூதாட்ட வரி 10,000 முதல் 25,000 ரூபாவால் அதிகரிக்கப்படடுள்ளன. கசினோ மீதான வரி 12 கோடி முதல் 5கோடி வரை அதிகரிக்கப்பட்டுள்ளது.

அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு 6 வீத அனுமான வருமானங்களுக்கு ஏற்ப 30 வீத வருமான வரி அறிவிடப்படவுள்ளது. இதில் வடக்கு கிழக்கில் பணியாற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு மனிதாபிமான ரீதியில் விலக்களிக்கப்படவுள்ளன.

வரி செலுத்துவோரின் குறைபாடுகளை தீர்க்க ஒமட்சுமன் ஒருவர் நியமிக்கபடவுள்ளார். 35 கோடி ரூபா செலவில் ஊவா மாகாணத்தில் பல்கலைக்கழகம் ஒன்று அமைக்கப்படவுள்ளது கிழக்கு மாகாண பல்கலைக் கழகத்துக்கு புதிய 5 கட்டடங்கள் கட்ட 8 கோடி ரூபாஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது போன்ற முன்மொழிவுகனை நீதியமைச்சர் சமர்ப்பித்துள்ளார்.

### அரச ஊழியர்களின்...

அரசஊழியர்களுக்கு விடுமுறையை கருத்திற்கொண்டு ஒரு நாளில் வேலை செய்யும் வேலை நேரத்தை 9 மணித்தியாலங்களாக அதிகரிக்கப்படவுள்ளன.

இந்த வேலை நேர அதிகரிப்பானது காலை அரை மணித்தியாலங்களாகவும் மாலையில் அரை மணித்தியாலங்களாகவும் அதிகரிக்கப்படவுள்ளன.

சேவையிலுள்ள காலத்தில் விடுமுறை எடுக்காத நாட்கள் கணக்கெடுக்கப்பட்டு ஓய்வுபெறும் போது ஊக்குவிப்புத் தொகையொன்றும் வழங்கப்படும்.

தற்போது அமுலிலுள்ள சம்பளத்துடனான 84 நாட்கள் பிரசவ லீவு மேலும் 84 நாட்கள் அரைச் சம்பளத்துடன் வழங்கப்படும்.

### போராளி...

இச்சம்பவம் அரசின் பூரண கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் நடைபெற்றுள்ளது.

எமது போராளிகளாகிய சேனாதிராஜா, பாவா, யோகா ஆகியோர் அரசியல் வேலைத்திட்டத்தை அரச கட்டுப்பாட்டு பிரதேசத்தில் மேற்கொண்டபோது இனந் தெரியாதவர்களினால் சுடப்பட்டு வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர்.

இச்சம்பவங்கள் பாதுகாப்பு படைத்தரப்பினரின் பூரண கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் நடைபெற்றுள்ளதால், தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அவர்களுக்கு அறிவுறுத்தியிருந்தோம்.

இது சம்பந்தமாக எவ்வித முன்னேற்றகரமான நடவடிக்கைகளும் அரச பாதுகாப்பு படைத்தரப்பினரால் மேற்கொள்ளப்படவில்லை என்பது நன்கு தெரிய வருகின்றது.

இச்சம்பவம் பற்றி இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிற்குத் தெரிவித்தோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 19 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.